PUBLIC LIBRARY
JAFFNA

# சமூக மஞ்சரி

(The Journal of Social Sciences)

(சமூக விஞ்ஞானச் சஞ்சிகை)

மலர் 1 | தை - ஆனி 1960. | இதழ் 1


★ ஆசியாவில் தேசிய வாதத்தின் மூலங்கள்

**கலாநிதி சி அரசரத்தினம்**

★ புவியியலும் மக்களும்

**பேராசிரியர் கா குலரத்தினம்**

★ புவிமேற்பரப்பின் பிரதான நிலவுறுப்புக்கள்

**சோ. செல்வநாயகம் அவர்கள்**

★ இலங்கை வங்கிகளின் தேசியமயமாக்கம்

**கலாநிதி எச். ஏ. டி. எஸ். குணசேகரா**

★ பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையும் எமது பொருளாதார வளர்ச்சியும்

**எஸ். இராசரத்தினம் அவர்கள்**

★ மனிதனும் அரசும்

**வண. பிதா. எஸ். ஜ பின்ரோ**

★ இலங்கை அரசியல் அமைப்பிலுள்ள சிறுபான்மையோரது காப்பீடுகள்

**கலாநிதி ஏ. ஜெ. வில்சன்**

★ மரண தண்டனை

**பேராசிரியர் த. நடராசா**


ஆசிரியர்

**அ. தவராஜன் பெனடிக்ட்**

இலங்கைப் பல்கலைக் கழகம்

பேராதனை.

விலை
ரூபாய்
ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மஞ்சரி.


**ஆசிரியர் :-**

அ. தவராஜன் பெனடிக்ற், (பொருளியல் மாணவன்)

**உதவி ஆசிரியர்கள் :-**

செல்வா. மனோகரன். (புவியியல் மாணவன்)
பொன். பூலோகசிங்கம். (தமிழ் மாணவன்)
துரை. சிவப்பிரகாசம். (பொருளியல் மாணவன்)
இரா. சுந்தரலிங்கம். (பொருளியல் மாணவன்)

**ஆசிரியர் குழு அங்கத்தவர்கள் :-**

சோ. செல்வநாயகம், (புவியியல் விரிவுரையாளர்)
எஸ். இராசரத்தினம், (பொருளியல் விரிவுரையாளர்)
இ. பானுதேவன், (கல்வித் துறை)
என். பாலகிருஷ்ணன், (பொருளியல் விரிவுரையாளர்)

**ஆலோசகர் குழு அங்கத்தவர்கள் :-**

பேராசிரியர். த. நடராசா - சட்டத்துறைப் பேராசிரியர். கலைப்பகுதி முதல்வர்.
பேராசிரியர். கே. குலரத்தினம் - புவியியல் துறைப் பேராசிரியர்,
கலாநிதி. சி. அரசரத்தினம் - வரலாற்று விரிவுரையாளர்.
கலாநிதி. எச். ஏ. டி. எஸ். குணசேகர - பொருளியல் விரிவுரையாளர்.
திரு. பசில் மென்டிஸ் - தத்துவ விரிவுரையாளர்.
திரு. வ. செல்வநாயகம் - தமிழ் விரிவுரையாளர்,
வண. சேவியர் தனிநாயக அடிகள் - கல்வித் துறை விரிவுரையாளர்.
கலாநிதி ஏ. ஜெ. வில்சன் - அரசியல் விரிவுரையாளர்.


# சமூக மஞ்சரி

With the Editor's Compliments

*

— சமூக விஞ்ஞானச் சஞ்சிகை —

வரலாறு, புவியியல், பொருளியல், அரசியல்
சட்டம், கல்வி, தத்துவம்.

*


ஆசிரியர் :

**அ. தவராஜன் பெனடிக்ற்,**

மார்ஸ் மண்டபம்,
இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IF IT IS SCREENED IN

# CEYLON THEATRES CIRCUIT

## IT IS WORTH SEEING AGAIN AND AGAIN

THIEF OF BAGDAD with M. G. Ramachandran, Vyjanthimala

ATHISAYA PENN (Part Technicolor) with Vyjanthimala A. Nageswara Rao, Manohar, Mathuri Devi

KALIYANUKKU KALYANAM With S. S. Rajendran, Mynavathi Prem Nasir, Ragini, Thangavelu, M. N. Rajam

PARTHIBAN KANAVU with Gemini Ganeshan, Vyjayanthimala Ragini, Baliah, Kamala, Laxman

KUMARADEVAN with M. G. Ramachandran, Jamuna, Raja Sulochana, Kannamba

MAANAM KAATHA MANAIVI with M. G. Ramachandran, Anjali Devi, Kannamba

RAJA BAKTHI with Shivaji Ganeshan, Vyjayanthimala, Bhanumathi, Padmini, Nambiar, Balaih

THAAI MAGALUKKU KATTIYA THALI with M. G. Ramachandran, Jamuna, Kannamba, Raja Sulochana

BAHVANI with M. G. Ramachandran, Bhanumathi, S. S. Rajendran

DEIVAME THUNAI with Padmini, A. Nageswara Rao, M. N. Nambiar, V. R. Rajagopal, Gopi Krishna

NALLA THEERPU with Gemini Ganeshan, Jamuna, M.N.Rajam, Kannamba

KALAI VANAN with A. Nageswara Rao, Raja Sulochana, Anjali, Devi, K. Thangavelu

KALAI ARASI with M. G. Ramachandran, Bhanumathi, Veerappa, Saroja Devi

A. V. M's. SUMATHI with Shivaji Ganeshan, Padmini, S. S. Rajendran, M. N. Rajam and several more . . . .

The above are a few of the large number of TAMIL films booked for screening in Ceylon Theatres Circuit during the next few months.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOR

FINE

**RECEPTION**

EXTRA

POWER

USE

**EVEREADY**

TRADE-MARKS

**MINI-MAX**

**RADIO BATTERIES**

**PLAY BETTER AT LESS EXPENSE**

Select your

Sports Equipment

from

**Diana & Co. Ltd.**

*24, WARD STREET,*

**KANDY**

*Telephone:* 573

## THE LOGANATHAN PLAN

*(DEVELOPMENT SAVINGS BANK)*

Revised **SECOND EDITION** just published—
a book of over 150 pages - **Rs. 5-50 per copy.**

*Special terms to the trade.*

APPLICATIONS MAY BE MADE TO THE FOLLOWING :—

1. Ceylonese National Council of the International Chamber of Commerce.
   P. O. Box 1427, Colombo. Tel. 5271.
2. Rotary Club of Colombo, 4th Floor, Bank of Ceylon Building, York Street, Colombo. Tele. 2950.
3. National Council for Child and Youth Welfare (Ceylon) 3rd Floor, Bank of Ceylon Building, York Street, Colombo. Tel, 6941.



original Wulfing German product

**The Ideal Tonic Food for Nervous Exhaustion and Bodily Weakness.**

**SANATOGEN**

HEALTH · VIGOUR · ENERGY

NOW

***FORTIFIED WITH 5 VITAMINS.***

OBTAINABLE EVERYWHERE.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# So fresh, so delicious!

Maliban Cheesebits are everyone's favourite because they are an unfailing delight, Children, of course, love it always and at any time. Grown ups call for them at tea-time and with drinks soft or strong The whole range of Maliban buiscuits are the nation's favourites because they come oven-fresh to your table and are so delicious. Decide today to get.




*Maliban*

**BISCUITS**

They are better because they're **FRESHER**

*When you are in Jaffna*

*Shop at*

**The Jaffna Co-op. Stores Ltd.**

(Estd. 1918)

**420, HOSPITAL ROAD, JAFFNA**

*T'phones:* 438,537 & 370

*T'grams:* 'LAKSHMI'

*For Quality goods Moderate prices and Efficient Service.*


# பொருளடக்கம்

பக்கம்


இலங்கைப் பல்கலைக்கழகத்துத் துணைவேந்தர்
வழங்கிய ஆசிமொழிகள் ... 2

முகவுரை—பேராசிரியர். க. கணபதிப்பிள்ளை ... 3

தமிழ்ப் பெரியார் தரும் நல்லாசிகள் ... 4

சமர்ப்பணம் — ஆசிரியவுரை ... 5

ஆசியாவில் தேசிய வாதத்தின் மூலங்கள் ... 7
கலாநிதி. சி. அரசரத்தினம்

புவியியலும் மக்களும், ... 15
பேராசிரியர் கா. குலரத்தினம்

புவிமேற்பரப்பின் பிரதான நிலவுறுப்புக்கள் ... 22
சோ. செல்வநாயகம்

இலங்கை வங்கிகளின் தேசியமயமாக்கம் ... 27
கலாநிதி H. A. de S. குணசேகரா

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையும்
எமது பொருளாதார வளர்ச்சியும் ... 37
S. இராசரத்தினம்

மனிதனும் அரசும் ... 49
வண. பிதா. S. I. பின்ரோ

இலங்கை அரசியலமைப்பிலுள்ள
சிறுபான்மையோரது காப்பீடுகள் ... 52
கலாநிதி ஏ. ஜெ. வில்சன்

மரண தண்டனை ... 80
பேராசிரியர் த. நடராஜா

நன்றியுரை ... 107

அடுத்த இதழில் (கடைசி உட்புற அட்டை)


நாம் ஈடுபட்டுள்ள துறைகளில் அக்கறையும் ஆர்வமும் உடைய பெரியோர்களையும், நண்பர்களையும் எம்முடன் தொடர்புகொள்ளும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பல்கலைக் கழகத்துத் துணைவேந்தர்

வழங்கியுள்ள

# ஆசிமொழிகள்.

இந்தச் சமூக விஞ்ஞானச் சஞ்சிகை, இப்பல்கலைக் கழகத்து மாணவர் சிலரது ஊக்கத்தின் விளைவாக வெளிவருகின்றது. இதிலுள்ள கட்டுரைகள் யாவும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களாலும் விரிவுரையாளர்களாலும் எழுதப் பட்டனவென நான் அறிகின்றேன். இத்தகைய தொரு சஞ்சிகை தமிழில் வெளிவருவது இதுவே முதல் தடவை. அடுத்து வரும் இதழ்களில் மாணவர்களும் கட்டுரைகள் எழுதுவார்களென எதிர்பார்க்கின்றேன். இம்முயற்சி வெற்றியெய்த வேண்டுமென்றும், சமூக விஞ்ஞானங்களிலீடுபாடுள்ள மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்பட வேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்.

(ஒப்பம்) **என் ஆட்டிகல்ல,**
(துணைவேந்தர்)

இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை. 27-10-59.

இலங்கைப் பல்கலைக் கழகத்துக் கீழைத்தேய மொழிகளின் பிரிவு முதல்வரும், தமிழ்த் துறைத் தலைவருமாகிய

**பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள்**

அளித்த

# — முகவுரை —

சமூகக் கலைகளைப் பற்றித் தமிழில் சஞ்சிகை ஒன்று இல்லாத குறையைத் தீர்க்கும் நோக்கமாகச் சமூக மஞ்சரி வெளிவருகின்றது. பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர் தமிழில் கல்விகற்க வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுவிட்டது. இக்கல்விக்குரிய சில துறைகளிலாவது பேரறிஞரைக் கொண்டு கட்டுரைகள் எழுதித் தமிழ் பேசும் மக்களுக்கு அவற்றைப் பயன்படச் செய்வதற்கு இச் சமூக மஞ்சரி பெரிதும் துணை செய்யும். முதலாம் இதழில் வெளிவரும் கட்டுரைகள் இம்மஞ்சரியின் தரத்தை எடுத்துக்காட்டும்.

பேராதனைப் பல்கலைக் கழகத்து மாணவரின் முயற்சியினால் இம்மஞ்சரி வெளிவருகின்றது. அவர்களின் முயற்சியையும் உற்சாகத்தையும் பாராட்டுகின்றோம். அடுத்துவரும் இதழ்களும் தரத்தில் உயர்ந்தனவாய்த் தமிழ்பேசும் மக்களுக்குப் பயன்படக் கூடியனவாய் அமையும் என நம்புகிறோம்.

தமிழ்பேசும் மக்கள் இம்மஞ்சரியை ஆதரித்து வளர்ப்பார்களாக. சமூக மஞ்சரி நீண்டகாலம் வாழ்ந்து, தமிழ்த்தொண்டு செய்வதாக.

**க. கணபதிப்பிள்ளை**

இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை. 11. 11. 59.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெரியார் தரும் நல்லாசிகள்

அன்புடையீர்,

தாங்கள் தொடங்கும் சமூக மஞ்சரி, நல்ல கட்டுரைகள் பல கொண்டு, அறிவுக்கு விருந்தாக விளங்குவதாக. தங்கள் முயற்சி வெல்க.

பச்சையப்பன் கல்லூரி, (ஒப்பம்) மு. வரதராசன்
சென்னை. 4. 10. 59. தமிழ்த் துறைத் தலைவர்

அன்புடையீர்,

சமூக மஞ்சரி என்ற சஞ்சிகையைத் தொடங்க முற்பட்டுள்ளதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். தொடங்குவது எளிது, தொடர்ந்து நடத்துவதில் பல இடையூறுகள் தோன்றும். அவற்றைச் சமாளித்து வெற்றிபெறுவதே சிறப்புடைத்தாகும். முயற்சிக்கு என்றும் பலன் உண்டு. தளராத முயற்சி தோல்வியடைவதில்லை. அவ்வித முயற்சியும், எடுத்த பணியில் சீரிய வெற்றியும் கிடைக்க வேண்டுமென வாழ்த்துகிறேன். வெற்றி, வெற்றி.

தமிழ் வளர்ச்சிக் கழகம், (ஒப்பம்) பெ. தூரன்
சென்னை. 6. 10. 59.

கவின்கலை, அறிவியற் கலை, என்பனபோலச் சமூகக் கலையும் மக்களின் நல்வாழ்வுக்கு இன்றியமையாததே. தனிவாழ்வு, குடும்ப வாழ்வு, சமூக வாழ்வு எனும் இவை மூன்றும் ஒன்றினால் ஒன்று நிறைவெய்துபவை. இம்மூன்றும் இசைந்து சிறந்தால் நாட்டு வாழ்வு செம்மைப்படும்.

தமிழ் மறை எனப் போற்றப்படும் திருக்குறள் தனிவாழ்வையும், குடும்ப வாழ்வையும் சமூக வாழ்வுடன் பிணைத்து விளக்குகிறது. மனிதனைச் ''சமுதாயப் பிராணி'' என்பர் இக்காலத்தறிஞர். ம... தன் சமூகத்துக்காகவே வாழல் வேண்டுமென்பதை வள்ளுவர் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அழுத்தம் திருத்தமாய் உரைத்துள்ளர். மக்கள் தமக்காகத், தம் குடும்பத்துக்காக மட்டும் வாழ்வதை விடுத்துச் சமூகத்துக்காகவும் வாழத்தொடங்கினால் இவ்வுலகிலுள்ள போட்டிகளும், பூசல்களும் மறைந்துவிடும். உலகத்தை உயர்த்துதற்கு இத்துறையிலே பணியாற்றுதல் இன்றியமையாதது.

இதனையுணர்ந்து இத்துறையிற் பணியாற்ற விழையும் உங்கள் முயற்சி திருவினையாக்குக. தமிழிலே சமூகக் கலைச் செல்வத்தைப் பெருக்க முயலும் உங்களுடைய பெரும்பணிக்குத் தமிழர்கள் யாவரும் ஆக்கமும், ஊக்கமும் நல்குவார்களாக.

அரச கரும மொழி அலுவற் பகுதி. (ஒப்பம்)
கொழும்பு. 5. 11. 59. கா. பொ. இரத்தினம்
தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர்


# சமூக மஞ்சரி

மலர் 1 தை - ஆனி 1960. இதழ் 1


## சமர்ப்பணம்

எண்ணற்ற காத தூரம் பரந்திருக்கும் பெருங்கடலைக் கிண்ணத்தால் இறைத்து விடுவேனென வீராப்புப் பேசிய சிறுவனின் கதை வேடிக்கையானதுதான். ஆனால் அதைவிட வேடிக்கையானது இக்காலத்து மாணவனின் நிலை. அரசாங்கத்தின் கல்வித்திட்டப்படி, 1960ஆம் ஆண்டு முதல், பல்கலைக்கழகத்திலும் தாய்மொழியே போதனாமொழியாகக் கொள்ளப்பட விருக்கின்றது. இனிமேல் மாணவர்கள் தத்தம் தாய்மொழியிலேயே கல்விகற்றுப் பட்டமும் பெறப்போகிறார்கள். இது எமக்கு மகிழ்வு தரும் செய்திதான். எனினும், இத்தகைய முயற்சி எத்துணை வெற்றியைத் தரலாம் என்பதனை ஆராய்ந்தால் நமது மகிழ்ச்சியெல்லாம் திகிலாக மாறிவிடுகிறது. நமது தாய்மொழியில் கல்விக்கான உயர்தர நூல்கள் இன்னமும் இயற்றப்படாமையே இதற்குக் காரணமாம். இப்பொழுது வெளியாகியுள்ள இரண்டொரு நூல்களின் வாயிலாக அவ்வத்துறைகளில் உயர்நிலை பெற நினைப்பது, சிறு கிண்ணமொன்றின் துணைகொண்டு பெருங்கடலை இறைத்து விட முயற்சிப்பதற்குச் சமானமெனலாம்.

ஒரு மொழி போதனா மொழியாகச் சிறக்க வேண்டுமாயின் அம்மொழியகத்தில் இலக்கியங்கள் பெருகினால் மட்டும் போதாது. அந்த மொழியின் மூலம் சாத்திரங்கள் பலவற்றையும் கற்க இயலவேண்டும். ''இறவாத புகழுடைய சாத்திரங்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்'' எனக் கவிஞர் குரல் கொடுத்தனரேயன்றி, அக்குரலுக்குச் செவிமடுத்தார் எம்மவரில் மிகச்சிலரே. உயர்ந்த கல்விக்குரிய நூல்கள் தமிழ்மொழியில் இல்லாதிருப்பது இன்று பெருங்குறையாக உள்ளது. இக்குறையைச் சிறிதளவேனும் நிவிர்த்தி செய்யும் முகமாகவே இச்சஞ்சிகையை வெளியிடுகிறோம்.

விஞ்ஞானங்கள் பலவற்றையும் ஒரே சஞ்சிகையுள் அடக்குவது அரிது. எனவே, விஞ்ஞானங்களைச் சமூக விஞ்ஞானம், இயற்கை விஞ்ஞானம் என இருகூறுபடப்பிரித்து, அவற்றில் முன்னதனைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய பகுதிகளைத் தமிழில் வளர்ப்பதையே எமது நோக்கமாகக் கொண்டுள்ளோம். மற்றதனை வளர்க்குந் திறம்படைத்த வல்லுனர்கள் விரைவில் முன்வருவார்கள் என நம்புகிறோம்.

"புத்தம் புதிய கலைகள் — பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்தவளருது மேற்கே — அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை" என்ற பாரதியின் தாகத்தைச் சாந்திப்படுத்தும் காலம் இனிமேலாவது பிறக்க வேண்டும்.

"சமூக மஞ்சரி" சமூக விஞ்ஞானங்களைத் தமிழில் வளர்க்க முயலும். சமூகம் என்பது மக்கள் கூட்டம். மனிதனை, இந்தச் சமூகத்தின் அங்கமாகக் கொண்டு அவனது நடவடிக்கைகளை விஞ்ஞானரீதியில் ஆராய்வன சமூக விஞ்ஞானங்கள். இவற்றுள், வரலாறு, புவியியல், பொருளியல், அரசியல், சமூகவியல் போன்றனவும் மற்றும் சட்டம், கல்வி, தத்துவம் போன்ற துறைகளும், அடங்கும். இத்துறைகள்பால் தமிழனிற்கு இதுவரை அற்றிருந்த உரிமையை இனிமேல் நிலைநாட்டுவதே இச்சஞ்சிகையின் நோக்கமாகும்.

சமூக மஞ்சரியின் முதலாவது இதழைத் தமிழ் பேசும் நல்லுலகின்முன் சமர்ப்பிக்கின்றோம். வருடத்திற்கிருமுறை மேலும் இதழ்களை வெளியிடத் திட்டமிட்டிருக்கின்றோம். சகலரும் இந்தச் சஞ்சிகையை அன்போடு வரவேற்று ஆதரிப்பார்கள் என நம்புகின்றோம். அத்தோடு இதில் நாம்விட்ட குறைகளையும் சுட்டிக் காட்டிப், புதுத் திட்டங்களையும் வகுத்துத் தருமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

இம் முதலாம் இதழுள் வெளியாகும் கட்டுரைகள் யாவும், இத்துறைகளில் ஆர்வமுள்ள மாணவர்களுக்கும், ஏனையோர்களுக்கும், பயன்படும் என்று எதிர்பார்க்கிறோம். சமூகத்தில் வாழும் ஒவ்வொருவனுக்கும் சமூக விஞ்ஞான அறிவு எங்ஙனம் இன்றியமையாததோ, அதேபோன்று சமூக மஞ்சரியும் இன்றியமையாததாக வமையும் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு.

இறுதியாக, எமது தமிழ்நடையைப் பற்றியும் ஒரு குறிப்பெழுத விரும்புகின்றோம். வாக்கியங்களைச் சந்தி கூட்டி யெழுதுவதே தமிழ் மரபாயினும், பொருள் தெளிவாக விளங்க வேண்டுமென்ற நோக்கால் சந்திகளைப் பிரித்தே எழுதியுள்ளோம். நாம் உபயோகித்துள்ள கலைச் சொற்கள் பெரும்பாலும் அரச கரும மொழியலுவலகத்தினரால் வழங்கப்பட்ட கலைச்சொற்றொகுதிகளிலிருந்தே பெறப்பட்டன.



# * ஆசியாவில் தேசியவாதத்தின் மூலங்கள்

கலாநிதி சி. அரசரத்தினம்

## தேசியவாதத்தின் தோற்றம்

தற்கால வரலாற்றினை நிர்ணயிக்குந் தனிப் பெரும் அம்சங்களுள் தேசியவாதமும் (Nationalism) ஒன்றாகும். இத்தேசியவாதமானது ஐரோப்பாவில் ஆரம்பித்து முறையே, அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களிற் பரவி இன்று உலகமுற்றுங் காணப்படுகின்றது. தேசிய வாதம் ஓர் அரசியல் நியமமாகத் (Political Principle) தோன்று முன் ஆசியாவிலும் ஐரோப்பாவிலுமிருந்த சாம்ராச்சியங்கள் பல சாதியினரை உடையனவாயும், சர்வதேச நோக்குடையனவாயும் இருந்தன. இத்தகைய பல அம்சங்களையுடைய ஒரு நாடே இலட்சிய நாடென (Ideal State) அப்பொழுது கருதப்பட்டது. இப்படியான ஒரு கொள்கை மேன் மேலும் மக்களையும் நாடுகளையுங் கைப்பற்றி, அடக்கியாளும்படி அரசர்களை எப்பொழுதுந் தூண்டிக் கொண்டேயிருந்தது. பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சி இயக்கத்தின் (Renaissance Movement) தோற்றத்தோடும் கத்தோலிக்க திருச்சபையில் (Universal Catholic Church) உண்டான பிளவினோடும் நாடுகளை அமைப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளக் கூடிய ஒரு வலிமையுள்ள நியமமாகத் தேசியவாதம் முதன் முறை எழுச்சிபெற்றது. அப்பொழுது தேசியவாதம் நாட்டையாளும் மன்னனோடு இணைக்கப்பட்டு அவனுடைய அதிகாரப் பிரியத்திலும், சாதனைகளிலும் மட்டுமே வெளிப்படையாகி நின்றது. பதினெட்டாம் நூற்றாண்டிலேதான் தேசியவாதம் ஒரு தேசிய இன நாட்டினுள் (Nation-State) மேலும் விரிவான அடிப்படையுடையதாக அமைவுற்றது. அப்பொழுதுதான் ஒரு தேசிய இனத்தைச் (Nation) சேர்ந்த பல்வேறு மக்கட் பிரிவினரும் தாம் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் உணர்ச்சியைப் பெற்றனர். மக்கள் போற்றி

* "Roots of Nationalism in Asia"
By S Arasaratnam B.A. (Ceylon) Ph.D (Lond.)
Lecturer (History) University of Ceylon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற இத்தேசியவாதம் மேலும் முன்னேறுவதற்குப் பிரான்சிலே நடைபெற்ற அரசியற் புரட்சி மிகுந்த சக்தியளித்ததோடு, தற்காலத்து முக்கிய அரசியல் நியமங்களிலொன்றாகிய தாராண்மை வாதத்தோடும் (Liberalism) தேசியவாதத்தினை இணைத்தது. தாராண்மை வாதத்தினால் வலுப்பெற்ற இத்தேசியவாதம் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஐரோப்பிய வரலாற்றில் ஒரு முக்கிய அம்சமாக விளங்கியதோடு ஐரோப்பாவிலிருந்து ஆசியா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள அடிமை நாடுகளிலும் பரவியது.

ஒரு குறிப்பிட்ட சூழலிலே தோன்றி வளர்ச்சியுற்ற ஓர் அரசியல் நியமமானது, தான் தோன்றிய சூழ்நிலையிலும் பார்க்க அடிப்படையிலே வேறுபட்ட சூழ்நிலையிலே செழிப்புற வேண்டுமாயின், அந்நியமம் கட்டாயமாகப் பெருமளவு உருமாற்றமடைய வேண்டுமென்பது வெளிப்படையாகும். ஐரோப்பியத் தொடர்பின் விளைவாக இருபதாம் நூற்றாண்டிலே ஆசியாவில் வளர்ச்சியடைந்த தேசியவாதம் அது தோன்றுவதற் கேதுவாயிருந்த ஐரோப்பிய தேசியவாதத்தைப் பெரிதும் ஒத்திருந்ததென்பதில் ஐயமில்லை. எனினும் அதற்கே சொந்தமான ஓர் அடையாளத்தைக் கொடுக்கவல்ல சில நிகரற்ற குணங்கள் அதற்குள. ஆசியத் தேசியவாதம் பல கிளைத் தேசியவாதங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. (இது ஆசியத் தேசியவாதத்திற்கு மட்டுஞ் சிறப்பாகவுள்ள குணமொன்றன்று) உண்மையில் ஐரோப்பாவின் தேசியவாதத்தினை 'ஐரோப்பியத் தேசியவாதப்' எனப் பொதுப்படக் கூறுதல் முடியாத காரியமாகும். ஏனெனில் மேற்கு ஐரோப்பா, மத்திய ஐரோப்பா, போல்கன் ஐரோப்பா (Balkan Europe) வடகிழக்கைரோப்பா ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான தேசியவாதம் நிலவுவதால் அவற்றிடையே பெரும் வேறுபாடுகளுள. இக்காரணங்களினால் தேசியவாதத்திற்கு அது கொள்ளும் எல்லாக் கருத்துக்களும் அடங்கும்படியாக வரைவிலக்கணங் கூறுதல் எளிதன்று.

### ஆசியாவில் தேசிய வாதம் தோன்றக் காரணம்

தென்கிழக்காசிய நாடுகளில் தேசியவாதம் எழுவதற்கு முதற் காரணமாக விருந்தது அன்னியருடைய அரசியலாதிக்கத்திற் கெதிராக வெழுந்த கிளர்ச்சியே. இது ஓர் எதிர்மறை அம்சம் (Negative Factor) என்பதில் ஐயமெதுவுமில்லை. எனினும் அன்னியராட்சியை நோக்கியெழுந்த இக்கிளர்ச்சியின் காரணமாக ஒரே நோக்குள்ள பல அம்சங்கள் செயலாற்றத் தொடங்கின. இதன் விளைவாக ஒவ்வொரு நாட்டின் தேசியவாதமும் அதன்



அடிப்படையாகக் கொள்ளக் கூடிய சில உறுதியான அம்சங்களை உருவாக்கின. இதுவே இக்கிளர்ச்சியின் முக்கியத்துவமாகும். அன்னியராட்சியை எதிர்ப்பதற்கு ஒன்றுபட வேண்டிய அவசியம் அடிமைப்பட்ட மக்களிடையே சில ''ஒற்றுமைத் தளைகளை'' உண்டாக்கியது. ஆரம்பத்தில் இவ்வொற்றுமைத்தளையானது மேற் கூறப்பட்ட எதிர்மறைக் காரணத்தினாலுண்டான தொன்றெனினும், அதைத் தொடர்ந்து மிக விரைவில் திட்டவட்டமான அம்சங்கள் பல உருவாகின.

### ஆசிய தேசிய வாதத்திற்கும் ஐரோப்பிய தேசிய வாதத்திற்குமுள்ள தோற்ற வேற்றுமை

ஐரோப்பாவிலே தேசியவாத நியமமானது நடைமுறையில் சாதிப்பாகுபாடுகளையே பெரிதும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. முதலாம் உலகமகாயுத்தத்தின் முடிவில் வேர்சைல்ஸில் (Versailles) கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கை சாதி அடிப்படையில் ஐரோப்பாவைப் பிரித்தமைப்பதையே நோக்கமாகக் கொண்டு, அதில் ஓரளவு வெற்றியும் கண்டது. இவ்வாறாக அவ்வுடன்படிக்கை மத்திய ஐரோப்பாவிலும், தென்கிழக்கைரோப்பாவிலும் புதுத் தேசிய இன நாடுகள் பலவற்றை அமைத்ததோடு, தங்கள் சுதந்திரத்தை இழந்திருந்த வேறு நாடுகளையும் மீண்டும் அமைத்துதவியது. ''ஒரு இனம் ஒரு நாடு'' (One Race, One State) என்று ஹிட்லர் கூறும் போது ஐரோப்பா முழுவதிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நியமத்தினை அவன் மீண்டும் அறிவித்தானே யொழியப் புதிதாக ஒன்றுங் கூறவில்லை. ஒரே மொழி பேசும் ஒரு சாதி இனத்தைச்சேர்ந்த மக்கள் ஒரே நாட்டின் எல்லைக்குள் வாழவிரும்புவதே தேசிய வாதமென்பது ஐரோப்பாவில் அக்காலத்தில் கொண்ட பொருளாகும். இதே உருவில் தேசியவாதம் தென்கிழக்காசிய நாடுகளில் எவ்வித ஆதரவையும் பெற்றிருக்க முடியாது. இந்நிலப் பகுதி பல்வேறு சாதியினங்கள், மொழிகள், பண்பாடுகள் ஆகியன உள்ள இடமாகும். அங்குள்ள ஒவ்வொரு நாட்டிலும் பலவகையான மக்கள் பல நூற்றாண்டுகளாக ஒருங்கே வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஹிட்லர் தேசியவாதத்திற்குக் கொடுத்த வரைவிலக்கணத்தின்படி இந்தியா, இலங்கை, இந்தோனேஷியா, மலாயா, ஆகிய நாடுகள் தங்களை நிர்மாணித்துக் கொள்ள முடியாது. இவற்றை நாம் ''நாடுகள்'' எனக் குறிப்பிடும்போது, அவை பெருமளவிற்கு வெறும் ''புவியியற் சொற்கள்'' *

* அதாவது புவியியற் கொள்கைகளின்படி ''நாடுகள்'' எனக் கூறலாமே யொழியத் தேசிய அடிப்படையில் அவை நாடுகள் ஆகா என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(Geographical Expressions) என்பதை நாம் அறிவோம். ஒற்று
மையிழந்த இத்தாலியை ஒரு ''புவியியற் சொல்லால் குறிக்கப்
படுமிடம்'' என மெற்றர்னிக் (Metternich) கருதினன். ஆனல்
அக்கூற்றினல் அக்கால இத்தாலியின் முழு நிலையும் புலப்பட
வில்லை. ஏனெனில் அங்கு இத்தாலிய தேசியவாதம் ஒன்றிருந்
தது; இத்தாலிய மக்கட் குழுவொன்றிருந்தது; இத்தாலிய
மொழியிருந்தது; இத்தாலியப் பண்பாடிருந்தது; அத்தோடு
கத்தோலிக்க சமயமுமிருந்தது. இவ்வம்சங்களிற் சில இங்கு
நாம் எடுத்துக்கொண்ட ஆசிய நாடுகள் சிலவற்றிலே காணப்
பட்டமை உண்மையே. எனினும் ஐரோப்பியர் செல்வாக்கு
இந்நாடுகளைப் பாதிக்கத் தொடங்கிய காலத்திற்கு முன், ஒரு
இந்தியத் தேசியவாதம் இருந்ததாகவோ, அல்லது இலங்கைத்
தேசியவாதம், மலாயாத் தேசியவாதம் எனப் பல தேசிய
வாதங்கள் இருந்தனவாகவோ நாம் கொள்ள முடியாது. இந்
நாடுகளில் தங்களுக்குள் வரையாது பொருதிக் கொண்டிருந்த
பிரிவுபட்ட இனங்களை, வெளியிலிருந்து வந்த ஐரோப்பியர்
அடக்கி, அரசியல் ஒற்றுமையையும், நிர்வாக ஒற்றுமையையும்
உண்டாக்கினர். இவ்வொற்றுமையே இந்நாடுகளிற் தேசியவா
தம் வளர்ச்சியடையக் கூடிய அடிப்படை ஆதாரத்தை யளித்
தது. இந்நாடுகளிற் பல, சிற்சில காலங்களிற் சில ஏகாதிபத்தி
யங்களின் கீழ் ஒன்றுபட்டிருந்தன என்பது உண்மையே. ஆனல்
இப்புது அரசியல் ஒற்றுமையோ, அவ் வொற்றுமையினின்றும்
வேறுபட்டதொன்ருக இருந்தது. ஏனெனில் (முன்பிருந்த ஏகாதி
பத்தியங்களின் கீழ் நடந்தது போலல்லாது) ஒரு குறிப்பிட்ட
இனம் மற்ற இனங்களை அடக்கி ஆதிக்கஞ் செலுத்தவில்லை.
அதற்குப் பதிலாக எல்லா இனங்களும் ஒரு கூட்டமாக இணை
வதற்குகந்த சூழ்நிலை உருவாகியது. இந்தியாவில் பிரித்தானிய
ருடைய பல்வேறுவகையான நேர்முக மறைமுகக் கட்டுப்பாடு
களுக்கு மேலாக இந்தியர் எல்லோரும் ஓர் இனத்தைச் சேர்ந்
தவர் என்னும் உணர்வு எழுந்தது. ஈழத்திலோ வெனில், பிரித்
தானிய நிர்வாகம் நடைபெற்ற நூற்றைம்பது ஆண்டுகளுக்குள்
உள்நாட்டுப் பிராந்திய வேறுபாடுகள் நீக்கப்பட்டு ஒருமைப்
பாடுடைய விசுவாசத்தை (Single Loyalty) மக்களிடையே ஏற்
படுத்த வழிவகுக்கப்பட்டது. மலாயாவிலும் இதே போன்ற
முறையான இயக்கம்தான் ஏற்பட்டது. ஆனல் அங்கு சுல்தான்
களுடைய சுதந்திரம் பாதுகாக்கப்பட்டமையால் ஓரளவு குறை
வாகவே இவை காணப்பட்டன. இந்தோனேஷியாவிலோ இவ்
வொற்றுமையானது முற்றிலும் ஐரோப்பிய ஆதிக்கத்தின் பய
ஞகவே உண்டாயிற்றெனலாம். ஒல்லாந்தரின் கீழ்த் தாமெல்


PUBLIC LIBR... JAFFNA.

லோரும் அடிமைப்பட்டமையொன்றே தங்களை இணைக்குந்
''தளை''யாகக் கொண்டு, பல்வகைப்பட்ட முதிர்ச்சிபெற்ற பண்
பாடுகளைக் கொண்ட எண்ணற்ற தீவுகளும் அற்புதமான முறை
யில் ஒன்றுபட்டுள்ளதை அங்கு நாம் காண்கிருேம்.

## ஆசிய தேசிய வாதத்தில் சமயத்தின் பங்கு

தென்கிழக்காசியாவில் தேசியவாதம் சமயத்தோடு நெருங்
கிய தொடர்புடையது. இது அதன் முக்கிய பண்புகளில் ஒன்ரு
கும். ஐரோப்பாவிலும் தேசிய வாதம் பரவிய நாடுகள் சிலவற்
றில் இத்தன்மை காணப்பட்டது. கிழக்கைரோப்பிய தேசிய
வாதத்திற் சமயக் கலப்பு பெருமளவிற் கிருந்ததெனப் பொது
வாகக் கூறலாம். அந்நியராகிய துருக்கியரின் இஸ்லாமிய ஆதிக்
கத்திற்கெதிராகப் போல்கன் பகுதியில் (Balkan Region) எழுந்த
போல்கன் தேசியவாதம் சிறப்பாக இப்பண்பைக் கொண்டிருந்
தது. பிற சமயமொன்றைத் தழுவி நிற்கும் அந்நிய வல்லர
சொன்றுக் கெதிராக உள்நாட்டுத் தேசிய வாதம் (Local Nationa-
lism) எழுகின்ற நாடுகளில் அத்தேசியவாதமானது தான் பல
மடைவதற்குச் சமய உணர்ச்சிகளையும் பயன்படுத்தியே தீரும்.
சிறப்பாக மக்களின் சமூக வாழ்விற் சமயத்திற்குப் பேரிடமளிக்
கப்படும் நாடுகளில் இப்படி நடப்பது திண்ணம். நாம் வாழும்
இக்காலத்திலும் சைப்பிரஸ் தேசியவாதத்தின் தன்னிகரில்லாத்
தலைவனுக ஒரு அதிமேற்றிராணியார் மாக்காரியோஸ் (Arch-
bishop Makarios) முன் வருவதைக் காணக்கூடியதாக விருக்கின்
றது. நாம் எடுத்துக்கொண்ட ஆசிய நாடுகளில் தேசிய இயக்
கங்கள் கிறித்தவ வல்லரசுகளை எதிர்த்து நின்றன. அத்துடன்,
இவ்வியக்கங்கள் பர சமயமொன்று தான் மேலான தெனக்
கோருவதை எதிர்த்து, தங்கள் சமயங்களுக்கும் கலாச்சாரங்
களுக்கும் நன்னம்பிக்கை யூட்டுவதை நாடிநிற்கின்றன. அதன்
விளைவாக தேசியவாதமானது எப்படி அரசியலுரிமைகளைப் பெற
இயங்கும் ஓரியக்கமாயிற்ருே, அதே போலக் கலாச்சார சமய,
மறுமலர்ச்சி இயக்கமுமாயிற்று. ஆகையால் இந்நாடுகளில் தேசிய
வாதம் தோன்றிய காலத்திலேயே, அங்கு பெரும்பாலும் பரவி
யிருக்குஞ் சமயங்களாகிய இந்து, பௌத்த, இஸ்லாமிய சமயங்
களின் மறுமலர்ச்சியு மேற்பட்டதை தற்செயலாக ஒரே காலத்
தில் நடந்த இரு சம்பவங்களெனக் கொள்ளலாகாது. சமயத்
திற்களித்த இம் முக்கியத்துவம் தேசியவாதத்திற்குச் சாதகமாக
வும் பாதகமாகவும் முடிந்தது. அது தேசியவாதத்தினை ஒரு
விரிவான அடிப்படையுள்ளதாகச் செய்தற்கு முனைந்தது. அத்
துடன் தனி அரசியல் இயக்கமெதுவுக்கும் கிடைத்திருக்க முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA

யாத பொது ஆதரவைத் தேசியவாதம் பெறுவதற்கு உதவியது. உதாரணமாக இந்தியாவிலே காந்தியொருவர் முன்வந்து இந்தியத்தேசியவாதத்தினை இந்துக் கலாச்சாரத்தின் உயிர்நாடியோடு இணைக்கும்வரை இந்தியத் தேசியவாதம் பெரும்பாலும் ஒரு மத்திய வகுப்பினரின் இயக்கமாகவே இருந்தது. காந்தி அவ்வண்ணஞ் செய்தபோதுதான் இந்தியாவின் நாட்டுமக்களுள் Indian Peasantry பெரும் பகுதியினர் தேசியவாதத்தில் ஊக்கங் கொண்டனர். மற்ற நாடுகளிலும் பற்பல அளவுகளில் இப்படியான போக்கு ஏற்பட்டது. தூங்கிக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்தினைத் தட்டி எழுப்புவதற்குச் சமயத்திற்களித்த முக்கியத்துவம் சரியானதாக விருந்தது. ஆனால் பல மதங்கள் உள்ள நாடுகளிலே அது பல விபரீத விளைவுகளை உண்டுபண்ணக் கூடியதாகும். இதனை இந்தியாவில் நடைபெற்ற சோக சம்பவங்கள் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. அங்கு முஸ்லிம் மக்களுடைய தேசியவாதமானது, இந்திய ஒற்றுமையின்மீது கொண்ட விசுவாசத்திற்கும் மேலாகச் சமயத்திலே கூடிய ஆர்வங்கொண்டு, இந்திய முஸ்லிம்களின் தேசிய நோக்கங்கள் ஒரு தனி இஸ்லாமிய நாடு அமைப்பதாலேயே சாத்தியப்படுமென்ற முடிவுக்கு வந்தது. இந்திய தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட (Indian National Congress) இந்தியத் தேசிய காங்கிரசாலும் இத்தகைய பிளவினைச் சமாளிக்க முடியவில்லை. ஆகவே தென்கிழக்காசிய நாடுகளின் தேசியவாதத்தினை உருவாக்கி நின்ற பல்வேறு அம்சங்களும் ஒரே இயக்கத்திலே ஒன்று கூடியிருக்க முடியாத அளவிற்குத் தங்களுக்குள் முரண்பட்ட கோரிக்கைகளை உடையனவாக அமைந்தன.

## ஆசிய தேசிய வாதத்திற் கேதுவான பொருளாதாரச் சூழலும் மத்திய வகுப்பினோர் பங்கும்

தேசிய வாதத்தின் வளர்ச்சிக்குப் பொருளாதார விருத்தியே எப்பொழுதும் அடிப்படையாக அமைந்துள்ளது. மிகுந்த கட்டுப்பாடுகளையுடைய மானியமுறைச் சமுதாயத்திற்கும் (Feudal Society) தேசிய இயக்கத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கவில்லை. ஐரோப்பாவிலே மானியமுறை முறிவடைந்து, புதுமுறைத் தொழிலியக்கம் (New Industrialism) ஆரம்பித்தபோதுதான் தேசியவாதம் தன் கோரிக்கைகளைப் பெறுவதற்கு முனைந்து நின்றது. தேசியவாதத்தைப் பிரச்சாரம் செய்வதாக அமைந்த மத்திய வகுப்பினரே அரசியற் பொருளாதாரத் தூண்டுதல்களுக்கு ஏதுவாக உள்ளனர். மேலும் பிரஞ்சுப் புரட்சியின் பின் நடைபெற்றதுபோல மானியமுறை உரிமைகள் நீங்கிச் சட்டரீதி



யான சமத்துவ முறையிலே சமுதாயம் அமைக்கப்பட்டபோது தேசியவாதத்தின் எழுச்சிக்கு மேலும் சாதகமான நிலை ஏற்பட்டது. குடியேற்ற ஆட்சிமுறைப் பொருளாதாரக் கொள்கைகள் (Colonial Economic Policies) தென்கிழக்காசியாவில் இதே தொழிலைப் புரிந்தன. அவை அங்கு நிலவிய மானிய முறைத் தொடர்புகளைத் தகர்த்தெறிந்தன. அப்பொழுது பரம்பரைச் சமுதாய முறைக்குள் (Traditional Social Pattern) அடங்காது பெருமளவிற்கு அம்முறையினின்றும் நீங்கலாக நின்றுகொண்ட ஒரு புது வகுப்பாகிய மத்திய வகுப்பு இந்நாடுகளில் எழுச்சிபெற்றது. இவ்வகுப்பு ஒரு சிறுபான்மை வகுப்பாக இருந்தபோதிலும் குடியேற்ற ஆட்சி நிலவிய நாடுகளில் தேசியவாதம் எழுவதற்கு அது புரிந்த உதவி பெரிதே. இவ்வகுப்பு பொருளாதார அடிப்படையில் தோன்றியமையால், தனிப்பட்ட ஆர்வம் அல்லது பிரிவினை ஆர்வம்(Particularist or Sectional Loyalties) எதுவுமின்றி, உண்மையான தேசிய நோக்கினையுடையதாக விருக்க முடிந்தது. பன்மொழிகளும் சமயங்களுமுள்ள ஒரு சமுதாயத்திற் காணப்படும் வகுப்புவாத இனங்களை (Communal Groups) இம்மத்திய வகுப்பு இணைக்கக் கூடியதாகவும், முழுத் தேசத்தின் சார்பாகப் பேசும் உரிமையையும் கோரக் கூடியதாகவுமிருந்தது.

ஒரு நாட்டில் அந்நியரை அகற்றும் பிரச்சினை மிக்க அவசியமான தொன்றெனக் கருதியது மத்திய வகுப்பே யாகும். இக்கருத்து தன்னல நோக்கங்களினால் உந்தப்பட்டது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் ஏகாதிபத்திய ஆதிக்கத்தினை அகற்றுவதால் இவ்வகுப்பினருடைய செல்வாக்கே பெருகும். ஏனென்றால் நாட்டில் அதிகாரம் பெறக்கூடிய அளவிற்கு அமைந்தியங்கும் ஒரேயொரு பகுதியினர் இவர்களேயாவர். பெருந் தேசிய இயக்கங்களிற் பெரும்பான்மையானவை (இந்தியத் தேசிய காங்கிரஸ், பர்மிய, பாசிஸ எதிர்ப்பு மக்கள் விடுதலைக் குழு Anti Fascist People's Freedom League) மத்திய வகுப்பிலே தோன்றி மத்திய வகுப்பினரையே தலைவராகக் கொண்டிருந்தன. ஐரோப்பிய குடியேற்ற ஆட்சியின் பயனாக வந்த புதிய அரசியற் கொள்கைகளையும், தாபனங்களையும், (Institutions) மேற்கொண்டவர்களும் அவர்களே. தங்களையாளும் குடியேற்ற வல்லரசின் மொழியைக் கற்றுக் கொண்டவர்களும் அவர்களே. அதனால் ஆள்பவர்களோடு நேருக்கு நேர் பேசிக்கொள்ளவும் முடிந்தது. இதே காலத்தில் மேற்கு ஐரோப்பிய அரசியல் விருத்தியின் பயனாக அங்கே தோன்றிய தாராண்மை இயக்கப் போக்கை (Spirit of Humanist Liberalism) மத்திய வகுப்பினர் மேற்கொண்டனர். இது நடந்ததும் ஏகாதிபத்திய ஆட்சியாளர் இவ் வகுப்பினருக்கு அதிகாரத்தில் ஒரு பங்கினை வழங்காமல் மறுப்பதற்கு எதுவித நியாயமும் இல்லாமற் போயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிய தேசிய வாதத்தில் இனப்பற்றின் முக்கியத்துவம்

தென்கிழக்காசிய தேசியவாதங்களிற் சில ஐரோப்பிய சாதி இனத்தை எதிர்ப்பதையே, (Anti European Racialism) அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை. நல்லகாலமாக இத்தகைய குணம் எல்லாவிடங்களிலும் காணப்பட்டதொன்றன்று. அப்படிச் சில இடங்களில் நடைபெற்றதற்கு ஐரோப்பியர்களுடைய கொள்கையே பெருமளவிற்குப் பொறுப்புள்ளதாகும். இந்தியாவில் தேசிய இயக்கத்தின் ஆரம்பகாலத்தில் அரசாங்கத்தவரல்லாத ஆங்கிலேயரிற் சிலர் அவ்வியக்கத்தில் ஊக்கங் காட்டினமையால் இத்தகைய சாதியினத் துவேஷப் போக்கு (Racial Trend) இந்திய தேசிய வாதத்தில் இடம்பெறவில்லை. ஆனாலும் ஐரோப்பியர் கொண்ட நோக்கத்தின் விளைவாக இந்தோனேஷியா, இந்துசீனா போன்ற கிழக்கே இருக்கும் நாடுகளில் எழுந்த கடுங் கிளர்ச்சி அப்படியானதன்று. எனினும் கறுத்தவர்களும், சிவத்தவர்களும் வெள்ளையருக்குச் சமானமானவர்கள் என்றுஞ், சில சமயங்களில் வெள்ளையரிலும் பார்க்க மேலானவர்களென்றும் உறுதிப் படுத்த வேண்டிய அவசிய மொன்றிருந்தபடியால் அங்குள்ள எல்லா நாடுகளிலும் அடிப்படையிலே இனப்பற்று (Racialism) இருக்கத்தான் செய்தது. இவ்வுணர்ச்சியானது அளவு மீறிச் சென்றதும் அந்நியரை விலக்க வேண்டு மென்னும் ஆவேசம் (Xenophobia) உண்டாயிற்று. கறுத்தவர்கட்கெதிராக வெள்ளையர் காட்டும் நிறத்துவேஷம் போல இது மறுவளமாக வெள்ளையருக் கெதிரான நிறத்துவேஷமாயிற்று. மேலைத்தேசங்களோடும், அவைகளின் நோக்கங்களோடும் தாம் கொண்ட தொடர்புகள் எல்லாவற்றையும் நிறுத்த வேண்டு மென்னும் பிடிவாதம் ஏற்பட்டது. சில தேசங்களில் இவ்வுணர்ச்சி உள்ளடக்கமாக விருந்தது. ஐரோப்பியரது அதிகாரம் அந்நாடுகளில் அற்றுப்போன பின்பே அது வெளிப்படையாயிற்று.

இப்படியான, வேறுபட்ட சிக்கலான காரணங்களினாலே தேசிய வாதம் எழுச்சி பெற்றது. ஒவ்வொரு நாட்டிலும் அது மேற்கொண்ட தனிப்போக்கு அந்தந்த நாட்டிலிருந்த வேறுபட்ட சூழ்நிலையைப் பொறுத்திருந்தது.



# புவியியலும் மக்களும் *

பேராசிரியர் க. குலரத்தினம்

புவியியல் பல அடிப்படையான கருத்துக்களைக் கொண்டது. இதனை விரிவாக இன்றும் பலர் அறியாதிருக்கின்றனர். புவியியல் ஆதியில் புவியினது இயல்புகளை விவரித்துக் கூறும் ஒன்றாகவே இருந்தது. இத்தகைய மூலக் கொள்கையிலிருந்து புவியியல் படிப்படியாக வளர்ச்சி பெற்றுள்ளது. இவ்வளர்ச்சி காரணமாகப் புவியியலின் அடிப்படைக் கருத்துக்கள், கொள்கைகள் என்பனவும் விரிவடைந்துள்ளன. இதனால் புவியியல் இன்று ஒரு கலை என்றும், விஞ்ஞானம் என்றும் தத்துவம் என்றும் பலவாறு வழங்கப்பட்டுவருகின்றது.

புவியியல் ஏனைத்துறைகளைப் போலல்லாது தொகுப்புப் பண்பு கொண்ட ஒரு துறையாக விளங்குகின்றது. ஏனைத் துறைகளோ பகுத்து ஆராயுமியல்புடையன. இவ்வாறு பகுத்து ஆராயும் துறைகள் மூலம் பெறப்பட்ட முடிபுகளையெல்லாம் ஒழுங்குபடத் தொகுத்து ஆராயும் பெற்றி புவியியலுக்குண்டு. எனவே பௌதிகவியல், உயிரினவியல், சமூக விஞ்ஞானம் ஆகிய பல துறைகளிலும் நடைபெறும் ஆராய்ச்சிகளும் முடிவுகளும் புவியியலுக்கு அடிப்படையாக அமைகின்றன. மனிதனுக்கும் அவனுடைய சூழலுக்கு முள்ள நெருங்கிய தொடர்பினை ஆராய்வதே புவியியலாகும். பௌதிகவியல், உயிரினவியல், சமூக விஞ்ஞானம் முதலிய பலதுறைகளோடும் தொடர்புடைய பூமியானது மனிதனையும் அவனது தொழில்களையும் பலவழிகளிற் பாதிக்கின்றது. இத்தகைய சூழலுக்கும் மனிதனுக்கு மிடையே இடையறாது நிகழுந் தொடர்பினை ஆராய்ந்து விளக்குவதே புவியியல். எனவே, புவியியல் ஏனைத்துறைகள் பலவற்றையும் ஒருங்கு சேர்த்துக் காட்டுவதோடு அமையாது அதற்குப் புறம்பான ஒரு தனிப் பண்பையுங் கொண்டுள்ளது. ஆகையினால் புவியியலுக்குரிய பண்பு வேறெத்துறைகட்கும் இல்லை என்பது புலனாகும். மேற்கூறிய பலதுறைகளோடுந்

---

* Geography in the service of man

By–Prof: K. Kularatnam, M.A., Ph.D (Lond),
Docteur de l' Universite (Sciences) Hons (Paris) Dip.Gemmology, A.G.A (Lond), Dip. Geog. (Madras), M.A. Inst. Min E, F.R.G.S., F. S. S.
Professor Geography University of Ceylon

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புடைய பல பொருள்களும் பூமியின் மேற்பரப்பிலே பரந்து காணப்படுகின்றன. அவற்றிற்கு அமைய மக்களின் பரம்பலும், அவர்களது தொழில்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடைய இப் பரம்பல்கள் யாவும் சில அடிப்படையான விதிகளுக்கு அமையவே பரந்துள்ளன. இவற்றிற்கிடையே யுள்ள ஒற்றுமைகளையும் ஒழுங்குகளையும் விரிவாக எடுத்து விளக்குவதே புவியியல். உலகின் பல பாகங்களிலுமுள்ள பிரதேசங்களினிடையே காணப்படும் அடிப்படையான தொடர்பு இதனாற் பெறப்பட்டது. இப் பிரதேசங்கள் தனித்தனியே அமைந்து காணப்பட்டாலும் அவை யாவும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புடையன. அவ்வாறே அப் பிரதேசங்களிடையே வாழும் மக்களும் ஒருவரோடொருவர் நெருங்கிய தொடர்புடையவராயிருக்கின்றனர். அவர்கள் தத்தமக்குரிய சிற்சில பண்புகளில் வேறுபட்டவர்களாக விருந்தாலும் அவர்கள் யாவரும் உலக மக்கள் என்ற அடிப்படையிலே ஒற்றுமையுடையவராவர். மக்கள் வெவ்வேறு கொள்கைகளையும் பண்புகளையும் உடையவர்களாக இருந்தாலும் ஒற்றுமையோடு வாழ்வதற்கு இப் புவியியல் அடிப்படையே காரணமாகும். ''சமாதானமாக உடனிருந்து வாழும்'' சிறந்த தத்துவமும் புவியியல் பற்றி எழுந்ததேயாம். உலகின் பல பாகங்களிலும் வாழும் மக்கள் பழக்க வழக்கம், மொழி, உடை, கலாச்சாரம் என்பவற்றில் வேறுபட்டவராக விளங்கினும் ''எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்'' என்ற உயர்ந்த பண்போடு வாழ்க்கை நடாத்துவதற்குப் புவியியலே காரணமாகும்.

இதுவரை புவியியலின் அறிவியல், தத்துவம் ஆகிய இயல்புகளை ஆராய்ந்தோம். புவியியல் எத்துணை 'கலை' சம்பந்தமானது என்பதனை ஈண்டு ஆராய்வாம். இன்றைய மனிதனுக்குப் பயன்படும் கலைகளுள் புவியியலுமொன்றாகும். மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றங்களை நோக்குமிடத்து இஃது ஓரளவு புலனாகும். இன்று சமூக, பொருளாதார முன்னேற்றங்கள் யாவும் பெரும்பாலும் அபிவிருத்தித் திட்டங்களையே பொறுத்துள்ளன. இத்தகைய அபிவிருத்தித் திட்டங்கள் நல்ல அடிப்படையிலே அமையவேண்டும். அவ்வாறு அமையாவிடில் எவ்வளவு பணத்தையோ நேரத்தையோ செலவிட்டும் குறிப்பிட்ட வருவாயைப் பெறுதலரிது.

அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதற்கு முன்பு நாட்டிலுள்ள மூலவளங்களின் தொகைகளைக் கணக்கிடுதல் அவசியமாகும். மூல வளங்களின் தொகைகளை அடிப்படையாகக் கொண்டே மக்களுக்குப் பயன்படக்கூடிய திட்டங்களை வகுக்க முடியும். நாட்டின் மூல



வளங்கள் இருவகைத்து—மக்களுக்குப் பயன்படக்கூடிய பொருள்கள் சம்பந்தமானவை, அவையல்லாதவை என. நாட்டினுடைய மூல வளங்களைக் கணக்கிடுவதைப் போன்று மக்களது தேவைகளையும் கணக்கிடுதல் அவசியமாகும். மக்களுடைய தேவைகள், வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய பொருள்களையும் அவர்களது இன்ப நுகர்வுக்கு வேண்டியவற்றையும் பொறுத்துள்ளன. இத் தேவைகள் எத்துணை வேண்டப்படுகின்றன வென்பது மக்களது மொத்தத் தொகையையும் அவர்கள் பெருகும் அளவையும் பொறுத்துள்ளது. இவற்றோடு மக்களின் கலாச்சார நிலையும் ஆராயத்தக்கது. ஆகவே, திட்டங்களை வகுக்கும் பொழுது நாட்டினது மூலவளங்கள், மக்களது தொகை, அவர்களது கலாச்சார நிலை என்பனவற்றை யெல்லாம் நன்கு ஆராய்தல் அவசியமாகும். மக்களது கலாச்சார நிலையைக் கொண்டு நாட்டினது மூலவளங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதனை மட்டிடுதல் முடியும். ஆகவே, நாட்டின் மூல வளங்கள், மக்களின் தொகை, அவர்களது கலாச்சார நிலை என்பவற்றை முறைப்பட ஆராய்ந்து நல்ல அபிவிருத்தித் திட்டத்தை அமைக்கப் புவியியல் அறிவு இன்றியமையாதது. இதனை விரிவாக விளக்குவதற்கு இலங்கை அரசாங்கம் அண்மையில் வெளியிட்ட பத்து வருடத் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம். இத் திட்டப் பட்டியலை வாசிக்குமிடத்து நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தட்டிக் கழிக்க எடுத்துக் கொண்ட முயற்சிபோலவே இது தோன்றுகின்றது. *1968* இல் *10* இலட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர் இருப்பர் என்பதனைக் கேட்ட மாத்திரத்திலேயே திட்டத்தை வகுத்தோர் அதிர்ச்சியடைபவராயிருக்கின்றனர். இத் தொகையை *1981* ஆம் ஆண்டு வரை கணக்கிட்டுப் பார்க்கும் பொழுது இது *37* இலட்சத்திற்கு மேற்பட்டதாயிருக்குமெனக் கருதப்படுகிறது. இத் திட்டத்தை வகுத்தோரின் அடிப்படையான நோக்கம் வினையாற்றவல்ல இத் தொகையினருக்கு எப்படியாவது வேலை கொடுக்க வேண்டுமென்பதே. ஆகவே, நாட்டின் மூல வளங்களை யெல்லாம் ஆராய்ந்து ஒரு நல்ல நீண்ட காலத் திட்டத்தை வகுப்பதற்குப் பதிலாக மேற்குறித்த தொகையினரின் வேலையில்லாத் திண்டாட்டத்தை எவ்வாற்றானும் நீக்க வேண்டுமென்ற ஒரு நோக்கத்தையே இத் திட்டத்திற் காணுகின்றோம். வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதும் இத்தகைய திட்டத்தில் இடம்பெற வேண்டியதொன்றேயாகும். இது திட்டத்தில் முக்கிய இடம் பெற்றாலும் திட்டம் முழுவதையும் நோக்குமிடத்து இஃது ஒரு பகுதி எனவே கொள்ள வேண்டும். மேலும், இத் திட்டம் ஒரு நல்ல அடிப்படையில் வகுக்கப்படவில்லை யென்பதனையும் நாம் அறியலாம். நாட்டிலுள்ள மூல வளங்கள் பற்றிப் பூரணமாக அறியாது திட்டத்தை வகுத்ததே இதற்குக் காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவதாக, நாட்டிலுள்ள மக்கள் அளவுக்கு மிஞ்சிய தொகையை யடைந்து விட்டனரா என்பதனை ஆராய வேண்டும். நாட்டிலுள்ள மூலவளங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து இவற்றிலிருந்து பெறப்படும் வருவாய்க்கு மேலதிகமாக மக்கள் இருப்பின், மக்கள் தொகை கூடிவிட்டதென முடிவு செய்யலாம். இத்தகைய முடிவைப் பெறுவதற்கு முதலில் நாட்டிலுள்ள மூல வளங்களின் தொகையைக் கணக்கிட்டு ஆராய்தல் அவசியமாகும். எமது நாட்டின் மூலவளங்கள் என்றாவது முறையாகக் கணக்கிடப்பட்டனவா? இவற்றின் மொத்தத் தொகையை இது வரை ஒழுங்கான முறையிற் கணக்கிடாததோடு, இவற்றின் பல்வேறு பட்டியல் புகழும் ஆராயப்படவில்லை. இவ்வாறு கணக்கிட்டுப்பார்க்குமிடத்து மூலவளங்களின் தொகை மிகக் கூடியதாயும் அவற்றை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு இப்பொழுதுள்ள மக்களின் தொகை போதாதுமிருந்தால், மக்களின் தொகை மேலுமதிகமாகப் பெருக வேண்டுமெனக் கருதவேண்டும். ஆகவே, மூல வளங்களையும் மக்களையும் திருத்தமான முறையிற் கணக்கிட்டதன் பின்பே எத்தகைய திட்டத்தையும் வகுத்தல் முடியும். நாட்டின் மூலவளங்களில் எவை பயன்படுத்தப் படுகின்றன, எவை பயன்படுத்தப்படவிருக்கின்றன என்பது பற்றி எமக்குத்திட்டவட்டமாக எதுவும் தெரியாது. மேலும் நாட்டிற்கு மக்கள் இன்றியமையாதவர் எனக் கொள்ள வேண்டுமே தவிர தேவையற்றோர் எனக் கருதப்படாது. மக்கள் என்று கூறும்பொழுது நாட்டிலுள்ள மூல வளங்களை விருத்தி செய்வதற்கும் வினையாற்றவும் வல்ல அத்தனை மக்கள் உள்ளனர் என்பதே கருத்து. பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் உணவு உண்பதற்கு ஒரு வாய் இருப்பதோடு ஒரு தலையும் இரு கைகளும் துணையாக உள்ளன என்பதை மறந்து விடக்கூடாது. எனவே ''கூடிய'' மக்கட்டொகை ''குறைந்த'' மக்கட்டொகை என்று கூறும்பொழுது, இவையாவும் சார்பு எண்ணிக்கைகள் (**Relative Terms**) எனவே கொள்ள வேண்டும். அதாவது, நாட்டின் மூலவளங்கட்கும் மக்களுக்குமுள்ள தொடர்பையே இவை குறிக்கின்றன. எனவே, திட்டங்களை வகுப்போர் இவற்றை நன்கு சிந்தித்து முடிவு செய்தல் அவசியமாகும்.

திட்டத்தை வகுக்கும் பொழுது மக்களின் தொகையை எப்படிக் கட்டுப்படுத்தலாம் எனச் சிந்திப்பதற்குப் பதிலாக, நாட்டிலுள்ள மூலவளங்களைக் கணக்கிட்டு அவற்றைச் சிறப்பான முறையில் எங்ஙனம் பயன்படுத்தலாம் என்பதையே கருத்திற் கொளல் வேண்டும். முற் கூறியவாறு, நாட்டின் மூலவளங்கள் இருவகைத்து பொருள்கள் சம்பந்தமானவை, பொருள்களோடு சம்பந்தமற்றவை என.



பொருள்களைப் பொறுத்தவரையில் நாட்டின் மூலவளங்களை மேற் காட்டியவாறு வகுத்தல் முடியும்.

(1) கடல்களோடு தொடர்புடைய மூல வளங்கள். கடலிலிருந்து பெறப்படும் மீன், உப்பு என்பனவும் அவற்றோடு தொடர்புடைய பக்க விளைவுகள் தாவரப் பொருள்கள் என்பன யாவும் இதனுள் அடங்கும். எந்திரங்கள் பொறிகள் முதலியவற்றை இயக்க வல்ல சத்தியையும் கடல் அலைகளிலிருந்து உற்பத்தி செய்தல் முடியும்.

(2) காட்டு வளம்.

(3) பயிர்ச் செய்கை சம்பந்தமான மூல வளங்கள். இன்றுள்ள நிலப் பயன் பாட்டோடு மேலும் விருத்தி செய்யக் கூடிய நிலங்களையும் விருத்தி செய்யலாம். நீர்ப் பாய்ச்சல், வடிகால் அமைப்பு முதலியவற்றோடு மண் வகைகளையும் விருத்தி செய்வதனால் பயிர்ச் செய்கையை மேலும் முன்னேறச் செய்யலாம்.

(4) கனிப் பொருள் வளங்கள். கைத்தொழில்கட்கு இவை இன்றியமையாதவை.

(5) வலுப் பொருள்களும் எரிபொருள் வளங்களும். நீர் மின் சத்தி, எதிர்காலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய அனுச்சத்தி ஆகிய யாவும் இவற்றுள் அடங்கும்.

(6) கைத்தொழிற்கான ஏனை மூலப் பொருள்கள்.

(7) விலங்குகளிலிருந்து பெறப்படும் பொருள்கள். மேய்ச்சனிலங்களை உண்டாக்கிப் பாற் பண்ணைக் கைத் தொழில் முதலியவற்றை விருத்தி செய்தல் என்பன யாவும் இதனுல் அடங்கும்.

மேற்கூறிய பொருள்கள் சம்பந்தமான மூலவளங்கள் தவிர, மக்கள் தொகை, கால நிலை, நில வுறுப்புக்கள் வரலாற்றுத் தொடர்புடைய பகுதிகள் என்பனவும் உண்டு. இவையும் நாட்டின் முன்னேற்றத்திற்குத் துணையாக இருக்கின்றன. உதாரணமாக, ஊர் காட்டுந் தொழில், தெருக்கள், நீர் வழிகள் ஆகிய போக்கு வரத்து வசதிகள் என்பனவும் மறைமுகமாக நல்ல வருவாயைக் கொடுக்கின்றன.

மேற்கூறிய நாட்டின் மூலவளங்களைப் பற்றி இன்னும் பூரணமாக ஒன்றும் தெரியாது. இலங்கையின் பத்து வருடத் திட்டத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குமிடத்து இது புலனுகின்றது. நாட்டினது மூலவளங்களைத் திட்டவட்டமாக ஆராய்ந்து அவற்றைத் திட்டத்தின் அடிப்படையாகக் கொள்ளாத பத்து வருடத் திட்டத்தில் எத்துணை வெற்றி காணுதல் முடியும்? இவற்றை ஆராயும் பொழுது நாட்டின் எத்தகைய அபிவிருத்தித் திட்டத்திற்கும் புவியியல் பற்றிய அறிவு இன்றியமையாத தென்பது பெறப்படுகின்றது. நாட்டினது பல்வேறு பட்ட மூலவளங்களை வகைப்படுத்திக் கணக்கிட்டு பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதற்குப் புவியியல் அறிவு மிக அவசியமாகும்.

நாட்டின் மூலவளங்களைத் திருத்தமாக ஆராய்தற்கான சகல வசதிகளையும் இக்காலப் புவியியலறிஞர் ஏற்படுத்தியுள்ளனர். நாட்டைப் பற்றி ஆராய்வதற்குப் 'படங்கள்' இன்றியமையாதவை. புவியியலறிஞனுக்குத் துணையாகவுள்ள இப்படங்கள் காலத்துக்குக் காலம் திருத்தி அமைக்கப்பட்டு வந்துள்ளன. மேலும், நாட்டின் மூலவளங்களைப் புவியியல் அடிப்படையிலே பலவாறுகப் பிரித்து அவற்றை ஆராய்தலும் முடியும். உதாரணமாக, நிலப் பயன் பாட்டுப் படங்கள், கனிப்பொருள்களையும் அவற்ருேடு தொடர்புடைய பிறவற்றையும் (தொகைகள், இயல்புகள்) காட்டவல்ல படங்கள், நிலக்கணிப் படங்கள், பொதுப் பார்வைப் படங்கள் ஆகிய இன்னேரன்ன படங்கள் நாட்டின் மூல வளங்களை அறியத் துணையாகவுள்ளன. எனவே, நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்களை வகுப்பதற்குப் புவியியல் அறிவு இன்றியமையாத தொன்றுகும்.

உலகில் முன்னேற்றம் அடைந்துள்ள பல நாடுகளில் மக்கள் புவியியலை மேன் மேலும் விரும்பிப் படித்தற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். இதனுற் புவியியற் கல்வி இன்று அதிக தூரம் வளர்ச்சியடைந்துள்ளது. புவியியற் கல்வி கற்பதனுல் மக்கள் பரந்த நோக்கையும் உயர்ந்த கொள்கைகளையும் உடையவராக மாறிவிடுகின்றனர். இன்று உலகில் மலிந்து காணப்படும் சண்டை சச்சரவுகள் நீங்கப் புவியியல் அறிவு துணை செய்வதாய் அமைந்துள்ளது. புவியியலை முறையாகக் கற்று அதன் அடிப்படைக் கருத்துக்கு அமைய ஒழுகும் மக்கள் சாதி, இனம், மொழி ஆகிய பற்றுக்களைத் துறந்து உலகம் முழுவதும் ஒன்று, அங்கு வாழும் மக்கள் யாபேரும் ஒரு குடும்பத்தினர் என்ற பரந்த நோக்கும் பண்பாடும் உடையராய் வாழ்வர். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்பு தமிழ் நாட்டில் வாழ்ந்த கணியன் பூங்குன்றனுர் என்னும் புலவரின் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற உயர்ந்த கொள்கைக்கு அமைய மக்கள் வாழ்க்கை நடாத்தப் புவியியல் துணை செய்கின்றது.



## புவியியற் கலைச் சொற்கள் (அ)

புவியியல் — Geography
தொகுப்புப் பண்பு — Synthetic
பகுத்து ஆராய்தல் — Analytic
பௌதிக வியல் — Physics
உயிரினவியல் — Biology
சமூக விஞ்ஞானம் — Social Sciences
சூழல் — Environment
பரம்பல் — Distribution
சமாதானமாக உடனிருந்து வாழ்தல் — Peaceful co-existence
மூலவளம் — Resource
நிலப் பயன்பாடு — L and use
வடிகால் அமைப்பு — Drainage System
கனிப் பொருள் — Minerals
வலுப் பொருள் — Power Mineral
எரி பொருள் — Fuel resources
ஊர் காட்டுந் தொழில் — Tourist Industry
நிலப் பயன் பாட்டுப் படம் — L and use map
நிலக் கணியப் படம் — Choropleth map
பொதுப் பார்வைப் படம் — Synoptic map

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவிமேற்பரப்பின் பிரதான நிலவுறுப்புக்கள் *

சோ. செல்வநாயகம்

புவியினது மேற்பரப்பை நாம் நோக்கும் பொழுது அங்கு பலவிதமான நிலவுறுப்புக்களைக் காணுகின்றோம். இவை யாவும் வெவ்வேறு அளவினவாயும் வெவ்வேறு இயல்பையுடையனவாயுங் காணப்படுகின்றன. இவற்றை யெல்லாம் சில அடிப்படையான வரம்புகட்கமையத் தொகுத்து ஆராயும் பொழுது இவை ஒவ்வொன்றும் சில நிலை பேருன ஒழுங்குகட்கு ஏற்ப அமைந்திருப்பதை உணரலாம். ஆகவே, புவியினது மேற்பரப்பு உறுப்புக்களை ஆராயுமிடத்து அவை எவ்வாறு தோன்றுகின்றன, எத்தகைய மாற்றங்களுக் குள்ளாகின்றன வென்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்தல் சிறப்புடைத்து. இவ்வடிப்படையிலே புவிமேற்பரப்பிலுள்ள உறுப்புக்கள் யாவும் மூன்று பெரும்பிரிவாகப் பிரிக்கப்படும். இப் பிரிவுகள் பெரும்பாலும் அவற்றின் பருமனை யொட்டியே அமைந்தன வெனலாம்.


### முதலாவது பிரிவு :

புவிமேற்பரப்பிலுள்ள பாரியவுறுப்புக்கள் யாவும் முதலாம் பிரிவுள் அடங்கும். இங்கு காணப்படும் புவியுறுப்புக்களில் இவையே அளவிற் பெரியவை. எனவே, உலகின் கண்டங்களும் சமுத்திரங்களும் பெரும்பாலும் இப்பிரிவுள் அடங்கும். புவிமேற்பரப்பில் இவை எப்பொழுது தோன்றின, எவ்வெப் பகுதிகளைச் சார்ந்து காணப்படுகின்றன என்ற இன்னோரன்ன கேள்விகட்குப் புவிச்சரிதவியலறிஞரும் தக்க விடை கண்டிலர். ஆயினும், புவிச்சரித காலத்தின் மிகப் பழைய காலத்தில் இவ்வுறுப்புக்கள் தோன்றியிருக்க வேண்டுமெனப் பலருங் கருதுகின்றனர். பெரும் நிலத்திணிவுகளாகவமைந்த இக் கண்டங்களோ சமுத்திரங்களோ புவிமேற்பரப்பிலுண்டான மாற்றங்களினுல் முற்றுகச் சிதைந்து போகவில்லை. கண்டப்பகுதிகள் முற்றுகவே அழிந்து வேறு கண்டப் பகுதிகள் தோன்றவுமில்லை. இவை யாவும் தோன்றிய நாட் தொட்டு இன்றுவரை நிலை பேறுடையனவாகவே யிருந்து வருகின்றன. புவிமேற்பரப்பிலுண்டாகும் மலையாக்கம் புவிநடுக்கம் முதலிய விளைவுகளினுல் கண்டங்களில் சில மாற்றங்கள் மட்டுமே ஏற்பட்டுள்ளன. இவை தவிர, கண்டங்களிலோ சமுத்திரங்களிலோ பெரிய மாற்றங்கள் எதுவும் உண்டாகவில்லை. கண்டங்கள் இன்றும் பெரிய நிலத்திணிவுகளாகவே காணப்படுகின்றன. அவற்றைச் சுற்றிக் கண்ட மேடைகள் அமைந்துள்ளன. இக் கண்ட மேடைகள் கண்டங்களிலிருந்து சிறிது தூரத்தில் சமுத்திரத்தாழிகளை நோக்கித் திடீரென வீழ்ச்சியடைகின்றன.

* Landform features of the earth's surface
By S. Selvanayagam B.A (Hons)
Asst. Lecturer in Geography, University of Ceylon.



புவிமேற்பரப்பில் கண்டங்களும் சமுத்திரங்களும் அமைந்துள்ள வகையினை விளக்குவதற்குப் பல கொள்கைகள் எழுந்தன. இவற்றுள் உலோதியன் கிரீன் (Lowthian Green) என்பாரின் நான்முகத் திண்மக் கொள்கையும் [Tetrahedral theory] ஒன்றாகும். இக் கொள்கைப்படி, பூமியானது படிப்படியாகச் சுருங்கி ஈற்றில் ஒரு நான்முகத் திண்மமாக அமைந்தது எனக் கருதப்படுகிறது. நான்முகத்திண்மத்தின் மூலைகளில் பிரதான கண்டங்களும், இடைப்பட்ட பகுதிகளிலும் மேற்பகுதியிலும் சமுத்திரங்களும் அமைந்துள்ளன எனவுங் கொள்ளப்படுகிறது.



நான்முகத் திண்மம்

வட வரைக் கோளத்தில் பெரும்பாலான நிலத்திணிவுகள் காணப்படுவதும் அவை முக்கோணவடிவில் தெற்கு நோக்கிச் சிறுத்துச் செல்வதும் இதற்கு ஆதாரமாகக் காட்டப்பட்டுள்ளன. சமுத்திரங்கள் தெற்கே பெரியனவாயும் வடக்கில் சிறியனவாயும் அமைந்துள்ளன. இக் காரணங்கள் ஓரளவு பொருத்தமானவையாகக் காணப்படினும் நான்முகத்திண்மக் கொள்கை சில அடிப்படையான விஞ்ஞான விதிகளுக்கு முரண்பட்டதாகவுள்ளது. நான்முகத்திண்மம் சமநிலைத்தன்மையற்ற ஓர் உருவமாகையாலும் கோளவடிவமைந்த பூமிக்கு இது பொருந்தாதாகையாலும் இக் கொள்கை பெரும்பாலுங் கைவிடப்பட்டது. சுயசு என்பாரின் (Suess) கொள்கைப்படி புவிமேற்பரப்பில் சில வன்மை பொருந்திய பகுதிகள் காணப்பட்டனவென்றும் அவற்றைச் சுற்றிக் கண்டங்கள் படிப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக வளர்ச்சியடைந்தன வென்றும் கருதப்படுகின்றது. பரிசை நிலங்களான கனடா, போல்திக்கு, சைபீரியா, தக்கணம், ஆபிரிக்கா, மேற்கு அவுத்திரேலியா, தென் அமெரிக்காவின் பிறேசிற் பகுதி ஆகிய யாவும் மேற்கூறிய வன்மைமிக்க பகுதிகளாகும். இவற்றைத் தொடர்ந்து உவேக்கினர் [Wegener] என்பாரின் ''கண்டநகர்வுக்'' கொள்கை [Continental drift theory] வெளியிடப் பட்டது. அக் கொள்கையின்படி ஆதியில் ''பஞ்சியா'' என்னும் ஒரு பெரிய கண்டம் இருந்தது எனவும் இது பின்பு பிளவு பட்டு மேற்கு நோக்கியும் தெற்கு நோக்கியும் நகர்ந்தது எனவுங் கருதப்படுகிறது. இக் கொள்கைக்குச் சார்பாகக் கடற்கரை அமைப்பிலுள்ள ஒற்றுமை, மலைத் தொடர்கள், உயிர்ச்சுவடுகள் என்பன கொடுக்கப்பட்டுள்ளன. இக் கொள்கையும் பல குறைபாடுகளையுடைத்தெனப் பின்பு கைவிடப்பட்டது.


கண்டங்களினதும் சமுத்திரங்களினதும் தோற்றம், அமைப்பு முதலியன பற்றி மேலும் பல கொள்கைகள் வெளியிடப்பட்டன. இவை எவ்வாருக விருப்பினும் மேற்கூறிய புவியுறுப்புக்கள் ஓரளவு நிலைபேறுடைய நிலத்திணிவுகளாகவே அமைந்துள்ளன. எனினும், புவியசைவு முதலிய மாற்றங்களினுல் கண்டங்களிற் சில பகுதிகள் கடலின் கீழ் அமிழ்த்தப்பட்டும், வேறு சில பகுதிகள் மேலுயர்த்தப்பட்டு முள்ளன.

## இரண்டாவது பிரிவு:

கண்டங்களிற் காணப்படும் மலைகள், தாழ்நிலங்கள், மேட்டு நிலங்கள் என்பன இப்பிரிவுள் அடங்கும். உண்மையில் கண்டங்களின் மேற்பரப்பிலுள்ள முதன்மையான தரையுறுப்புக்கள் யாவும் இவற்ருலானவை. பல்லாயிர மைல் நீளமான தாழ்நிலந் தொட்டு சிறிய மலைகள் வரை, இவை பரந்து காணப்படுகின்றன. இத்தகைய வுறுப்புக்கள் தோன்றப் புவியின் கீழ்ப்பகுதியில் உண்டாகும் மாற்றங்களே காரணமாகும். இம்மாற்றங்கட் கமையப் புவியோடானது பலவிடங்களிற் சிதைவுறுகின்றது. அசைவு காரணமாக வுண்டாகும் தாக்கம் கண்டத்தின் பெரும் பகுதியைத் தாக்கும் பொழுது ''கண்டவாக்கம்'' எனவும், மலைகள் மேட்டு நிலங்கள் உண்டாகுமாறு குறுகிய நிலப் பகுதியில் நிகழும் தாக்கம் ''மலையாக்கம்'' எனவும் பெயர் பெறும். புவியின் கீழ்ப்பகுதியில் நிகழும் புவியசைவு முதலிய மாற்றங்களினுல் இவை உண்டாவதால் இப்பிரிவைக் சார்ந்த நிலவுறுப்புக்கள் யாவும் ''ஆக்க நிலவுறுப்புக்கள்'' (Constructional landforms) என வழங்கும். இவ்வுறுப்புக்கள், அவை அமைந்துள்ள தன்மைக்கேற்பப் பலவாறு வழங்கப்படுகின்றன. உதாரணமாகப் பாறைகள்–பெரும்பாலும் அடையற் பாறைகள் – படை படையாக அதிக தூரத்திற்குக் கிடையாக வமையும் பொழுது தாழ்நிலங்களும் மேட்டுநிலங்களும் உண்டாகின்றன. பாறைகள் பலவடிவில் மடிப்புறும் பொழுதும் மேலுயர்த்தப்படும் பொழுதும் மலைகள் உண்டாகின்றன. இம் மலைகள், அவை அமைந்துள்ள நிலையைப் பொறுத்துப் பல பெயர்களைப்




பெற்றுள்ளன. அடையற் பாறைகள் குமிழ் வடிவில் மேலுயர்த்தப்படும் பொழுது குமிழ்வடிவ மலைகள் தோன்றுகின்றன. பாறைப் படைகள் பக்கங்களிலிருந்து வரும் அமுக்க விசைகளிற்ருக்கப்படும் பொழுது ''மடிப்பு மலைகள்'' உண்டாகின்றன.




[குமிழ் வடிவ மலை]

பாறைப்படைகள் பல துண்டுகளாக முறிவுற்று சில பகுதிகள் மேலுயர்த்தப்பட்டும் வேறு சில கீழ் அமுக்கப்பட்டும் அமையும் பொழுது ''துண்டமலைகள்'' உண்டாகின்றன. பிளவுப் பள்ளத்தாக்குகளும் இவற்ருேடு தொடர்புடையனவாக வமைந்துள்ளன.



[மடிப்பு மலை]



[துண்ட மலை] [பிளவும் பள்ளத்தாக்கு]

இத்தகைய நிலவுறுப்புக்கள் புவிமேற்பரப்பிலுள்ள அழிவுக் கருவிகளினுல் தாக்கப்படும் பொழுது பலவித நிலத் தோற்றங்கள் உண்டாகின்றன,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது பிரிவு :

கண்டங்களிற் காணப்படும் எண்ணிறந்த சிறிய நிலவுறுப்புக்கள் யாவும் இப்பிரிவுள் அடங்கும். முற்கூறிய "ஆக்கவுறுப்புக்கள்" யாவும் காற்று, பனிக்கட்டி யாறு, கடல் அலை, ஓடும் நீர் முதலிய அழிவுக் கருவிகளினாற்றாக்கப்பட்டுப் பல புதிய வுருவங்களைப் பெறுகின்றன. மலைகள், மேட்டு நிலங்கள் என்பன மேற்கூறிய கருவிகளினால் அரிக்கப்படுவதனால் பள்ளத்தாக்குக்கள், குன்றுகள், ஆகிய சிறியவுறுப்புக்கள் தோன்றுகின்றன. இவை எவ்வெக்கருவிகளினால் அரிக்கப்படுகின்றனவோ அவ்வக் கருவிகட்கமைய இவ்வுறுப்புக்கள் உண்டாகின்றன.

மேற்கூறிய மூன்று பிரிவிலும் புவிமேற்பரப்பிலுள்ள நிலவுறுப்புக்கள் யாவும் அடங்குகின்றன. புவியின் பிரதான வுறுப்புக்களை மேற்கூறியவாறு வகைப்படுத்தி, அவை தோன்றிய முறையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வதன் மூலமே புவியினது வெளியுருவ அமைப்பை நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

### புவியியற் கலைச் சொற்கள் (ஆ)

புவிமேற்பரப்பு — Earth's Surface
நிலவுறுப்புக்கள் — Land Forms
மூன்று பெரும் நிலப் பிரிவுகள் — Three orders of Magnitude
மலையாக்கம் — Mountain Building
புவிநடுக்கம் — Earthquake
சமுத்திரத்தாழிகள் — Ocean Deeps
வட வரைக்கோளம் — Northern Hemisphere
பரிசை நிலங்கள் — Shield Regions
பஞ்சியா — Pangea
உயிர்ச்சுவடு — Fossil
புவியசைவு — Earth movement
தாழ்நிலங்கள் — Low lands
புவியோடு — Earth's Crust
கண்டவாக்கம் — Epeirogenic movement
மேட்டு நிலங்கள் — Plateaus
குமிழ் மலை — Dome mountain
மடிப்பு மலை — Fold mountain
துண்டமலை — Block mountains
பிளவுப் பள்ளத்தாக்கு — Rift valley
அழிவுக் கருவிகள் — Agents of erosion
புவிச்சரிதவியல் — Geology



# * இலங்கை வங்கிகளின் தேசியமயமாக்கம்

கலாநிதி H. A. de S. குணசேகரா

இலங்கையின் வாணிக வங்கிகளை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம்.

(1) ஆங்கிலேய உரிமைக் கடங்கிய வங்கிகள்

(அ) சார்ட்டேட் வங்கி (Chartered Bank)
(ஆ) மேக்கண்டைல் வங்கி (Mercantile Bank)
(இ) கிழக்கு வங்கி (Eastern Bank)
(ஈ) இந்தியத் தேசீய வங்கி (National Bank of India)
(உ) ஹொங்கொங் அன் ஷாங்கை வங்கிச் சங்கம் (Hongkong and Shanghai Banking Corporation)

(2) இந்திய வங்கிகள் :- இவற்றுள் "இந்திய அரசாங்க வங்கி" (State Bank of India) முக்கியத்துவம் வாய்ந்தது—இவ் வங்கி முன்பு "இந்திய இம்பீரியல் வங்கியா"யிருந்தது. தற்போது இந்திய அரசாங்கத்தால் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றது. இப்பகுதிக்குள் அடங்கும் ஏனைய வங்கிகள் :- இந்தியப் பிறநாட்டு வங்கி (Indian Overseas Bank) இந்திய வங்கி, கப்பீப் வங்கி (Habib Bank) (பாக்கிஸ்தானிய)

(3) இலங்கை வங்கி

### வங்கிகளின் கடமையும் சேவையும் :-

ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பிலே வங்கிகளாவன முக்கியத்துவம் வகிக்கின்றன. அவை பணத்துடன் ஈடுபடுகின்றமையே இதற்குக் காரணமாகும். சாதாரண வர்த்தக நிலையங்களின் நடவடிக்கைகள் அவற்றினது மூலதனத்தின் எல்லைக்குள்

* Nationalisation of Banking in Ceylon
by H. A. de S. Gunasekara
B.A. (Ceylon); M.Sc (Econ); Ph D (Lond.)
Lecturer in Economics - University of Ceylon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்குகின்றன. ஆனல் வங்கிகளோ இம் மூலதனத்தையே தமது மூல பொருளாகக் கொண்டு வர்த்தகத்தில் ஈடுபடுகின்றன. வங்கிகளின் சொத்துக்களை ( sse s) நோக்குமிடத்து, அச்சொத்துக்கள் வங்கிகளது கையிருப்புப் பணத்திலும், மூலதனத்திலும் பார்க்க அதிகப்படியாக இருக்கின்றன. உதாரணமாக 1957 ம் ஆண்டில் இலங்கை வங்கியின் செலுத்தப்பட்ட முதலும், சேர்க்கப்பட்ட சேமிப்புமாகச் சேர்ந்து 15 கோடி ரூபாவாக இருக்க, அவ்வருடத்து வங்கியின் முழுச் சொத்து 700 கோடி ரூபாவிற்கு மேலாக விருந்தது. ஆகையால் வங்கிகள் மக்களது வங்கி வைப்புக்களைக் (Bank Deposits) கடனுகக் கொடுப்பது மன்றி பண உற்பத்தியும் செய்கின்றன. இத்தகைய பண உற்பத்தி செய்யும் ஆற்றல், பொது மக்கள் தங்கள் கடன்களைத் தீர்க்கும் பொருட்டு, வழமையாகக் காசோலைகளைப் (அதாவது வங்கி வைப்புக்களின் மீதுள்ள உரிமைகளை) பெற்றுக்கொள்ள உடன்படுமியல்பிற் தங்கியுள்ளது. பண உற்பத்தியும், பணத்தை வட்டிக்குக் கடன் கொடுத்தலுமே வங்கிக்கு இலாபத்தை உழைத்துத் தருகின்றன. இலங்கையில் பிற நாட்டு வங்கிகள் உழைத்த இலாபத்தின் உண்மைத் தொகை சரியாகத் தெரியவில்லை. எனினும் சென்மதி நிலுவைத் தெரிபொருளிலும் (Balance of Payments data) அதிகார பூர்வமான அட்டவணைகளிலுமுள்ள எண்கள் தரும் தகவல், பிறநாட்டு வங்கிகள் 1956 ம் ஆண்டு 6 கோடி ரூபாய் இலாபத்தை வெளிநாட்டுக்கு அனுப்பியுள்ளன, என்பதே.

இலங்கையின் பொருளாதாரச் சூழலிலே வங்கிகளது அதி முக்கிய கடமைகளெனப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

(1) வங்கிகள் சன சமூகத்தின் பணத்தொகையின் பெரும் பகுதியைத் தருகின்றன. 1956 ம் ஆண்டு மார்கழி இறுதியில் இலங்கையின் முழுப்பணத் தொகையும் கீழ்க்காணுமாறு அமைக்கப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| மத்திய வங்கியினல் வழங்கப்பட்ட தாள் நாணயத் தொகை (Currency Notes) | 443. 4 கோடி |
| வாணிகவங்கிகளின் தேவை வைப்புக்கள் (Demand deposits) | 1,011. 1 கோடி |
| கூட்டுத் தொகை | 1,454. 5 கோடி |

இதிலிருந்து முழுப்பணத் தொகையின் மூன்றிலிரண்டு பங்கிற்கு மேற்பட்டன வங்கி வைப்புக்களே என்பது புலப்படுகின்றது.



(2) வங்கிகள் தனியார் துறைக்குத் தொழிற்படு மூலதனத்தை (Working-capital) திரட்டிக் கொடுக்கின்றன. அதிலும் இத்துறையில் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன. வங்கிகள் மாற்றுண்டியல்களைக் (Bills of Exchange) கழிவு செய்வது, அல்லது ஆவணங்களுக் கீடாகக் (Securities) கடன்களும், மிகையெடுப்புகளும் (overdrafts) அளிப்பது, போன்றவற்றைச் செய்கின்றன. தனியார் துறைக்கு அளிக்கப்படும் கடன் தொகையில் ஒரு பகுதி உத்தேச வியாபாரத்திற்காகக் கொடுக்கப்படுகின்றது. இப்படியாகக் கொடுக்கப்பட்ட கடன், வாணிபப் பங்குகள் (Shares) சரக்கு வியாபாரங்களுக்குப் பயன்படுத்தப் படுகின்றது. உத்தேச வியாபாரங்களுக்குக் கடன் வசதியளிக்க, மட்டு மீறி உடன்படுவதாகத் தற்போதைய வங்கிகள் மீது குற்றம் சாட்டப்படுகின்றது. இப்படியாகக் கடன் வாங்குபவர்களது தகுந்த பொருள் நிலையும், வங்கிகள் ஏற்கத்தகுந்த அரசாங்கப் பத்திரங்களையும், பங்குப் பத்திரங்களையும் அளிக்க அவர்களுக்குள்ள வல்லமையுமே, வங்கிகள் மேற்கூறிய கடனைக் கொடுப்பதற்குக் காரணமாக அமைகின்றன. 1950 ம் ஆண்டிற்கும் 1956 ம் ஆண்டிற்குமிடையில் மொத்த வைப்புக்கும் (அதாவது காலவைப்பும் தேவை வைப்பும்), கடன் தொகைக்குமுள்ள விகிதம் 26.6 % க்கும் 40 % க்கும் இடையிலுள்ளது.

(3) அரசாங்கத்திற்குப் பணம் கடனுகக் கொடுப்பதே இலங்கையிலுள்ள வங்கிகளின் முக்கிய சேவை யெனலாம். திரைசேரி உண்டியல்களில் (Treasury Bills) முதலீடு செய்வதாலும், அரசாங்கக் கடன்களுக்குப் பணம் செலுத்துவதாலும், இச் சேவையை, வங்கிகள் புரிகின்றன. வங்கிகளது வருவாய் தரும் சொத்துக்களில் முக்கிய தனி அம்சமாக (ஏறக்குறைய மூன்றிலொரு பங்கு) இந்த அரசாங்கப் பொறுப்புக்களமைகின்றன.

வங்கிகளின் பற்பல விதமான சொத்துக்களின் முக்கியத்துவத்தைப் பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

*Please remember !*
YOU GET BETTER PICTURES & FAR BETTER VALUE FOR YOUR MONEY
AT
**STUDIO VENUS**
*Dalada Vidiya, Kandy,* **Phone 683**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கிச் சொத்துக்களின் அமைப்பு (1954 1957)
## (மார்கழித் திங்கள் 31ம் திகதியன்று — கோடி ரூபாய்களில்)

| | 1954 | | 1955 | | 1956 | | 1957 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | முழு வைப்பின் சக வீதம் | தொகை | முழு வைப்பின் சக வீதம் | தொகை | முழு வைப்பின் சக வீதம் | தொகை | முழு வைப்பின் சக வீதம் |
| (1) ரொக்கப் பணமும் மத்திய வங்கியிலுள்ள வைப்புக்களும் | 132 | 16. 6 | 170 | 18. 8 | 184 | 18. 1 | 121 | 12. 9 |
| (2) பிறநாட்டு நிலுவை | 73 | 9. 2 | 156 | 17. 2 | 98 | 9. 0 | 56 | 5. 9 |
| (3) முதலீடுகள் (திறைசேரிப் பத்திரம் உட்பட) | 310 | 39. 0 | 283 | 31. 2 | 346 | 34. 0 | 339 | 36. 2 |
| (4) மாற்றுண்டியல், கடன்கள், முற்பணங்கள் | 307 | 38. 6 | 324 | 35. 8 | 407 | 40. 0 | 453 | 48. 0 |
| (5) கூட்டுத்தொகை வைப்பு | 794 | — | 906 | — | 1018 | — | 936 | — |

(மூலம்—இலங்கை மத்தியவங்கியின் வருடாந்த அறிக்கை)



### தேசியமயமாக்கப்பட வேண்டியதற்குக் காரணங்கள்

வங்கிகளின் மேற்கூறிய கடமைகள் அரசாங்க நடவடிக்கையின் எல்லைக்குள் அடங்குவதால் அவற்றைத் தேசியமயமாக்குவதற்கு நியாயமுண்டு. ஒரு நாட்டின் பண நிரம்பலையும், கடன் வசதிகளையும், தமது இலாபத்தைப் பெருக்குவதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்ட தனிப்பட்ட வாணிகர் கையில் ஒப்படைப்பது குறைபாடுடையதென்பதே வங்கிகளைத் தேசியமயமாக்குவதற்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

வங்கிகள் தமது இலாபத்திற்கேற்ப அவ்வப்போது பணத்தொகையைப் பெருக்கியும் குறைத்தும் வருகிறார்கள். வங்கிகளின் நடவடிக்கைகள் வாணிசக் களத்தின் குழப்பமான தன்மையிலும், சர்வதேச வர்த்தகத்தின் ஏற்றத் தாழ்வுகளிலும் தங்கியிருக்கின்றன. இதற்கெதிராக வாணிக வங்கிகளின் நடவடிக்கைகளைத் தேசிய நலத்திற்கேற்ப மத்திய வங்கி கட்டுப்படுத்த முடியும் எனச் சிலர் வாதிக்கலாம். இத்தகைய அபிப்பிராயத்திற்குக் பல எதிர்ப்புகள் உள. கட்டுப்பாட்டுக்கருவிகள் எத்துணை வீறமைந்திருப்பனவாயினும், குறிப்பாகப் பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகளில், மத்திய வங்கியின் கட்டுப்பாட்டுச் சக்திகள் வரையறுக்கப்பட்டுள்ளன என்பதைப் பொதுவாக ஒப்புக்கொள்ள வேண்டும். இலங்கையின் மத்திய வங்கியின் சரித்திரமே இதற்குத் தெளிவான சான்றாக அமையும். அரசாங்க வெளியீடுகளின் வரிசையில், இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையைப் போன்ற ஓர் ஊக்கமற்ற பத்திரத்தைக் காண்பது அரிதென்றால் அது மிகையாகாது. ஓர் ஊக்கமற்ற அறிக்கையெனக் கூறுவதற்குக் காரணம், இப்பத்திரம் முறையற்றோ அன்றி மோசமாகவோ எழுதப்பட்டது என்று அல்ல. ஆனால் இவ்வறிக்கை நாட்டின் பொருள் நிலை மீதுள்ள மத்திய வங்கியினது சேவையின் பயனற்ற தத்துவத்தையும், விளைவையும் புலப்படுத்துவதால்தான். நற்பயன் விளைவிக்கும் பொருட்டு அரசாங்கம் வங்கிகளைத் தன்னுடைமையாக்கிக் கொண்டு, தேசியப் பொருளாதாரப் பொருள் நிலைக் கொள்கைகளை இணைத்து இயக்கக் கூடிய இடத்தில், அனாவசியமாகத் தனியார் நிலையங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, வீண் செலவு வாய்ந்த ஒரு நிலையத்தைப் பேணுதல் மடமையாகும். முதலாவதாக மத்திய வங்கியின் கட்டுப்பாடு நேரல்லாததும், தாமதம் வாய்ந்ததுமாயுள்ளது. அத்துடன் அத்தகைய கட்டுப்பாடு நிச்சயமாகப் பயன் விளைவிக்குமோ என்பதும் சந்தேகத்திற் குரியது. இரண்டாவதாக இத்தகைய நிலையத்தைப் பேணுதல் மிகவும் செலவானது. இச் செலவுகளை யெல்லாம் இறுதியில் நாட்டு மக்களே தாங்குகின்றனர் என்பதையும் நாம் உணரல் வேண்டும். **1956**ம் ஆண்டு இச் செலவின் தொகை ஏறக்குறைய **10** கோடி ரூபாயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தினுல் இயக்கப்படும் வங்கிகளிலும் பார்க்கத் தனியாரால் இயக்கப்படும் வங்கிகள், கூடிய திறமை வாய்ந்தவை, என்ற ஒரே காரணத்தைக் கொண்டே தற்போது விளங்கும் வங்கி ஒழுங்கு முறைகளை நியாயமானதெனக் கூறலாம். பொருளாதார, அரசியற் துறைகளிலே வங்கித் தேசியமயமாக்கம் ஒரு முக்கிய விடயமாக விளங்கத் தொடங்கிய நாள்முதல், மேலே கூறப்பட்ட காரணமே தேசியமயமாக்கத்திற்கு முக்கிய எதிர்ப்பாக இந்நாட்டிலும் பிற நாட்டிலும் கூறப்படுகின்றது.

அரசாங்கம் வங்கிகளை இயக்கவியலாதபடி வங்கித் தொழிலில் புரியாத, தனிப்பட்ட மர்மம் எதுவுமில்லை. இன்றைய அன்றாட வங்கித் தொழில் எவ்வித கடினமுமின்றி, இயந்திரம்போல் இயங்கி வருகின்றது. மேலும் ஏனைய கைத்தொழில்களைப் போலல்லாது வங்கித் தொழிலில் அதற்குரிய நுட்ப அறிவு இல்லை யென்பது இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு முட்டுக்கட்டையல்ல.

ஆகவே அரசாங்க முயற்சிக்கும், அரசாங்கத் தனியுரிமைக்கும், பொதுவாக, எதிராக வாதிக்கப்படும் காரணங்கள் மட்டுமே, தேசியமயமாக்கத்திற் கெதிராகவும் அமையும். இதுவே வங்கித் தேசியமயமாக்கத்திற் கெதிராகப் போராடுவோரின் பிரதமவாதமாகவும் திகழ்கின்றது. இக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டே, 1957 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம், 4 ம் தேதி ''மோனிங் டைம்ஸ்'' (Morning Times) என்ற ஆங்கிலக் காலைப் பத்திரிகையில், ஒரு விசேட நிருபரால் கட்டுரையொன்று வரையப்பட்டது.

### வங்கிகளும் கடன் வினியோகமும்

அரசாங்க முயற்சி தனியார் முயற்சியிலும் பார்க்கத்திறமை குறைந்ததெனக் கூறுவதற்குச் சிறப்பான காரணம் எதுவுமில்லை. இவ்விரு அமைப்புக்களின் திறமையும், ஈற்றில் அவற்றைக்கொண்டு நடாத்துவோரின் திறமையிலும், ஒத்துழைப்பிலும் தங்கியிருக்கின்றது. உதாரணமாக இலங்கை வங்கியின் முதலதிபர் தேசியமயமாக்கப்பட்ட வங்கிச் சங்கத்தினுல் வேலைக்கமர்த்தப் பட்டால் அவரது திறமை குன்றி விடுமென்று நம்புவதற்கிடமில்லை. திறமையில்லாவிடின் வேலையிலிருந்து நீக்கப்படுவோம் என்ற பயம் இவ்வதிபருக்கு எப்போதும் இருக்கத்தான் செய்யும். உடமை மட்டுமே திறமைக்குத் தூண்டுகோளாயுள்ளது என்ற நியாயம் சிறிய தனியார் தொழில்கள் அமைந்த பொருளாதாரத்திற்குப் பொருந்துமேயல்லாது, பெரும் சங்கங்களும், தனியுரிமைகளும் (Monopolies) நிறைந்த பொருளாதாரச் சூழலுக்குப் பொருந்தாது. ஏனெனில்



இத்தகைய பெரிய ஸ்தாபனங்களின் அன்றாட நடவடிக்கைகள் சம்பளங் கொடுத் தமர்த்தப்பட்ட நிர்வாகிகளின் மேலேயே தங்கி உள்ளன. அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளைத் தேசிய உடமையாக்குவதின் நலத்தைக் கொள்கையளவில் ஒப்புக்கொள்கின்றது. ஆகவே, வங்கித் தேசியமயமாக்கத்திற்கு எதிராக மேற்கூறிய காரணங்கள் எதுவும் அமையமாட்டா.

வங்கித் தொழிலில் தனியுரிமை யெழும் என்ற பயம் அதன் தேசியமயமாக்கத்துடன் நெருங்கிய சம்பந்தம் படைத்ததாகும். வங்கித் தனியுரிமை அரசாங்கத்திடம் இருக்குமாயின், அரசாங்கம், தன்னை விரும்புவோரைப் பேணவும், எதிர்ப் போரை நசுக்கவும் இச் சக்தியைப் பாவிக்கலாம் எனச் சிலர் விவாதிக்கின்றனர். ஆனுல் இங்ஙனம் வாதிப்போர் அரசாங்கத்தின் தனியுரிமையிற்றுன் நாணயம், அந்நியச் செலவாணி, போக்குவரத்து, மின்சாரம், உப்பு, சாலைகள், பாலங்கள் முதலியன இருக்கின்றன என்பதையும், அரசாங்கம் தான் ஏற்றுமதி, இறக்குமதி அனுமதிச் சீட்டை வழங்குகின்றதென்பதையும் மறந்து விடுகின்றுர்கள். அரசாங்கமெனின் சக்தியென்று பொருள். அதாவது மனிதரையோ, ஸ்தாபனங்களையோ அழிக்கவும், ஆக்கவும் வல்லமை கொண்டது. நமது அரசாங்கத்திற்குக் கைக்கூலிவாங்குதல், தனிச் சலுகை காட்டுதல், அரசியற் பழி வாங்குதல் முதலிய ஊழல்கள் புதியனவல்ல. இவற்றைத் தடுப்பதற்கு அறிவுரைபெற்ற மக்கள் கருத்தும், உண்மையான பிரதிநிதித்துவம் வாய்ந்த அரசாங்கமுமே வல்லன. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் குறிப்பிட்ட சில ஸ்தாபனங்களுக்குப் பராபட்சம் காட்டிக்கடன் வசதிகளை மறுக்கக் கூடுமென்று கூறுவது, தேசிய மயமாக்கப்பட்ட போக்குவரத்துச் சேவை, சிவப்புச்சட்டை தரித்த பிரயாணிகளையேற்றிச் செல்லமாட்டா என்று கூறுவதையோ, அன்றித் தேசியமயமாக்கப்பட்ட துறைமுகம் உயர் தரத்தேயிலையை ஏற்றுமதி செய்யமாட்டா எனக் கூறுவதையோ ஒக்கும். இத்தகைய இடையூறுகள் ஏற்படக் கூடுமாயினும் அவற்றை நீக்குவது திறமையுள்ள அரசாங்கத்தின் கடமையாகும்.

இன்றைய நமது வங்கிகள் திறம்பட இயங்கிவருமாயின் தனியார் உடைமையில் வங்கிச்சேவை மிகத்திறமைவாய்ந்ததாய் இருக்கும் என்ற கூற்று ஓரளவு பொருந்தும். தனியாரால் இயக்கப்பட்ட வங்கிகளே திறமை வாய்ந்தவை என்று வாதிப்போர் கூட, ஒரு சில பிறநாட்டு வங்கிகளையும், ஒரேயொரு உள்நாட்டு வங்கியையுமுடைய எமது வங்கிச் சேவையின் தன்மையைச் சிறந்ததாகக் கூற மாட்டார்கள். பல வருடங்களாகப் பிறநாட்டு வங்கிகள் நம் நாட்டின் கடன் நிலை மீது முக்கிய பிடி வைத்திருக்கின்றன. உள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டு நாணயச் சந்தை மீது இவ் வங்கிகளுக்குள்ள தனியுரிமை யாதிக்கத்திற்கு இவர்களது கடுமையான வட்டிவீதமும், உயர்ந்த வங்கிச் சலாருமே, ஒரு சில சான்றுகளாக அமைகின்றன. இத் தகைய தனியுரிமைச் சேவையின் முக்கிய விளைவாக ஒருசில ஐரோப் பியத் தொழிற்சாலைகளுக்கும் சில தோட்டங்களுக்கும் மட்டுமே நியாயமான பேரத்திற்குக் கடன் கொடுக்கப் பட்டது. இலங்கை வங்கி நிறுவப்பட்ட பின்பே இதுவரை கடன் வசதி மறுக்கப்பட்ட பல இலங்கை வணிகருக்கு அவ்வசதியளிக்கப் பட்டது. எனினும் இவ்விலங்கை வங்கியினியக்கம், மரபுமுறைச் சட்டங்களுக்கும் பழைய முறைகளுக்கும் அடங்கிய வாணிக வங்கித் தொழிலாலும், வளர்ச்சிகுன்றிய எமது பொருளாதாரச் சூழலாலும் தடைப்படு கின்றது. இதன் காரணமாக வங்கி வசதிகள் சனத்தொகையின் மிகச் சிறிய பகுதியினருக்கே எட்டக் கூடியனவாக இருக்கின்றன வென்பது வெளிப்படையான உண்மை.

## பொருளாதாரத் திட்டமும் வங்கிச் சேவையும்

வங்கித் தேசியமயமாக்கம் எனும் பொருளைப் பிரித்தெடுத்து ஒரு தனிப் பிரச்சனையாக ஆராய முடியாது. இப் பொருளைத் தேசியப் பொருளாதாரத் திட்டம் எனும் பெரும் பிரச்சினையின் ஒரு பகுதியாகக் கொள்ளல் வேண்டும். இந்நிலையில் இதுவரை கூறப்பட்ட வாதங்கள் யாவும் இக்காலத்திற் குதவாத வெறும் ஏட்டுச் சுரக்காய்களாகவே திகழ்கின்றன. நம் நாட்டிற் பொரு ளாதாரத் திட்டங்கள் அரை குறை மனத்துடனும், தயக்கத்துட னும் நோக்கப்பட்ட காலத்திற்கே மேற்படி வாதங்களுரியன. நாட் டின் முக்கிய பொருளாதாரப் பிரச்சனைகள் மீது பயனேதும் விளை விப்பதாயிருந்தால், கடந்த பத்து வருடகாலமாகத் தீட்டப்பட்ட கேவலமான சிறு சிறு திட்டங்களைக் கைவிட்டு, பெருமளவில் துணி கரமானதும், கற்பனைச் செறிவுமுடைய திட்டமே தேவையென் பதை இன்று யாவரும் மென்மேலு முணருகின்றனர். இதனையே பொதுமக்கள் கோருகின்றனர். அதனை அளிப்பதாகவும் அரசாங் கம் வாக்குறுதி யளித்திருக்கிறது. இத்தகைய சமவுடைமைப் பொருளாதாரத் திட்டமொன்றிற்கு உற்பத்தி, வினியோகம், பண்ட மாற்றுதல் முதலியனவற்றின் தேசியமயமாக்கம் அடிப்படை யாக அமைய வேண்டும். திட்டமிடுதலென்பது மக்களின் வாழ்க் கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு அரசாங்கம் தேவையான பொருட்களைக் குறிப்பிட்ட தொகையில் உற்பத்தி செய்வதே யாகும். இத்தகைய திட்டத்தில் பணம், கடன் வசதி முதலிய வற்றின் கடமையும், சேவையும் யாதெனில், உற்பத்திக் கருவிகளை வாங்குவதற்கும், நுகர்வோரால் இறுதியில் வாங்கப்படு முன்



இடையிலேற்படும் பண்டமாற்றங்களுக்கும், உதவி புரிவதேயாகும். நிதி தேவைப்படுதலுக்கு இரு காரணங்களுண்டு.

(1) கூலி, முதற் பொருட்கள் (Capital goods) மூலப் பொருட் கள், (Raw materials) முதலியனவை வாங்குவதற்கு உதவுகின்றது.

(2) ஆக்கப்பட்ட பொருள்களை உற்பத்தித் தொகுதியின் வேறொரு பகுதிக்கு, விற்பதற்கு நிதியுதவுகிறது.

எனவே பொருளாதாரத் திட்டம், பொருள் நிலைத் திட்டத்தையும் உட்படுத்தும். இது அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில், அபிவிருத்திக்கென இப்போது ஒதுக்கப்படும் தொகை யினும் பார்க்கப் பன்மடங்கு பெரிதான செலவைக் கொடுக்கும்.

அரசாங்கம் தனது செலவிற்குரிய முதலிற் பெரும் பகுதியைக் கடன் வாங்குவதன் மூலம் பெறுகின்றது. அது வங்கிகளுக்கே அதிகமாகக் கடன்பட்டிருக்கின்றது. 1956ம் ஆண்டு மார்கழி மாதத்தின் முழுக்கடன் தொகையான 971 கோடி ரூபாவில் மூன்றி லொன்றிற்கு மேலான 346. 3 கோடி ரூபாய் வங்கிகளுக்குக் கடனாக அமைந்தது. இதற்கு வட்டியாகப் 10 கோடி ரூபாய் கொடுத்தது. இப்படியாகக் கொடுக்கப்பட்ட இவ்வட்டித்தொகை, அத்தியாவசியம் என்ற அடிப்படையில், நியாயமெனக் கூற முடி யாது. என்ன விருந்தும் பண உற்பத்தியில் அரசாங்கமே முதன் மையான அதிகாரி. இதுவே சட்டமுறைப் பணத்தை வழங்கு கின்றது. தனக்கே பணவுற்பத்தி செய்யும் அதிகாரம் இருக்கும் போது, வங்கிகளினுல் ஆக்கப்படும் வைப்புகளுக்கு வட்டி கொடுக்க வேண்டிய அவசியமில்லை. பெரும்பாலும் வட்டியின்றியே மக்க ளிடமிருந்து வங்கிகள் சேர்க்கும் பணவைப்புகளுக்கு அரசாங்கம் வட்டி கொடுப்பது நியாயமுமில்லை. உறுதியான அரசாங்கத் திட் டத்தினுலேற்படும் கூடிய அரசாங்கச் செலவினுல் அரசாங்கத்தின் பொதுக்கடனும் அதிகரிக்கும். இத்தொகையில் ஒரு பகுதிக் கேனும் வங்கிகளுக்கு வட்டி கொடுப்பது அரசாங்கத்தின் மீதும், பொது மக்கள் மீதும் தேவையற்ற வீண்சுமையாய் அமையும்.

இலக்கணக் கூற்றின்படி, பொருளாதாரத் திட்டமெனின் நாட்டின் பொருளாதாரத்தின் மூல பகுதிகளை அரசாங்க முயற்சி யின்கீழ் உள்ளடக்குவதே யாகும். இது, பொருளாதார முன்னேற் றத்தின் அடிப்படையான முயற்சிக்குத் தனியார் இலாபம் இடை யூறுனதென ஒப்புக்கொள்கின்றது. தனியார் முதலாளித்துவத்தின் சுராஜகத்திற்கும், வளர்ச்சியின்மைக்கும் ஈடாகத் திட்டமிட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியும், வினியோகமும் அமைகின்றன. இத்தகைய திட்டத்தின் கீழ் உற்பத்தியின் பொருட்டு, நெடுங்கால மூலதனமும், குறுகிய கால மூலதனமும் எளிதாகச் சரியான துறைகளுக்குத் தேவையான சந்தர்ப்பத்திற் கிடைக்கக் கூடிய நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். தற்போதைய வங்கியமைப்பு மேற்கூறிய கடமையைச் செய்வதில் இதுவரை தவறிவிட்டது. வருங்காலத்தில் வெற்றி பெறக் கூடுமென எதிர்பார்ப்பதற்கும் காரணமில்லை. இலாபத்தையே குறிக்கோளாகக் கொண்டு நஷ்ட பயம் குறைந்த, இலாபம் மிகுந்த பகுதிகளுக்கே கடன் வினியோகம் செய்யப்பட்டிருக்கின்றது. நமது வங்கிகள் கடன் வினியோகம் செய்கையில் முற்றிலும் வேற்றுமை வாய்ந்த பொருளாதாரச் சூழ்நிலையுடைய ஆங்கில நாட்டு வாணிக முறையைப் பின்பற்றியுள்ளன. ஒரு சில நிலையங்களினால் மட்டுமே அளிக்கத்தக்க பிணைகளைத் தரும்படி எமது வங்கிகள் கடன் கேட்போரை வற்புறுத்திக் கேட்கின்றன. வளர்ச்சி குன்றிய பொருளாதாரத்தில் தகுதிவாய்ந்த நிலையங்களின் எண்ணிக்கை குறைவு. இத்தகைய நிலையங்கள் இருப்பினும் அவை பெரும்பாலும் பிற நாட்டார் உடைமையில் உள்ளன.

திட்டமிட்ட பொருளாதாரத்தில், உடனடியாக இலாபத்தைக் காட்டும் என்ற காரணத்திற்காக முயற்சிகளைத் தொடங்குவதில்லை. நாட்டின் பொருளாதார நெடுங்கால நலத்தின் பொருட்டே இவ் வேற்பாடுகள் ஆரம்பிக்கப்படுகின்றன. உதாரணமாக எமது தற்போதைய கடனேற்பாட்டின் கீழ் ஒரு படமாளிகை உரிமையாளருக்கு உடனடியாகக் கடன் அளிக்கப்படுகின்றது. ஏனெனில் இத்தகைய முயற்சி உடனடியாக இலாபத்தைத் தருகின்றது. ஆனால் புதிதாக நிர்மாணிக்கப்படும் சப்பாத்துத் தொழிற்சாலையுரிமைக்காரருக்குக் கடன் கிடைப்பது அரிது. ஒரு வர்த்தக ஸ்தாபனத்தின் கடன் தராதரத்திற்குத் தக்க அத்தாட்சி, அந் நிலையத்தின் ஐந்தொகை (Balance Sheet) என்பதே நம் வாணிக வங்கிகளின் நம்பிக்கை. பொருளாதாரத் திட்டம் இத்தகைய கொள்கையை முற்றாக நிராகரிக்கிறது.

நாட்டின் பணம் கடன் வசதிகள் தனியார் உடைமையாகவும், அவர் கட்டுப்பாட்டிலும் இருக்கும்வரை எத்திட்டமும் வகுக்க முடியாது. பொருளாதாரத் திட்டத்திற்கு வங்கித் தேசியமயமாக்கம் அவசியம். இது ஏனெனில் திட்டமிடுவோர் நிதி மூலங்களை எளிதாகவும், மலிவாகவும் பெறவேண்டுமென்பது மட்டுமல்லாது, தேசியத்திட்டத்திற் கொப்பக் கடன் வினியோகம் அவசியம் என்பதனாலுமாகும். கடன் வசதி நிலையங்கள் தனியாருடைமையிலிருப்பின் இரு திட்டங்கள் உருவாகும் நிலைமை ஏற்படும்:- (1) வங்கித் திட்டம் (2) அரசாங்கத் திட்டம். இத்தகைய நிலைமையில் கடனமைப்பு வங்கிகளினுடைமையிலிருப்பின் வங்கித்திட்டமே முக்கியத்துவம் அடையும் என்பதில் ஐயமில்லை.



# பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையும் * எமது பொருளாதார வளர்ச்சியும்

S. இராசரத்தினம்

## வெளிநாட்டு வணிகம்

1931 ஆம் ஆண்டளவில் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலமாக நடந்து வந்தது. ஒரு சில இடையீடுகளைத்தவிர இப்பயிர்ச்செய்கை தொடர்ச்சியாக வளர்ச்சி பெற்று வந்தது. 1830 ஐ அடுத்த வருடங்களில் முதன் முறையாகக் கோப்பி முறையாகப் பயிரிடப்பட்டது. அதனை இலை நோய் பீடித்த காலத்தில் 250,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் கோப்பி விளைவிக்கப்பட்டது. கோப்பிப் பயிர்ச்செய்கை குன்றியதன்பின் தேயிலை முக்கிய விளைபொருளாக இடம்பெற்றது. 1900 ஆம் ஆண்டளவில் கோப்பி விளைநிலம் முற்றும் தேயிலை விளைநிலமாக மாற்றப்பட்டதுமல்லாமல் மேலும் 100,000 ஏக்கர் நிலத் தேயிலை பயிரிடப்பட்டது. இந்நூற்றாண்டு முடிவில் இலாபகரமாகத் தேயிலை விளைவிக்கும் இறுதிநிலை ஏற்பட்டது. எனவே இறப்பர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது. இதனால் தோட்டப் பயிர்ச்செய்கை மேலும் வளர்ச்சிகண்டது. 1931 ஆம் ஆண்டில் பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலத்தில் தேயிலையும், இறப்பரும் விளைவிக்கப்பட்டன. இதனோடு பல ஏக்கர் நிலத்தில் தென்னையும், கொக்கோவும் பயிரிடப்பட்டன.

தோட்டப் பகுதியில் ஏற்பட்ட இவ்வளர்ச்சி இந்நாட்டின் முழுப் பொருளாதாரத்தையும் பாதித்தது. பெருகி வரும் வெளிநாட்டு வணிகம் இதனைத் தெளிவாகக் காட்டுகிறது. ஆரம்பகால முதல் வெளிநாட்டு வணிகத்திற் பெருந் தோட்டப் பயிர்ச்செய்கை முக்கியத்துவம் பெற்று விளங்கியது. 1860 ஐ அடுத்த ஆண்டுகளில் ஏற்றுமதிப் பொருட்களில் கோப்பி 60 வீதமாக இருந்தது. மிகுதி 40 வீதம் பல்வேறு வகைப்பட்ட சிறு தொகைகளான பொருட்களைக் கொண்டிருந்தது. தேயிலைப் பயிர்ச் செய்கையின் ஆரம்பகாலத்தில் இது எமது வெளிநாட்டு ஏற்றுமதியில் ஐந்தில் மூன்று பங்காக இருந்தது. காலப்போக்கில், எமது ஏற்றுமதிகளில் இறப்

---

* Plantation Agriculture and Our Economic Growth
By S. Rajaratnam B.A. (Hons)
Asst. Lecturer in Economics, University of Ceylon

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரும் பெருமிடம் பெறத்தொடங்கியது. அதே சமயத்தில், சிறு தொகைகளாக ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுக்குப் பதிலாகத்தெங்குப்பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இந்த நூற்றாண்டின் முடிவில் பாக்கு, கறுவா, சிங்கோனா, கொக்கோ என்பன வெளிநாட்டு ஏற்றுமதியில் ஒவ்வொன்றும் ஒரு வீதத்திற்குக் குறைவாக இருந்தன.

பிரதான ஏற்றுமதிப் பொருளான தேயிலையுடன் இறப்பர் பெருமளவிற் போட்டியிட்டு வந்தது. 1916 ஆம் ஆண்டில் முதன் முறையாகத் தேயிலையிலும் பார்க்க இறப்பர் பெருந் தொகையாக ஏற்றுமதி செய்யப் பட்டது. ஏற்றுமதிப் பொருள்களின் பெறுமதியில் இறப்பர் 37. 5 வீதமாகவும், தேயிலை 35. 4 வீதமாகவும் இருந்தன. இக்காலப் பகுதியில் தென்னைப் பொருள்களும் முக்கியத்துவம் பெற்றன. யுத்தகால முடிவில் தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள்கள் என்பன இலங்கையின் ஏற்றுமதியில் 90 வீதமாக இருந்தன. இந்நிலைமை அன்று தொட்டுத் தொடர்ச்சியாக நிலைத்துள்ளது. இச்சூழ் நிலையில் இலங்கையின் பொருளாதாரம், உலகச் சந்தையில் இவ்வேற்றுமதிப் பண்டங்களுக்குக் கிடைக்கும் விலைவாசிகளைப் பொறுத்துள்ளது.

1872—1892 காலப்பகுதியில், தோட்டப் பகுதியின் பிரதான விளைபொருளாகக் கோப்பி வகித்த இடத்தைத் தேயிலை பெற்றது. 1911—1920 காலப்பகுதியில், மற்றொரு முக்கிய விளைபொருளாகிய இறப்பரும், தெங்குப் பொருளும் பெருந் தொகையாக ஏற்றுமதி செய்யப்பட்டதின் விளைவாக வணிகம் விரைவாக வளர்ச்சியடைந்தது. 1921—1931 காலப் பகுதியில், இந்நாட்டின் வணிகம் ஏற்றுமதி செய்யப்பட்ட முக்கிய விளைபொருள்களில் தங்கியிருந்தது. பொருளாதாரச் செழிப்பு நிலவிய 1925, 1926, 1927 ஆம் ஆண்டுகளிற் கிடைத்த ஏற்றுமதி வருவாய் 1931 இல் அரைப் பங்கிற்குக் குறைவாகக் குன்றியது.

வெளிநாட்டு உணவுப் பொருள் இறக்குமதி இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தை வகித்து வந்தது. ஏற்றுமதி அதிகரித்ததின் விளைவாக இவை பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டன. 1870 ஐ அடுத்த வருடங்களில் இலங்கையின் இறக்குமதிப் பொருள்களில் நாலில் மூன்று பங்கு உணவுப் பொருள்களாக இருந்தன. அவற்றுள் அரிசி, கருவாடு, மீன், வாசனைப் பொருள்கள் என்பன முக்கிய பொருள்களாகும். இறக்குமதிப் பொருள்களில் அரிசி 50 வீதமாக இருந்தது. இக்காலப் பகுதியிலும் இந்நிலை தொடர்ந்து நிலவி வருகிறது. தோட்டத் தொழிலாளரின் தொகை அதிகரித்ததும் இதற்கு ஒரு காரணமாகும்.



உள் நாட்டு நெற்பயிர்ச் செய்கை வளர்ச்சியடையாத காரணத்தினால் இங்கு உற்பத்தியைப் பெருக்குவதிலும், இறக்குமதி செய்வது விரும்பப்பட்டது.

வெளி நாட்டு வணிகப் புள்ளி விபரங்கள் ஏற்றுமதிக்கும், இறக்குமதிக்குமிடையே உள்ள நெருங்கிய தொடர்பைக் காட்டுகின்றன. ஏற்றுமதிப் பொருளை உற்பத்தி செய்த தோட்டப் பகுதிக்கும், இறக்குமதிப் பொருள்களுக்குக்காரணமாக விருந்த உள்நாட்டுப் பயிர்ச்செய்கைக்கு மிடையே உள்ள நெருங்கிய தொடர்பு கோப்பிக்காலத்திலேயே புலப்பட்டது. தோட்டப் பயிர்ச்செய்கையில் உண்டாகும் வளர்ச்சி, தேய்வு என்பன இந்நாட்டு மக்களை நேரடியாகப் பாதித்தன. எனவே 1920 ஐ அடுத்த ஆண்டுகளில் இறக்குமதித் தொகை, ஏற்றுமதியில் உண்டான வளர்ச்சி தேய்வு ஆகியவற்றைப் பொறுத்திருந்தது. 1931 இல் 218, 702, 681 ரூபாய் பெறுமதியான பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் 1929 இல் 403,490,623 ரூபாய் பெறுமதியான பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. மக்களுக்கு இன்றியமையாத உணவுப் பொருளான அரிசி இறக்குமதித் தொகை குறையா விடினும், விசுக்கோத்து, சைக்கிள், தையற்பொறி, மலிவான யப்பானியப்பட்டுப் புடவைகள், விளக்குகள் என்பன குறைவாக இறக்குமதி செய்யப்பட்டன. பொருளாதார மந்தம் ஏற்பட்ட போதிலும் அரிசி மேலும் அதிகமாக இறக்குமதி செய்யப்பட்டது. மக்களின் வருமானம் குறைந்ததால் விலை கூடிய உணவுப் பொருள்களை விடுத்துப்பிரதான உணவுப் பொருளான அரிசியை மக்கள் உபயோகித்ததே இதற்குக் காரணமாகும்.

மேலும் வெளிநாட்டு வணிகப் போக்கு நீண்ட காலத்திற்கு எதுவித மாற்றமு மில்லாதிருந்தது. கோப்பிப் பயிர்ச் செய்கை தொடங்கிய காலமுதல் முதலாவது உலக யுத்தம் ஆரம்பமாகும் வரை இலங்கையின் பண்டங்கள் பெரும்பாலும் பிரித்தானியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஏற்றுமதிப் பொருள்களில் ஏறக்குறைய அரைப்பங்கு பிரித்தானியாவுக்குச் சென்றது. எஞ்சிய பகுதி பொதுநலவமைப்பு நாடுகளுக்கும் ஏனைய நாடுகளுக்கும் சமமாக ஏற்றுமதி செய்யப்பட்டது. அரிசி உட்படப் பெருந் தொகையான பொருள்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. சராசரியாகப் பார்க்கின் பிரித்தானியாவிலிருந்து ஐந்தில் ஒரு பங்கும், ஏனைய நாடுகளிலிருந்து மூன்றில் ஒரு பங்கும் இறக்குமதி செய்யப்பட்டன.

யுத்தத்தின் பின்பும் இவ் வெளிநாட்டு வணிகப் போக்கு மாற்றமடையவில்லை. இலங்கைத் தேயிலையில் 60 வீதம் பிரித்தானியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆயினும் எமது மொத்த ஏற்றுமதியில் ஏறத்தாழ 40 அல்லது 50 வீதமே பிரித்தானியாவுக்குச் சென்றது. அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு இறப்பர் முக்கியமாக ஏற்றுமதி செய்யப்பட்டதின் விளைவாகப்பிரித்தானியாவை விடுத்து, ஏனை நாடுகளிடமிருந்தும் பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டது. யப்பானிலிருந்தும் பெருந்தொகையான மலிவான புடவைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

## உள் நாட்டுச் சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சி

பென்சிற் கல்லைத் தவிர வர்த்தக நோக்குடன் விருத்தி செய்யக்கூடிய வேறு உலோகவளம் எதுவும் எமது நாட்டில் இல்லாததினுலும், மீன்பிடித் தொழில்கூட வருணத்தடைகளாலும், சாதி வித்தியாசக் கோளாறுகளினுலும் வளர்ச்சி குன்றி இருந்தமையாலும், இலங்கையிற் பெரும்பாலோர் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். 1931 ஆம் ஆண்டு வரையப்பட்ட குடிமதிப்பின்படி அன்று இலங்கையில் வாழ்ந்த 5,300,000 மக்களில் 86. 8 வீதம் (அதாவது 4, 600,000) கிராமவாசிகளாகவே இருந்தனர். இவர்களுள் பெரும்பாலோர் முற்ருக நெற்பயிர்ச் செய்கையி லீடுபட்டிராவிடினும் பொதுவாகப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். 1921 ஆம் ஆண்டின் குடிமதிப்பின்படி, அவ்வாண்டின் சனத்தொகையில் 36 வீதம் (அதாவது 1,603,254) நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தது. துரதிட்டவசமாக 1931 ஆம் வருடத்தில், அவ்வருட மேற்பட்ட பொருளாதார மந்தத்தினுலும், பரிபாலன அதிகாரிகள் தொகை குறைக்கப்பட்டதினுலும், நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டோரது தொகை கணக்கிடப்படவில்லை. எனினும் இப்பத்து வருடங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் தொழிலமைப்பில் ஏற்படவில்லை எனக் கொள்ளலாம். ஏனெனில் தொழிலமைப்பில் மிக மெதுவாகவே மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆகவே 1896—1931 காலப்பகுதியில் தொழிலமைப்பு ஒரே ஸ்திரமான நிலையில் இருந்ததெனலாம். குறிப்பிட்ட துறைகளுக்குத் தேவைப்பட்ட கூடிய தொகையான மக்கள் பெருகி வரும் சனத்தொகையிலிருந்து பெறப்பட்டமையால் மேலோட்டமாகத் தொழில் நிலையில் முக்கிய மாற்ற மேதும் ஏற்படவில்லை.

பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்த சரியான மக்கள் தொகையை வரையறுத்துக் கூறுதல் கடினம். ஏனெனில் இலங்கையின் குடிமதிப்புப் புள்ளி விபரங்களில் சில குறைபாடுகள் உள. (1) இதிலிருந்து தொழில் வர்க்கங்கள் பற்றிய விபரங்கள் சரியாக அறிய முடியாது இருக்கின்றது. 1881 ஆம் வருடக் குடிமதிப்பில், பிரத்தியேக தொழில்கள் எதுவுமின்றி வீட்டுப் பணியில்



ஈடுபட்டிருந்த மனைவிமார்களும் ஏனைய மாதர்களும் ''வீட்டுப் பணி'' என்னும் பகுதியின் கீழ் கொண்டுவரப்பட்டனர். பதினுன்கு வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் ''வரையறுக்கப்படாத அல்லது உற்பத்தியில் ஈடுபடாத'' பிரிவிற் சேர்க்கப்பட்டனர். மக்கள் ஈடுபட்டிருந்த தொழில் அல்லது சேவையை அடிப்படையாகக் கொண்டு இப்பிரிவுகள் வகுக்கப்பட்டன. ஆனுல் 1891 ஆம் வருடம், இம்முறையைக் கைவிட்டு வேருேர் முறையைக் கையாளத் தொடங்கினர். இப்புது முறையின் கீழ் வருமான மளிக்கும் தொழிலேதும் புரியாத மனைவிகளும், மக்களும், அவர்களைக் காப்பாற்றுபவர் எத்தொழில் புரிகிருரோ அத்தொழிலின் பிரிவின் கீழ் அடக்கப்பட்டனர். எனவே இத்தொழிற் பிரிவுகள் அவ்வத் தொழில்களில் ஈடுபட்டிருந்த மக்களின் தொகையை மட்டும் காட்டாது, முழுச்சனத் தொகையும் எவ்வெத் தொழிலில் தமது வாழ்விற்குத் தங்கியிருக்கின்றனர் என்பதைக் காட்டின. எனவே விவசாயி என்ற பிரிவில் விவசாயத்தில் ஈடுபட்டிருந்த ஆண்களின் எண்ணிக்கை மட்டும் கொடுக்கப்படாது, இவ்விவசாய வருமானத்திற்றங்கி வாழ்க்கை நடாத்திய பெண்கள், பிள்ளைகள் ஆகியோரின் எண்ணிக்கையும் சேர்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதே முறையைத்தான் 1901 ஆம் வருடக் குடிமதிப்பும் கையாண்டுள்ளது.

இம்முறையின்படிக் குடிமதிப்பிடுதலில் குறைபாடுகள் உள. உதாரணமாக இருபாலாரும் ஈடுபட்டிருக்கும் ஒரு தொழிற்பிரிவு, தமக்கென ஈடுபட்டிருக்கும் பெண்களின் தொகையை, அத்தொழில் புரியும் ஆடவர் மேற்றங்கியிருக்கும் பெண்களின் தொகையிலிருந்து வேறுபடுத்திக் காட்டத்தவறுகிறது. 1891 ஆம் வருடக் குடிமதிப்பில், ''வீட்டுப்பணிப் பிரிவு,'' ''வரையறுக்கப்படாத பிரிவு'' ஆகியன தவிர்ந்த ஏனைய தொழிற் பிரிவுகளில் அடங்கியோரின் எண்ணிக்கை கூடியது. 1881 ஆம் வருடத்தில் மேற்குறித்த பிரிவுகள் இரண்டும் மொத்த சனத்தொகையில் 67. 4 வீதத்தினரைக் கொண்டிருந்தது. அப்போது இப்பிரிவுகளில் பதினுன்கு வயதுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளும் வீட்டுப்பணியில் ஈடுபட்டிருந்த மனைவியரும், ஏனையபெண்களும் சேர்க்கப்பட்டிருந்தமையே இதற்குக் காரணமாகும். ஆனுல் 1891 ஆம் வருடக் குடிமதிப்பில் இவர்கள் வேறு பிரிவுகளிற் சேர்க்கப்பட்டதால், ''வீட்டுப்பணிப்பிரிவு,'' ''வரையறுக்கப்படாதபிரிவு'' ஆகியனவற்றில் அடங்கியோரது எண்ணிக்கை குறைந்தது. அதே சமயத்திற் குறிப்பிட்ட தொழில்களிற்றங்கியிருந்த பெண்கள் பிள்ளைகளின் எண்ணிக்கையால் ஏனைய பிரிவுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது

(2) 1931 ஆம் வருடம் வரையிலுள்ள சகல குடிமதிப்புக்களிலும் உள்ள மற்றதோர் பெருங்குறைபாடு வருமாறு :-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் வாழ்வின் ஊதியத்துக்கு வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தோரும் விவசாயப்பகுதியில் கணக்கிடப்படுதல் வழமையாக விருந்தது. ஏனென்றால், அன்றாட சீவியத்துக்கு வேறு தொழில்களில் ஈடுபட்டிருப்பினும், புத்த மதத்தில் விவசாயத்திற்குள்ள தனி மகிமையின் காரணமாகச், சகலரும் தம்மை விவசாயிகள் என்றே அழைத்துக் கொண்டனர். **(3)** குடிமதிப்புப் புள்ளி விபரங்களின் தெளிவின்மைக்கு மற்றுமொரு உதாரணமும் உண்டு. தெங்குத் தொழிலில் ஈடுபட்ட சகலரும் விவசாயிகளாகவே கணிக்கப்பட்டனர். ஆனால், துணைத் தொழில்களான பறித்தல், உரித்தல், கயிறு திரித்தல், எண்ணெய் எடுத்தல், சாராயம் வடித்தல் ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தோர் நிலத்துடன் கொண்டிருந்த தொடர்பு மிகவும் மறைமுக மானதாகையால் விவசாயப்பிரிவில் இவர்களையும் சேர்ப்பது பிழையன்றோ! நிலையான தொழிலற்ற மக்கட் தொகுதியை ஒரு குறிப்பிட்ட பிரிவினுள் அடக்க முடியாதாகையால், இவ்வாறு விவசாயப்பிரிவு, விவசாயந்தவிர்ந்த ஏனைய பிரிவு எனப் பகுத்துக் கூறல் கடினமாகும். குடிமதிப்புக்களில் காணப்படும் இக்குறைகளைக் கவனத்தில் வைத்துக் கொண்டு 1886–1931 காலப்பகுதியின் மக்களின் தொழிற் பிரிவுகள் பற்றிக் கீழ்க்காணும் முடிவுகளுக்கு வரலாம்.

I. பயிர்ச் செய்கையி லீடுபடாத மக்கள் தொகை — குடித்தொகையில் 12 தொடக்கம் 15 வீதம் வரை பயிர்ச் செய்கையில் ஈடுபடாது பெரும்பாலும் நகரங்களில் வாழ்ந்தனர். இவர்களில் பெரும்பாலோர் அரசாங்க அல்லது வர்த்தக தாபனங்களிலும் போக்குவரத்துச் சேவையிலும் இலிகிதர்களாகவும், தொழிலாளர்களாகவும் கடமையாற்றினர்.

II. பயிர்ச்செய்கையில் ஈடுபட்ட பிரிவு—(ஏற்றுமதிப்பகுதி) 15 தொடக்கம் 20 வீதம் வரை தோட்டங்களில் தொழில் புரிந்தனர். இவர்களிற் பெரும்பாலோர் இந்திய வம்சாவழி வந்தவராவர். சிறு தோட்டங்களை வைத்திருந்தோரும் இப்பிரிவினுள் அடங்குவர். வர்த்தக விளைபொருள்களை உற்பத்தி செய்யும் இவர்கள் சமீபகாலத்திற் றோன்றிய ஒரு பிரிவினராவர்.

III பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட பிரிவு – (ஏற்றுமதி செய்யாத பகுதி) 35 அல்லது 40 வீதமான மக்கள் எமக்கு வேண்டிய அடிப்படை. உணவுப் பொருட்களாம் நெல், சோளம், கிழங்கு வகை, காய்கறி போன்றவற்றை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தனர். இவை பாரம்பிரிய பயிர்ச் செய்கைகளாகும். இவற்றுள் உணவுப் பொருள் பயிர்ச் செய்கையே முக்கியமானது.



I . துணைத் தொழில்கள் — இத்துறையில் 30 தொடக்கம் 35 வீதம் வரை மக்கள் ஈடுபட்டுள்ளனர். இப்பகுதி மற்றைய மூன்று பிரிவுகளையும் ஊடறுத்துச் செல்வதுடன் அவற்றைச் சார்ந்துமுள்ளது. கடந்த நூற்றாண்டில் தொழிலபிவிருத்தி காரணமாக இப்பகுதி அதிகரித்துள்ளது. இவர்களுள் பெரும்பாலானோர் தெங்குத் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். புராதனமான, ஆனால் ஒரு முக்கியமான, தொழிலாகிய மீன்பிடித் தொழிலாற்றுவோரும் இப்பகுதியிலடங்குவர். அதே சமயத்தில் இவர்கள் பயிர்ச்செய்கைத் தொழிலிலும் அடங்குவர். ஏனெனில் மீன்பிடித் தொழில் புரிவோர் பலர் நிலவுடைமையாளராயும் இருந்து, கடல் மூலம் பெற்ற தமது சிறிய வருமானத்தை, வேளாண்மை மூலம் நிறைவு படுத்தினர்.

மேற்படி நாம் தொழிற் பிரிவுகளை வகுப்பதாலும் பல பிழைகளேற்படலாம். உதாரணமாக 1921ம் ௵ குடிமதிப்பின்படி நெற் பயிர்ச் செய்கையில் நேரடியாக ஈடுபட்டிருந்த 60,000 விவசாயிகள் தோட்டங்களிலும் தொழில் புரிய முற்பட்டனர். இங்ஙனம் பல பிரிவுகள் ஒன்றோடொன்று சேர்ந்து செயற்படுவதும் வழமையாக விருந்தது. எமது விவசாயம் தேவையான உணவுப் பொருள்களைத் தரும் வல்லமையற்றிருந்ததோடு, விளைபொருள்களின் விலைவாசிகளிலும் ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்ட காரணத்தினால் ஓர் ''எல்லைத்தொழிற் பிரிவு'' தோன்றியது. இப்பிரிவிலுள்ளோர் பொருளாதாரச் சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கமைய வெவ்வேறு தொழில்களிலீடுபட்டனர். தோட்டங்களில் தொழில் புரிந்தோர், பொருளாதார மந்தம் ஏற்படுங் காலங்களில் நெற்பயிர்ச் செய்கையை நாடினர். தத்தம் குடும்பத்தினர் பயிர்செய்த பாரம்பரிய நிலங்களைப் பயிரிட்டு, இத்தாற் பெரும் இலாபத்தைக் காணாவிடினும் சிறு வருமானத்தைக் கண்டனர். இப்படியான இக்கட்டான காலங்களைக் கடப்பதற்கு அவர்கள் தோட்டங்களிலும் வேறு துறைகளிலும் நாளாந்த வேதனத்திற்குத் தொழில் புரிந்தனர். இம்முறை மறுவளமாக நடைபெற்றதுமுண்டு. நெல் அறுவடை வளமற்றகாலத்தில், அல்லது நாளாந்த வேலைதரும் வேதன நிலைமை கவர்ச்சியானதாய் இருக்குங் காலத்தில், ஒரு நெல் விவசாயி தனது காணியைக் குடும்பத்தினரிடம் விடுத்து அன்றாட வேலை நாடித் தோட்டங்களுக்கு அல்லது நகரங்களுக்குச் செல்வான். இங்ஙனமாக வேறுபட்ட தொழிற் பிரிவுகளிடையே நடமாடுவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களைத் தெங்குத் தொழில் இந்த ''எல்லைத்தொழிற் பிரிவு''க்கு அழித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகிய மூலதனமும், அந்நியத் தொழில் நுட்பமும் வாய்ந்த தாய் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த பெருந் தோட்டப் பயிர்ச் செய்கைகள் ஒரு புறமும், பிற்போக்கான பாரம்பரியப் பயிர்ச் செய்கைகள் மறுபுறமும் இருந்தது, இலங்கையின் பொருளாதார நிலை பிளவுபட்டிருந்ததா என்னும் ஐயத்தை எழுப்புகின்றது. அதிலும் இப்பெருந் தோட்டங்களுக்கு மூலதனமும் தொழில் நுட்பமும் பிரித்தானியாவிலிருந்து வந்தமையும், தொழிலாளர் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டமையும், இவ்வையத்தை மேலும் பலப்படுத்துகின்றது. எமது பொருளாதாரத்தில் இப்பிளவுபட்ட தன்மை கோப்பிக்கால ஆரம்பத்தின் இருந்திருக்கக் கூடுமாயினும், காலக்கதியில் கோப்பிக்காலம் முடிவடைந்த பின்னர், இவ்விரு பகுதிகளுக்கும் பரஸ்பர உறவு ஏற்பட்டது. முக்கியமாக தேயிலைக் காலத் தொடக்க முதல் இவ்விரு பிரிவுகளுக்குமுள்ள பரஸ்பர தொடர்பு வலுப்பெற்றது. பண நெருக்கடியால் உந்தப் பெற்ற விவசாயிகள் தமது விருப்பத்திற் கெதிராக இப்பெருந் தோட்டங்களில் தொழில் புரிய முற்பட்டனர். இவ் விவசாயிகள் தமது சிறிய வளவுகளில் தோட்ட விளை பொருள்களை பயிரிடவும் தொடங்கினர். மேலும் பிற்போக்கான பாரம்பரியப் பயிர்ச்செய்கை பெருகி வரும் மக்கட் டொகையின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில், வேறு தொழில்களைத் தேடிச் சென்ற விவசாயிகளுக்கு இப்பெருந் தோட்டங்கள் அடைக்கல மளித்தன. இங்ஙனமாக வர்த்தகத்தில் ஈடுபட்ட பெருந் தோட்டப் பகுதிக்கும், பாரம்பரிய பயிர்ச்செய்கைப் பகுதிக்கும் இடைப்பட்ட பிளவு நாளாவட்டத்தில் தூர்ந்து வந்தது.

தெங்குப் பொருள் ஏற்றுமதி முக்கியத்துவம் பெறத் தொடங்கியதும் இத்துறையிலீடுபட்டிருந்த பெரும்பாலான விவசாயிகள் வர்த்தகத் துறையுடன் தொடர்புகொள்ளத் தலைப்பட்டனர். இத்தோடு இறப்பர் பயிர்ச் செய்கை வளரத் தொடங்கியமை இதற்கேற்ற நிலங்களை வைத்திருந்த சுதேச விவசாயிகளுக்கு இத்துறையிலீடுபடும் சந்தர்ப்பத்தையும் அளித்தது. இப்படியாக எமது சுதேச விவசாயிகள் சிறுகச் சிறுக தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபடத் தொடங்கினர்.

கோப்பி விளைவு குன்றத் தொடங்கிய காலை, ஐரோப்பிய முதலாளிகள் மற்றும் விளைபொருள்களில் தமது கவனத்தைச் செலுத்தவாரம்பித்த போது, சுதேச விவசாயிகள் அப்படிச் செய்யவில்லை. இலை நோயால் வருந்திக் கோப்பிச் செடிகளின் விளைவுகள் குன்றிய போதும் விவசாயிகள் 50,000 ஏக்கர் நிலத்திற் கோப்பி பயிரிட்டனர். விவசாயிகளுக்குத் தத்தம் குடும்பத்தினரின் வாழ்க்கைச்



செலவைத் தவிர வேறெந்த மிகைபட்ட உற்பத்திச் செலவும் இல்லாததால் எத்தகைய பாதகமான சூழலிலும் அவர்களால் தொடர்ந்து பயிரிட முடிந்தது. வருமானம் போதாதிருந்தால் தோட்டங்களில் தொழில் புரிந்து பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் அவர்களுக்கிருந்தது. ஆகவேதான் சிற்றுடைமையாளரும் விவசாயிகளும் புதிய விளைபொருளை நாடவில்லை. பழமையைப் பேணுங் குணம் விவசாயிகளுக்கு இயல்பிலேயே உண்டு. தேயிலை விளைவித்தல் இலாபமான முயற்சி யென்பதை நிரூபித்தாலன்றி அவர்கள் அதை நாடமாட்டார்கள். அதுமட்டுமல்லாமல் ஒரு விளைபொருளை விடுத்து இன்னொரு விளைபொருளைப் பயிரிடுவதிற் பல இக்கட்டுக்கள் செயலளவில் இருந்தன. தேவையான மூலதனமோ தொழில் நுட்ப அறிவோ அவர்களிடம் இருக்கவில்லை. கோப்பியைப் போலல்லாது தேயிலைப் பயிர்ச் செய்கைக்கு இவ்விரண்டும் அவசியம் தேவைப்பட்டன. இவைகளைப் பெறுவதற்கு ஐரோப்பிய தோட்டாதிபதிகள் கூடச் சிறிது கஷ்டப்பட்டனர். மேலும் விவசாயிகளின் காணிப்பரப்பின் சிறுமையும் அவர்கள் தேயிலை பயிரிடுவதற்குத் தடையாக விருந்தது. கோப்பி விளைவிக்கப்பட்ட காணிகள் சிறியனவாக, சில செடிகளே பயிரிடக் கூடியனவாக விருந்தன. கோப்பியொரு பருவகால விளைபொருளாதலால் விளையும் காலம் வரையிலும் அதனைக் கண்காணிக்கவும் வேண்டியிருக்க வில்லை. ஆனால் தேயிலையோ, இரண்டு அல்லது மூன்று நாட்களுக் கொருமுறை கொழுந்து பறிக்கப்படவும், ஒழுங்காகக் கண்காணிக்கப் படவும் வேண்டியிருந்தது. எனவே வேறு உழைப்பு ஏதுமில்லாது இதிலிருந்தே போதியளவு வருமானம் பெற முடியாவிட்டால் பயிரிடுதல் அசாத்தியமானது. விளைந்த கோப்பி உற்பத்தி பூர்த்தியான பண்டமாகும். இதனைக் கொழும்பில் ஒருமுறை பதப் படுத்தினாற் போதுமானது. ஆனால் தேயிலையை விற்பனைக்குக் கொண்டு செல்லுமுன் பல முறை பதப்படுத்த வேண்டியிருந்தது. பச்சையிலையை வாடச்செய்து, மடித்து, வதக்கி, பின் உலரச்செய்து தான் பூர்த்தி பெற்ற பொருளைப் பெறமுடியும். இவ்வுற்பத்தி முறைகளெல்லாம் ஒரு தொழிற்சாலையில் நடைபெற வேண்டியன. தமதுற்பத்தியே போதுமானதாக விருந்தமையால் பெருந் தோட்டங்களிலிருந்த தொழிற்சாலைகள் விவசாயிகளிடமிருந்து பச்சையிலையாக வாங்க விரும்பவில்லை. அதிலும் மேலதிகமான உற்பத்தியால் விலைக்கு ஆபத்து ஏற்படுமோ என்ற அச்சம் நிறைந்த சந்தையில் இவர்கள் ஒரு திருப்திகரமான இலாபத்தை நிலைநாட்டக் கஷ்டப்பட்டனர். இவற்றின் விளைவாக முதலாவது உலக யுத்த ஆரம்ப காலத்தில் 5000 ஏக்கர் நிலம் சிறு காணிகளாகத் தேயிலையை விளைவித்தது. 1931 ஆம் வருடத்திற்கூட இந் நிலப்பரப்பு 50,000 ஏக்கரைத் தாண்டவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறம், இறப்பர் விளைவித்தல் சிறு காணிக்காரனுக்குப் பெரும் நன்மை பயப்பதாயிருந்தது. தேயிலையிலும் பார்க்க இறப்பரில் சாதகமான அம்சங்கள் பல இருந்தன. முதலாவதாக அதற்குக் குறைந்த கண்காணிப்பே போதுமாக விருந்தது. பால்வெட்டுவதற்கு வேலையாற் றேவைப்பட்டாலும், விவசாயியோ, அல்லது அவனது குடும்பத்தினரோ இதனை ஓய்வு நேரங்களிற் செய்யக்கூடியதாயிருந்தது. அன்றாட உழைப்பில், அல்லது நெற்பயிர்ச் செய்கையிலீடுபட்டுத் திணறும் விவசாயி, தேயிலைச் செடியைப் போலல்லாது, இறப்பர் மரத்தைக் கண்காணிக்காது விடமுடியும். இரண்டாவதாகத் தொடக்கத்திலிருந்தே குன்றிய விலைகளினாற் பாதிக்கப்பட்ட தேயிலைக்கு மாறாக, இறப்பருக்கு ஆரம்ப காலம் முதல் நல்ல விலை கிடைத்தது. மூன்றாவதாக இறப்பர்ப் பாலைப் பதப்படுத்துவதற்கு அதிக செலவு வேண்டியிருக்கவில்லை. பதப்படுத்தப்படாத இறப்பரின் விலையுயர்ச்சி காரணமாகப் பெரிய தோட்டங்களிலிருந்த தொழிற்சாலைகள் இறப்பர்ப் பாலை விரும்பி வேண்டினர். கடைசியாகத், தேயிலையிலும் பார்க்க இறப்பருக்குத் தேவைப்பட்ட நிலம் பெறக் கூடியதாக விருந்தது இக் காரணங்களினால், 1914 ஆம் ஆண்டில் 30,000 ஏக்கராக விருந்த இறப்பர் விளைவிக்கப்பட்ட சிறு காணிகளின் நிலப்பரப்பு, 1931 இல் 140,000 ஏக்கராக அதிகரித்து, 90,000 சிறுகாணிக் காரர்களாற் பயிரிடப்பட்டது.

தெங்குத் தொழிலே, வர்த்தகத் துறையைப் பாரம்பரியப் பயிர்ச் செய்கையுடன் பிணைத்தது. ஈழத்திலுள்ள ஒவ்வோர் இல்லத்திலும் தெங்குப் பொருள் தவிர்க்க முடியாத தொரு பண்டமாகும். தாழ்ந்த பிரதேசத்தில் வாழ்ந்த விவசாயி ஒவ்வொருவனும் சில தென்னைகளை வளர்த்தான். அவற்றின் மூலம், உணவு, வீட்டின் உபயோகத்திற்கு வேண்டிய தளபாடம், மது, ஆகியவற்றைப் பெற்றான். பல நூற்றாண்டுகளாக உள்நாட்டு வணிகத்திற் தேங்காயும் இடம் பெற்ற போதிலும், 1950 ஆம் ஆண்டின் பின் மேலைத் தேசத்தில் ஏற்பட்ட தொழிலபிவிருத்தி காரணமாக எண்ணெய்க்கு மதிப்பு ஏற்படும்வரை, ஏற்றுமதி வர்த்தகத்திற் தெங்குப் பொருள் பெருமளவில் இடம்பெறவில்லை. 1870 இல் தென்னை வளர்க்கப்பட்ட 360,000 ஏக்கர் நிலத்தில் 50,000 ஏக்கர் மட்டுமே தோட்டங்களாக அமைந்திருந்தன. 1931 இல் இம் மொத்த நிலப்பரப்பு 1,100,000 ஏக்கராக அதிகரித்ததோடு, இவற்றுள் 350,000 ஏக்கர்வரை பெருந் தோட்டங்களாக அமைந்திருந்தன. ஏற்றுமதி வர்த்தகத்திற்கான தெங்குப் பொருளின் பெரும் பகுதி விவசாயிகளிடமிருந்தே பெறப்பட்டது. தென்னை உற்பத்தியும், தென்னையுடன் தொடர்புடைய துணைத் தொழில்



களும் நல்வருவாய் தருவனவாக இருந்தமையால், ஒவ்வொரு விவசாயியும் தனது பிரதான தொழிலுடன் இவற்றையும் கிளைத் தொழில்களாகக் கொண்டிருந்தான். கயிறு திரிக்கும் தொழிலை முக்கியமாகப் பெண்கள் செய்து வந்தனர். தெங்குத் தொழிலின் விற்பனைத்துறையிலேயே மூலதனமும் ஐரோப்பிய உழைப்பும் முக்கியமாக இடம் பெற்றன. ஏற்றுமதி செய்யப்பட்ட தெங்குப் பொருள்களில் அரைப்பங்கிற்குமேல் அன்னிய வர்த்தக ஸ்தாபனங்களாற் கையாளப்பட்டது.

உள்நாட்டு மூலதனம் ஆரம்பத்தில் குவியத் தொடங்கியது தெங்குத் தொழில்த் துறையிலாகும். உத்தியோக வர்க்கத்தினரும் கல்வியறிவுடைய உள்நாட்டவரும் தனிமுயற்சியில் ஈடுபடத் தயங்கிய பொழுதும், தென்னை நிலங்கள் இருப்பின் தம்மை அறியாமலே பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டி வந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிக்காலம் தொடக்கம் இந்நாட்டு மக்களிற் பணம்படைத்த பகுதியினர் தோட்டத் துறையில் அதிகமாகப் பங்குபற்றத் தொடங்கினர்.

1931 ஆம் ஆண்டளவில் உள்நாட்டு மூலதனம் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையில் பெருமளவில் முதலீடு செய்யப்பட்டது. வர்த்தக விவசாயம் அன்றிய மூலதனத்தின் ஏகபோக உரிமை என்ற கருத்துத் தப்பானது என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது. இத்தொழில்களில் முதலீடு செய்யப்பட்ட உள்நாட்டு மூலதனம் எவ்வளவு என்று சரியாகக் கூற முடியாது. எனினும் மூலதனமதிப்புப்புள்ளிகள் மூலம் ஒருபொதுவான கணிப்புப்பெறலாம்:-

1. குறைந்த பிரகாரம் தேயிலை பயிரிடப்பட்ட ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூபாய் 500 என மூலதன மதிப்பிட்டால் இந்நாட்டின் தேயிலைத் தோட்டத் தொழிலிலுள்ள மொத்த முதலீடு ரூபாய் 280,000,000 ஆகும். இதில் ரூபாய் 56,000,000 உள்நாட்டு மூலதனமாகும். இது மொத்தத்தில் 20 விகிதமாகும்.

2. அதேபோல் இறப்பர் விளைவிக்கப்பட்ட ஒவ்வொரு ஏக்கருக்கும் ரூபாய் 400 என மூலதன மதிப்பிட்டால் இறப்பர்த் தொழிலில் இருந்த மொத்த முதலீடு ரூபாய் 240,000,000 ஆகும். இதில் ரூபாய் 130,000,000 உள்நாட்டு மூலதனமாக இருந்தது. (மொத்தத்தில் 55 விகிதம்)

3. கடனைப் பெற்ற அன்னிய மூலதனத்தைக் கொண்டு சில நிலங்களில் தென்னை அபிவிருத்தி செய்யப்பட்ட பொழுதிலும் தெங்குத் தொழில் முழுமையும் இந்நாட்டினரின் கையில் தங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருந்தது. கடனாகவும் ஈட்டு மூலமும் தொகையான பிரித்தானிய, இந்திய மூலதனம் இதற்குள் முடக்கப்பட்டது எனினும் அன்னிய உடைமை சிறிய அளவிற்றான் இருந்தது. இத்தொழிலிற் சம்பந்தப் பட்ட மூலதனத் தொகையைப் பற்றித் தென்னை விசாரணைச் சபையினர் கீழ்வருமாறு கூறினர் !-

''தென்னை பயிரிடுதலில் ஆழ்த்தப்பட்ட மூலதனத் தொகையைக் கணிப்பது கஷ்டமானதாகும். ஆனால் அத்தொகை ரூபாய் 300,000,000க்கும் ரூபா 500,000,000க்கும் இடையே இருந்திருக்கும் எனக் கணித்தால் அது குறைவுக் கணிப்பெனக் கருதலாம். தென்னை நிலம் அடிக்கடி கைமாறிய காரணத்தால் நில அபிவிருத்திக்கு ஏற்பட்ட செலவைக் கொண்டு முடக்கப்பட்ட மூலதனத்தைக் கணிக்கமுடியாது.'' இதிலிருந்து இந்நாட்டினர் ஈடுபடுத்திய மூலதனம் சிறுதொகையானதல்ல என்பது தெரிகிறது.

மூலதன உடைமை பெருமளவில் இருந்த பொழுதிலும் இவ் வபிவிருத்தித் துறையில் இந்நாட்டுத் தொழில் முயல்வோர் பல கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்நாட்டுத்தொழில் முயல்வோர் கடன் பெறுவதற்கு எக்காலத்திலும் கஷ்டப்பட வேண்டி யிருந்தது. இந்நாட்டு வங்கித் தொழில் முழுமையும் ஐரோப்பியர் கையில் தங்கியிருந்தது. இந்நாட்டு மக்களுக்கு மாறாகப் பாரபட்சம் காட்டப்படாத போதிலும், கடன் பெறுவதற்கு இந்நாட்டு முதலாளி ஐரோப்பிய முதலாளியிலும் பார்க்கச் செயலளவிற் பல இன்னல்களைக் கண்டான். ஐரோப்பியத் தோட்டாதிபதியும் வணிகனும் கொழும்பிலுள்ள வர்த்தக நிலையங்களின் நற்சாட்சியைப் பெறமுடிந்தது. இந்நாட்டு முதலாளியோ அவனது நல்லெண்ணத்தில் மட்டும் தங்கியிருக்க வேண்டியிருந்தது. வட்டிக்குக் கடன் கொடுக்கும் செட்டிமார்களே இந்நாட்டுத் தொழில் முயல்பவனுக்குக் கடன் பெறுவதற்கு இருந்த ஒரே மாற்றுமூலமாக அமைந்தனர். இவர்கள் கூடக் குறுகிய கால வர்த்தக மூலதனப் பணம் கொடுக்க முன்வந்தனரேயன்றி நிலத்தில் முதலீடு செய்வதற்கு நீண்டகாலக் கடன் பணம் கொடுக்க அதிகம் விரும்பவில்லை.

முதலீடு செய்வதற்கு வேண்டிய மூலதனத்தைத் திரட்டுவதிலிருந்த கஷ்டத்துடன் இந்நாட்டு வர்த்தக நிலையங்களும் சிறியனவாய் இருந்தன. கூட்டுத் தொகுதி முயற்சியின் மூலம் (Joint stock enterprise) இக் கஷ்டத்தை அகற்றியிருக்கலாம். ஆனால் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கொள்கை (Limited liability principle) பொதுவாக விளங்காமலும் அதன் நன்மைகள் உணரப்படாமலும் இருந்தது. பரும்படி முயற்சி (Large scale enterprise) அண்மையிலேயே இந்நாட்டில் ஆரம்பமானமை இதற்குக் காரணமாக இருக்கக் கூடும். கௌரவத்தின் ஓர் அறிகுறியெனக் கருதி நில உடைமைக்கு இந்நாட்டு மக்கள் முக்கியத்துவம் அளித்து வந்தனர். கூட்டு உடைமையில் இருக்கக் கூடிய பெரிய அதி சிக்கனமான பொருள் நிலையங்களிலும் பார்க்கத்தனி உடைமையிலுள்ள சிறிய நிலையங்களை விரும்பினர்.



# * மனிதனும் அரசும்

வண. பிதா. S. I. பின்ரோ

மனிதனும் அரசும் எனும் பொருளை ஆராயும் பொழுது மனிதன் எதற்காகச் சமுதாயத்தில் வாழ்கின்றான் என்ற அடிப்படைக் கேள்விக்கு முதலில் விடை காணுதல் வேண்டும். பொதறிவு கொண்டு ஆராய்வோமானால், மனிதன் தன்னுடைய தேவைகளைத் தானே பூர்த்தி செய்யும் சக்தியற்றவனாக இருப்பதினால் அவன் சமுதாயத்தில் பலரோடும் சேர்ந்து வாழ்கிறான் என்பது புலப்படும். தனிமையில் வாழும் ஒரு மனிதன் உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி நல்லொழுக்கம் போன்ற துறைகளில் பூரண வளர்ச்சி அடைய முடியாதவனாகின்றான். இந்நிலையில் பெரும்பாலும் அவன் ஒரு றொபின்சன் குருசோ (Robinson Crusoe) வாக,–அதுவும் பிரைடே (Friday) என்ற துணைவனற்ற குருசோவாகத் திகழ்வான். உடல் வளர்ச்சி, அறிவு வளர்ச்சி, நல்லொழுக்கம் என்பவற்றில் பூரண வளர்ச்சி பெற்று வாழ்வதற்கு ஒரு மனிதனுக்குச் சக மனிதர்களுடைய கூட்டுறவு அத்தியாவசியம். அதனாலேயே மனிதன் இயல்பாகவே பலரோடும் கூடி வாழ விரும்பும் பிராணியாகின்றான். இதனை உணர்ந்தே அரிஸ்ரோற்றல் (Aristotle) மனிதனை ஒரு சமுதாயப் பிராணி என வழங்கியுள்ளார். தனது பூரண விருத்திக்குச் சமுதாயம் இன்றியமையாததென அறிந்த மனிதன் அதனிடம் இயற்கையான நாட்டம் கொள்கிறான். இந்நாட்டம் இயற்கையாக எழுவதினால், அதிலிருந்து அவனுக்குச் சமுதாயத்தின் மேல் ஓர் இயற்கையான உரிமை பிறக்கிறது.

மனிதனின் தோற்றத்திற்கே ஆண் பெண் உறவு அவசியமாயுள்ளது. அதைத் தொடர்ந்து பல்வேறு பட்ட துறைகளில் விருத்தியடைவதற்கும் சக மனிதரின் உதவி வேண்டியிருக்கிறது. மனிதன் அடிப்படையில் தன் தேவைகளைப் பூர்த்தி செய்யுமாற்றலற்றவன். இயல்பாகவே சமுதாயத்தில் ஓர் அங்கமாக அமைந்து விடுகின்றான். மனிதன் சக மனிதருடன் கூடி வாழ விரும்பும் இயற்கையான நாட்டமே சமுதாயம் எழுவதற்குக் காரணமாக உள்ளது. எனவே மனிதன் சமுதாயத்தில் வாழ்வதற்கு இயல்பாகவே நாட்ட

* Man and the State
by Rev. Fr. S. I. Pinto O. M. I.
B.A. (Lond.), M.A. (Oxon), B.Ph., B.D. (Rome)
Lecturer in History, University of Ceylon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளவனாக இருப்பதனால், சமுதாயம் அவனது படைப்பேயன்றிப் படைப்பாளியல்ல. அதாவது சமூகமானது மனிதனின் கூடிவாழும் நாட்டத்தினால் ஏற்பட்ட ஓர் இயற்கையான கூட்டமைப்பாகும்.

எனவே, ஒரு சமுதாயமோ அல்லது அரசோ, ஒரு மனிதனுக்குச் சகமனிதருடன் இணைந்து வாழும் உரிமையை மறுப்பது, அவனது இயற்கை உரிமையை மறுப்பதாகும். இது ஓர் இயற்கை உரிமையாகும். சமுதாயமோ அரசோ தோன்றுவதற்கு முன்பே இவ்வுரிமையை மனிதன் பெற்றுள்ளான். அதுவுமின்றி இவ்வுரிமையே சமுதாயத்திற்கும் காரணமாகும். இவ்வியற்கையுரிமையே சமுதாயத்தின் ஆணிவேராகத் திகழ்வதனால் அவ்வுரிமையை மறுத்தல் சமுதாயத்தின் ஆணிவேரை வெட்டுவது போலாகும். ஏனெனில் மனிதனுக்குச் சமுதாய வாழ்வின் மேலுள்ள நாட்டத்தினாலேயே சமுதாயம் உருவாக்கப்பட்டது.

மனிதன் எந்நோக்கத்திற்காகச் சமுதாயத்தில் வாழ்கிறான் என்பதே அடுத்து எழும் கேள்வியாகும். மேற்கூறியவை இக் கேள்விக்குரிய பதிலைக் குறிப்பாலுணர்த்துகின்றன. அதாவது தனது இயற்கைச் சக்திகளை விருத்தி செய்வதற்கும் வாழ்விற் பூரணத்துவம் அடைவதற்கும் மனிதனால் தனிமையில் இயலாது; அல்லது அவற்றைத் தனிமையில் விருத்தி செய்வதில் பிறரின் துணை கொண்டு சிறப்பாக விருத்தி செய்யலாம் என்ற காரணத்தினாலேயே மனிதன் சமுதாயத்தில் வாழ்கிறான். இக்குறிக்கோளை அடைவதற்குத் தனது வெவ்வேறு நலன்களைக் கருதி வெவ்வேறு வகையில் சகமனிதர்களுடன் தொடர்பு கொள்கிறான். உதாரணமாக, அவன் உடல் வளர்ச்சியை விரும்பின், இத்தகைய விருப்புள்ள சக மனிதருடன் விளையாட்டுச் சங்கங்களிலும், அதேபோலத் தன் இலக்கிய இரசனையை வளர்க்க விரும்பின் இலக்கிய மன்றங்களிலும் சேர்கின்றான்.

சமுதாயத்தில், இப்படியாகச் சகலரது நன்மையும் கருதி உண்டாக்கப்பட்ட பல சங்கங்களுள் முதன்மை வகிப்பது அரசாகும். இது மக்கள் எல்லோரினதும் நன்மைக்காக உண்டாக்கப்பட்ட ஒரு சங்கமாகும். அரிஸ்ரோற்றல் கூறியது போல மக்களின் நல்வாழ்வே அதன் முக்கிய நோக்கமாகும். மனிதனின் பரிபூரண விருத்தியினாலேற்படுவதே நல்வாழ்வாகும். சிறிய சங்கங்கள் சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக நிறுவப்படுவன. அதேபோல் அரசும் மனிதனுடைய பூரண வாழ்விற்கும், அவனது நல்வாழ்வுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், இலட்சிய பூர்த்தியான வளர்ச்சிக்குமாக நிறுவப்பட்டுள்ளது.



அங்கத்தவர் யாவரும் பூரண வாழ்க்கை அனுபவிக்க வேண்டுமென்ற பொது நன்மையே அரசின் குறிக்கோளாகும். எனவே, அரசானது பாதுகாப்பு, சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலவச் செய்தல், பொதுத்தாபனங்களை நிறுவுதல், முதலிய முதற்கடமைகளை நிறைவேற்றுவது மல்லாமல், சமுதாயத்தில் மனிதனது ஏகபோக வளர்ச்சியைச் சகல வகையிலும் ஏற்படுத்த வேண்டும்.

பொது நன்மையே இதன் குறிக்கோளாக விருப்பதால், ஒரு தனிப்பட்ட கட்சியினரதோ அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதியினரதோ, (இவை பெரும்பான்மையினராய் இருப்பினும்) நன்மைக்காக இருக்காது, சகலருடைய நன்மைக்காகவும் இருத்தல் வேண்டும்.

நன்மையானது பல்வேறுபட்ட இயல்புகளை யுடையது. இதனால் மக்களும் பல்வேறுபட்ட கடமைகளையுடையவராயிருக்கின்றனர். உடலிலுள்ள வெவ்வேறு அங்கங்கள், எவ்வாறு வெவ்வேறு கடமைகளைச் செய்து, ஒரே முகமாக உடலை இயக்குகின்றனவோ அதேபோலச் சமுதாயத்திலும் மக்கள் வெவ்வேறு கடமைகளைப் புரிந்து வருகின்றனர். இதனால் யாவரும் பொது நன்மையை அடைகின்றனர். அதிக முன்னேற்றமடைந்த சமுதாயங்களில் அதிகமான பிரத்தியேக கடமைகளும், தொழிற் பிரிவுகளும் காணப்படுகின்றன. ஆகவே சம அளவும், கடமையும் கொண்டு, தமது பிரத்தியேக நன்மைகளுக்காகப் போட்டியிடும் தனிமனிதர் கூட்டத்தின் நன்மைக்காகவன்றி, வெவ்வேறு வகையான மக்கள் சேர்ந்தியங்கும் பலதரப்பட்ட, ஆனால் கட்டுக்கோப்புள்ள, சமுதாயத்தின் பொது நலனை அங்கீகரிப்பதே உண்மையான அரசின் தன்மையாகும். ஓர் அரசியல் அமைப்பில் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட இடமுண்டு; ஆனால், ஒரே வகையான கடமைகளிருப்பதில்லை. எனவே, சகலரது பொது நன்மையையும் கருதி, ஒவ்வொருவரும் ஏனையோருடன் ஒற்றுமையாகவும் சுமுகமாகவும் சேர்ந்து வாழல் வேண்டும்.

*Whenever you Fly!* *Wherever you Fly;*
CONTACT
**AIR CEYLON LTD.**
**Phone 7275**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# * இலங்கை அரசியலமைப்பிலுள்ள சிறுபான்மையோரது காப்பீடுகள்.

கலாநிதி ஏ. ஜே. வில்சன்

அமைச்சரவையினர் தங்களது வரைவுத் திட்டத்திலும், சோல்பரிச் சிறப்புக்குழுவினர் தங்களது அறிக்கையிலும், சிறுபான்மையோரினது உரிமைகளைப் புரக்கும் வாயிலாய் விரிவான வழிமுறைகளைக் கூறியுள்ளனர். தடையீடில்லா வலிவளிக்கும் உரிமைகளைப் பெரும்பான்மையோர் கைகளிற் கொடுப்பதாற் சிறுபான்மையோர்கட்கு ஆபத்தான நிலைமை யேற்படுமென்று சிறுபான்மைத் தலைவர்கள் எழுப்பிய குரலிற்குச் செவிமடுத்தமையே இவ்வழிமுறைகள் தோன்றக் காரணமாம். இவர்கள் எடுத்துரைத்த வழிமுறைகள் பெரும்பாலும் இலங்கை அரசியலமைப்பிற் சேர்க்கப்பட்டன. வசதிகட்காக, இவற்றை சட்டமியற்றுந்துறை, நீதித்துறை, நிருவாகத்துறை, செயற்றுறை என நான்கு இயல்களாகப் பகுக்கலாம். இக்கட்டுரையின் நோக்கம், இக்காப்பீடுகள் எவ்வளவு தூரம் போதுமானவை என்பதை ஆராய்வதேயாகும்.

சட்டமியற்றுந் துறையில் சிறுபான்மையோர் உரிமைகளைக் கீழ்க்காணும் வழிகளிற் புரத்தலாம்.

(i) சிறுபான்மையோருக்குப் போதுமான அளவில் பிரதிநிதிகள் சபையில் இடமளிக்கப்பட வேண்டுமென்ற கருத்துடன் அவர்களது பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் கூட்டுமோர் திட்டம் வரையப்பட்டது.

(ii) தேசாதிபதி, பொதுத் தேர்தலின்பின், ஒரு முக்கியமான பிரிவினர் பிரதிநிதித்துவம் பெறவில்லையென்றோ, அன்றிப் போதுமான அளவில் இடம் பெறவில்லையென்றோ கருதினால்; ஆறுபேர்கட்கு மேற்படாத எண்ணிக்கையைப் பிரதிநிதிகள் சபைக்கு நியமனம் செய்யலாம்.

(iii) அரசியலமைப்பை மாற்றும் முறியோ, அன்றிச் சமயவினச் சிறுபான்மையோர்கட்கு ஓரமான சட்டமோ, பிரதிநிதிகள்

* Minority Safeguards in the Ceylon Constitution.
By A. J. Wilson B.A. (Ceylon), Ph.D. (Lond.)
Lecturer in Economics, University of Ceylon.



சபையில் நிறைவேற்றப்படுவதற்கு, முழுச்சபையின் மூன்றிலிரண்டு பகுதியினர் வாக்களிக்க வேண்டும்.

(iv) சிறுபான்மையோர்கட்கு அவர்கள் எண்ணிக்கைக்கேற்ற பங்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கும், அவசரமாயும் தீமையான எண்ணத்துடனும் மக்கள் சபையில் நிறைவேற்றப்படும் சட்டத்தை (சிலகால், ஓரமாகிய பண்புடன் திகழும் சட்டத்தைத்)—தடுக்கவும் திருத்தியமைக்கவும் ஒரு மேற்சபையை நிறுவலாம். நடைமுறையில் இவ்வழிமுறைகள் எவ்வளவு தூரம் பயனளிக்கின்றன என்பதைக் கவனித்தல் வேண்டும்.

## சிறுபான்மையோருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு வகுக்கப்பட்ட வழிமுறைகள்

சிறுபான்மையோருக்கு மேலதிகமான பிரதிநிதித்துவம் அளிக்கும் திட்டத்தின்படி, தேர்தற் பிரிவுகளைப் பிரிக்கும்போது, சனத்தொகை மட்டுமன்றி நிலப்பரப்பும் கவனத்திற் கொள்ளப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஏனெனில், சிறுபான்மையோர் வாழுவது பெரும்பாலும் சனத்தொகை குறைந்த இடங்களிலாம். மேலும் இச்சிறுபான்மையோர் இஸ்லாமியரைப் போல் நாட்டின் பல பிரிவுகளிலும் பரந்து வாழ்ந்தும், அல்லது, இந்திய வம்சாவழியினர் போல், இடைப்பட்ட பள்ளத்தாக்குகளிற் சிங்களவர் குடியிருக்க, மலைக்குன்றுகளிற் செறிந்து வாழ்ந்தும் வந்தமை இங்ஙனம் செய்வதற்கு மற்றுமோர் காரணமாகும்.

அமைச்சரவையினர் தமது வரைவுத்திட்டத்தில், மேலதிகமான பிரதிநிதித்துவம் அளிப்பதற்காகத் தொகுதிகளைப் பிரிவினை செய்யும்போது அனுசரிப்பதற்கெனக், கீழ்க்காணும் நெறிகளை வகுத்தனர். 1.

(i) மாகாணமே அடிப்படை அளவுக் கூறாக இருத்தல் வேண்டும்.

(ii) 75,000 பேர்கட்கு ஒரு தொகுதி அமைக்கப்படல் வேண்டும். அத்தோடு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு 1000 சதுர மைல்கட்கும் மேலதிகமான ஒரு தொகுதி அளிக்கப்படல் வேண்டும்.

(iii) ஒரு மாகாணத்தைத் தெரிவுத் தொகுதிகளாய்ப் பிரிக்கும்போது, அம் மாகாணத்திலுள்ள ஒவ்வொரு தொகுதியும் கிட்

1. Vide Articles 12 and 13 of Ministers' Draft Scheme in S. P. XIV of 1944—(11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தட்ட ஒரே அளவினதான சனத்தொகை உள்ளதாய் இருத்தல் வேண்டும். ஆனால் இந்த நெறியினைப், போக்குவரத்து வசதிகள், இயற்கையமைப்பு, குடிகளின் பொதுவுணர்ச்சி அன்றிப்பிரிவுணர்ச்சிக் கருத்துக்கள் முதலியவற்றை நோக்கி மாற்றலாம்.

(iv) தேசாதிபதி தன் விருப்பிற்கிணங்க, மூன்று அங்கத்தினர் கொண்ட எல்லை குறிக்கும் குழுவினரை அமைக்க வேண்டும். தொகுதிகளை நிர்ணயிக்கும் பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்படவேண்டும். இக்குழுவின் தலைவர் பிரதம நீதிபதியாகவோ அல்லது உயர்நீதி மன்றத்து நீதிபதியாகவோ இருக்க வேண்டும். பிற இருவரும் ''தேச மன்றத்தின்'' அங்கத்தவர்களாய் இருத்தல் கூடாது. மேற்குறிக்கப்பட்ட நெறிகளில் தொகுதிகளை நிர்ணயிக்க வெண்டிய இக்குழு ஒவ்வொரு குடிமதிப்பும் எடுத்த ஒரு ஆண்டிற்குள் நியமிக்கப்பட வேண்டும்.

அமைச்சரவையின் இத் திட்டத்தின்படி, தொகுதிப் பிரிவினையில் நிலப்பரப்பையும் கவனத்திற் கொண்டால், ஒவ்வொரு மாகாணத்திற்கும் கீழ்க்காணும் அளவு மேலதிகமான தொகுதிகள் கிடைக்கும்.

| | |
|---|---|
| மேல் மாகாணம் | 1 |
| மத்திய மாகாணம் | 2 |
| தென் மாகாணம் | 2 |
| வட மாகாணம் | 4 |
| கீழ் மாகாணம் | 4 |
| வடமேல் மாகாணம் | 3 |
| வடமத்திய மாகாணம் | 4 |
| ஊவா மாகாணம் | 3 |
| சப்பிரகமுவ மாகாணம் | 2 |

எனவே, மக்கள் தொகையால் எட்டுத் தொகுதிகளை மட்டுமே பெறும் வட-கீழ் மாகாணங்கள் இத் திட்டத்தின்படி பதினறு தொகுதிகளைப் பெறுவன.

சோல்பரிக் குழுவினர்முன் சமூகமளித்த அமைச்சரவையின் திட்டத்தினர், 101 அங்கத்தினர்களைக் கொண்ட சட்டசபையில், தேசாதிபதியால் தெரிவு செய்யப்படும் ஆறுபேருடன், ஐம்பது தானங்களைப்பெரும்பான்மையினரும், பதினைந்து தானங்களை இலங்கைத் தமிழரும், பதினன்கு தானங்களை இந்தியத் தமிழரும்,



எட்டுத் தானங்களை இஸ்லாமியரும் பெறுவர் என்று எடுத்துக் காட்டினர். 2 எனவே, 101 அங்கத்தினர் உள்ள சபையில், சிறுபான்மைச் சமூகப்பிரிவினரின் பிரதிநிதிகளாக 43 பேர்கள் இருப்பார்கள். இத்திட்டத்தை எதிர்த்தவர்கள், குறிப்பாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் பிரதிநிதிகள், சிறுபான்மையோர் பெரும்பாலும் 29 தானங்களையே பெறுவர் என்றும், நியமிக்கப்பட்ட அங்கத்தவர்களுடன் மொத்தம் 39 தானங்களையே பெறுவர் என்றும் கருதினர். 3. அமைச்சரவையின் திட்டத்திற் கெதிராக, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸினர் சிறுபான்மையோருக்கு சட்டசபையில் 50 வீதம் இடங்களைப் பிரத்தியேகமாக வைக்கும் ஒரு சமநிலைப் பிரதிநிதித்துவத் திட்டத்தைச் சோல்பரிக் குழுவினர் முன் வைத்தனர். பிற சிறுபான்மைப் பிரிவினர்களின் பிரதிநிதிகள் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் இத்திட்டத்திற்குத் தங்களுடைய பூரணமான ஒத்துழைப்பை யளிக்காவிடினும், அவர்கள், அமைச்சர்களின் திட்டத்தினல் அளிக்கப்படும் தானங்களிலும் மேலதிகமான இடங்களை அளிக்கக் கூடிய முறையை, ஆதரித்தனர்.

எனினும் சோல்பரிச் சிறப்புக்குழுவினர் சமநிலைத் திட்டத்தை நிராகரித்து விட்டனர். இத்தகைய வேண்டுகோளை ஏற்பின் ஒவ்வொரு பொதுத் தேர்தலின் பின்னும் சட்டசபை ஒரேவிதமான சாயலுடையதாய் இருக்கும் என்று சுட்டிக்காட்டினர். இத்தகைய சட்டசபை சுமுகமான கட்சிமுறையின் வளர்ச்சியைத் தடுப்பதாகவும் முடியுமெனச் சுட்டிக் காட்டினர். மேலும் இக்குழுவினர் பெரும்பான்மையோர் தங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய முறையான பங்கைப் பெருவிடின், சிறுபான்மையோர்களில் ஒரு பிரிவுடனே அன்றிப் பலபிரிவினருடனே கருத் தொற்றுமையால் ஒன்றுபட்டு, மக்கள் சபையில் தங்களுக்கு மறுக்கப்பட்ட உரிமையான பிறபிரிவுகளின்மேல் முக்கியத்துவ நிலையையடைய முயல்வார்கள் என்று கருதினர். தங்களுக்கு உரிய நிலை சட்ட ரீதியாக அளிக்கப்படாவிடின் பெரும்பான்மையோர், பிறரின் விருப்புக்களில் அதிக கவனம் செலுத்த மாட்டார்கள் என்று வாதித்தனர். இத்தகைய சிறுபான்மையினேரின் எண்ணிக்கையைக் கூட்டும் திட்டத்தின் கீழும், பெரும்பான்மைச் சமூகத்தினர், பல்வேறு காலங்களில், சிறுபான்மைப் பிரிவுகள் பலவற்றின் உரிமைகளைப் பிற சிறுபான்மைப் பிரிவுகளின் உதவியுடன் பறித்திருக்கின்றனர் என்பது அரசியல் திட்டத்தின் நடைமுறையால் கண்ட ஓர் அநுபவமாகும்.

2. Vide Soulbury Report paragraph 270.
3 Ibid.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோல்பரிச் சிறப்புக் குழுவினர், சமநிலைப் பிரதிநிதித்துவ வேண்டுகோளையன்றி, நேரடியான இனமுறையில் பிரதிநிதித்துவம் அளிக்கும் நெறியினையுடைய எந்தத் திட்டத்தையும் நிராகரித்தனர். இத்தகைய திட்டம் மேலெழுந்தவாரியாய் நோக்குங்கால் இனவேற்றுமைகளை நிவர்த்திக்க வல்ல முறையாகவும் ஓரளவு குறைந்த எதிர்ப்பையே பெறக்கூடிய வழிமுறையாகவும் காணப்படினும், முழுச் சுயாட்சிக்கு முக்கியமான நாட்டினவுணர்ச்சி தோன்றுவதற்குப் பெருந்தடையாகும் என்று கருதினர். [4] எனவே, சோல்பரித் திட்டத்தினர் அமைச்சரவையின் குறிப்புத்திட்டத்தைச் சில திரிபுகளுடனும் மேலதிகமான வேறு சில வழிமுறைகளுடனும் ஆதரித்தனர். இத்திட்டம் நிலப்பரப்பும் இனமும் கலந்த நெறிகளுடன் உள்ளது. சோல்பரித் திட்டத்தினர், தற்போது உள்ள நிலையில், சிறுபான்மையோருக்கு அவர்களுக்குரிய பிரதிநிதித்துவத்தை இத்தகைய திட்டமே அளிக்கும் என்று கருதினர்.

அமைச்சர்களின் திட்டத்திற்குச் சோல்பரிக் குழுவினர் செய்த மாற்றங்களும் சேர்க்கைகளும் கீழ்க்காண்பன :

(i) தேசாதிபதி மூன்று அங்கத்தினர் கொண்ட எல்லைகுறிக்கும் குழுவை நியமிக்க வேண்டும். இவர்களுள் ஒருவர் குழுவின் தலைவராக இருக்க வேண்டும். இந்நியமனங்களைச் செய்வதில் தேசாதிபதி அரசியலில் ஈடுபாடுள்ளவர்களைத் தம்மாலியன்ற அளவு தவிர்க்க வேண்டும். சோல்பரிக் குழுவினர் அமைச்சரவையினர் சொற்படி உயர்நீதி மன்றத்து நீதிபதியையோ பிரதம நீதிபதியையோ தலைவராக அமைக்க வேண்டும் என்னுங் கருத்தை ஆதரிக்கவில்லை. ஏனெனில், இத்தகைய குழுவின் கருத்துக்கள் பாரதூரமான அரசியல் விளைவுடையதாய் இருப்பன என்று கருதினர்.

(ii) எல்லை நிர்ணயக் குழுவினர் கருத்தின்படி, ஒரு மாகாணத்தின் பிரிவில், அப்பிரிவில் உள்ள பெரும்பான்மையோரிலிருந்து இன, சமய அன்றிப் பிற வழியில் மாறுபட்ட பொது உணர்வுக் கருத்துக்கள் உடைய ஒரு பிரிவினர் உளராயின், சமமான வாக்காளர் இருக்க வேண்டும் என்ற நெறியை மாற்றி, அந்த மாகாணத்தில் இந்தப் பிரிவினருக்கு பிரிதிநிதித்துவம் அளிக்கும் முறையில் மாகாணத்தைத் தெரிவுத் தொகுதிகளாய்ப் பகுக்க வேண்டும்.

(iii) எல்லை நிர்ணயக் குழுவினர் தேவையான இடங்களிற்குப் பல பிரதிநிதிகள் அளிக்கும் தொகுதிகளை ஏற்படுத்துவதையும்

4. Ibid paragraph 267.



கவனத்திற்கு எடுக்கலாம். அமைச்சரவையின் பிரதிநிதித்துவத் திட்டமும் சோல்பரிக் குழுவினர் எடுத்துரைத்த கருத்துரைகளும் இலங்கை அரசியல் அமைப்பில் 40 ம் 41 ம் பிரிவுகளில் மிகச் சில மாற்றங்களுடன் சேர்க்கப்பட்டன.

சோல்பரிக் குழுவினர், அமைச்சரவையினர் காட்டிய பிரதிநிதிகள் எண்ணிக்கை பற்றிய குறிப்புக்களால் கவரப்பட்டனர் என்று கருத இடமுண்டு. பிரதிநிதித்துவமே பெரும்பான்மையோருக்கும், சிறுபான்மையோருக்கும் இடையில் சச்சரவுகளுக்கு முக்கிய நிலைக்களமாக இருந்ததால், அமைச்சரவையினரின் திட்டத்தில் சோல்பரிக் குழுவினர் செய்த மாற்றங்கள் பெரும்பான்யோருக்கும், சிறுபான்மையோருக்கும் இடையே சுமுகமான நல்லுறவு வளர வேண்டிய வழியை ஏற்படுத்துவன என்று கருதினர். ஆனால் மூன்று பொதுத் தேர்தல்கள், சோல்பரிக் குழுவினர் எதிர்பார்த்ததுபோல் நடக்கவில்லையென்பதையும் அமைச்சரவையினர் எதிர்பார்த்தவாறு எண்ணிக்கை வரவில்லை என்பதையுங் காட்டுவன :

| சமூகத்தினர் | அமைச்சர் எதிர்பார்த்தவை | எல்லைக் குழுவினர் எதிர்பார்த்தவை | 1947 | 1952 | 1956 |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 58 | 66 | 68 | 74 | 74 |
| இலங்கைத்தமிழர் | 15 | 12 | 13 | 12 | 12 |
| இந்தியத் தமிழர் | 14 | 10 | 7 | — | — |
| இஸ்லாமியர் | 8 | 6 | 6 | 8 | 7 |

1947-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சிறுபான்மையோர் மொத்தம் 26 தானங்களையே பெற்றனர். இவர்கள், அமைச்சரவையின் திட்டத்தின்படி 37 தானங்களையும் சனத்தொகையின்படி 28 தானங்களையும் பெற்றிருக்க வேண்டும். அதன் பிறகு வந்த பொதுத் தேர்தல்களில் நிலைமை கீழ்நோக்கி இறங்கிக் கொண்டே சென்றது. 1952-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் 20 தானங்களும், 1956-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் 19 தானங்களும் இவர்கள் பெற்றார்கள். பெரும்பான்மையோர் மேலதிகமான தானங்களையும் சிறுபான்மையோர் குறைந்த தானங்களையுமே பெறுவதாக உள்ள நிலைமை ஏற்பட்டது. சோல்பரிக் குழுவினர் இத்தகைய நிலைமை ஏற்படும் என்று கருதியிருப்பின் சிறுபான்மையோர் போதுமான அளவு தானங்களைப் பெறக் கூடிய வழிமுறைகளை ஏற்படுத்தியிருக்கலாம்.

பெரும்பான்மையோர் 1952, 1956-ம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களில் காத்திராத அளவு தானங்களைப் பெறுவதற்கு, 1948-ம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டம் (1949), பாராளுமன்றத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் (1949) ஆகியவையே காரணமாக இருந்தன. இவற்ருல் இந்திய வம்சாவளியினரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. ''சிறுபான்மையோரும் பிரஜாவுரிமைச் சட்டமும்'' என்னும் விடயமாய் இலங்கைச் சரித்திரச் சஞ்சிகை—முதலாந் தொகுதி மூன்ரும் இதழில்—கலாநிதி வீரவர்தன அவர்கள் கூறிய கருத்துரைகள் கவனிக்கக் கூடியவை.

''பிரஜாவுரிமைச் சட்டங்களின் முக்கியத்துவம் ஒரு சிறுபான்மைச் சமூகத்திற்கு ஓரமான தன்மை உடையவையாய் இவை இருப்பது மட்டுமல்ல; இவை ஒரு சமூக வகுப்பினர்க்கே ஓரமாக இருக்கும் எண்ணத்துடன் இயற்றப்பட்டவை. அவை இந்தியருக்கு எதிராக இயற்றப்பட்டனவென்பதிலும், தொழிலாளருக்கு எதிராக இயற்றப்பட்டவை என்பதே பொருந்தும். எனவே இக்கொள்கை இனப்பாகுபாடு மட்டுமன்றி அரசியற் பாகுபாடும் உடையது.

இச்சட்டங்கள் ஏற்கனவே வாக்குரிமை யுடையவர்களுடைய வாக்குரிமையைப் பறித்தன. இதனுல் இலங்கை இந்தியர்கள் தாங்கள் அடையக்கூடிய பாராளுமன்றத் தானங்களை அடைய முடியாமற் செய்யப்பட்டனர். இவ்வாறு செய்தமையால், இத்தொகுதிகள் பிரிக்கப்படுவதற்கு அடிப்படையாக அமைந்த நெறிகளே தடுமாற்றம் அடைந்துவிட்டன.. .. உண்மையாகத், தொகுதிகளை மாகாண அடிப்படையில், நிலப்பரப்பையும் சனத்தொகையும் கருதிப் பிரிக்கப்பட்ட திட்டமே, சனத்தொகையில் ஒரு முக்கியமான பிரிவினரின் உரிமை மறுக்கப்பட்ட காரணத்தால், அர்த்தமற்றதாகி விட்டது. சோல்பரித் திட்டம் சிறுபான்மையோரின் ஆதரவைப் பெற்றதற்கு, அத்திட்டம் சிறுபான்மையோர் ஓரளவு தானங்களை யடைய வழி வகுத்தமையே காரணமாகும். இலங்கை இந்தியரும் இவர்களில் ஒரு பிரிவினரே. இவர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டதால் தானங்களும் மறுக்கப்பட்டன. இதனுல் உடன்படிக்கையில் ஓர் ஒப்பந்தம் தகர்த்தப்பட்டு விட்டது. இலங்கை இந்தியருக்கு வாக்குரிமை மறுத்ததால் சிறுபான்மையோர் அடையக்கூடிய மொத்தத் தானங்களின் எண்ணிக்கை குறைந்தது. இது சிறுபான்மையோருக்கு அளித்த வாக்குறுதியை உடைத்ததாகும்.'' இவ்வாறு கூறிய கலாநிதி வீரவர்தன, தமது கட்டுரையை, ''மலானிசம் (Malanisum) தென்னுபிரிக்காவில் மட்டுமா உள்ளது'' என்ற பயங்கர கேள்வியுடன் மிகப் பொருத்தமாக முடித்துள்ளார். எனவே இலங்கை இந்தியருக்கு வாக்குரிமை மறுத்தது, அமைச்சரால் வகுக்கப்பட்டுச், சோல்பரிக் குழுவினரால் அச்சாத்திடப்பட்ட பிரதிநிதித்துவத் திட்டத்தின் அடிப்படையையே தகர்த்திவிட்டது. இதனுள் நம்பிக்கையைக் கைவிட்டதற்கு ஒரு சிறந்த தெளிவான எடுத்துக்காட்டு உண்டு.



1954-ம் ஆண்டு தைமாதம் நேரு — கொத்தலாவல ஒப்பந்தம் இலங்கை இந்தியர் பிரச்சனையைத் தீர்க்க முயன்றது. அப்போது, எமது பிரதிநிதிகள் சபையில், இலங்கை இந்தியருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென்ற பிரச்சனையும் ஆலோசிக்கப்பட்டது. இவ்வொப்பந்தம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருப்பின், இது தற்காலிகமாகவே இப்பிரச்சனையைத் தீர்த்திருக்கும். இவ்வொப்பந்தத்தின்படி முழு இலங்கைக்கும் பொதுவாகவோர் பிரத்தியேக இந்தியப் பாகிஸ்தானியத் தேர்தற் தொகுதியொன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் இந்தியப் பாகிஸ்தானியப் பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழ்ப்பதிவு செய்து கொண்டோரது பிரதிநிதிகளையுங் கீழ்ச்சபைக்குத் தெரிவு செய்யப்பட வழிவகுத்தனர். ஆனுல் இந்த வழிமுறை ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்கு மட்டுமே வகுக்கப்பட்டது. மேலும், ஏதாவதொரு தொகுதியில். இந்தியப் பாகிஸ்தானியப் பிரஜாவுரிமைச் சட்டத்தின்கீழ்ப் பதிவு செய்யப்பட்டோரது எண்ணிக்கை 250 பேர்கட்குக் குறைவாக இருப்பின், அவர்கள் சாதாரண வாக்காளர்களாகவே கருதப்படவேண்டும் என்றும், அவர்களைச் சிறப்பு இடாப்பில் சேர்க்கக்கூடாது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையை நடைமுறையில் கொண்டுவருவதற்கு 1954-ம் ஆண்டு, இந்திய—பாகிஸ்தானி (பாராளுமன்றப் பிரதிநிதித்துவச்) சட்டம்: எண். 36; இலங்கையரசியலமைப்பு (விசேஷ சரத்துகள்) சட்டம் எண். 35,- ஆகிய இரண்டு சட்டங்கள் கொண்டுவரப் பட்டன. இவற்ருல், இலங்கைப் பிரதிநிதிகள் சபையின் எண்ணிக்கை 105 ஆக உயர்த்தப் படவும், இவருள் நால்வர் இந்தியப் பாகிஸ்தானியருக்காக அமைக்கப்படும் பலபிரதிநிதிகள் அளிக்கும் ஒரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டோராக இருக்க வேண்டும் என்றும், விதித்தது. இந்நெறி, தேசாதிபதி குறிப்பிடுங் காலத்தில் தொடங்கி 1966-ம் ஆண்டுவரை நடைமுறையில் இருக்க வேண்டும். பாராளுமன்றம் 1966-இல் கலைக்கப்படாவிடின், இந்த நியதி அந்தப் பாராளுமன்றத்தின் கால முடிவு வரையும் நடைமுறையில் இருக்க வேண்டும். இத்தகைய உடன்படிக்கையின்படி இந்தியர்களுக்கும் பாகிஸ்தானியர்கட்கும் விசேட தொகுதியொன்றை அளிப்பது, இலங்கையரசியலமைப்பின் 29-வது சரத்திற்கு முரணுனதாதலால் இதனை நடைமுறைக்குக் கொண்டு வரும் ''இலங்கையரசியலமைப்பு (விசேட சரத்துக்கள்) சட்டம்: எண். 35 (1954),'' இலங்கையரசியலமைப்பை மாற்றுவதற்குத் தேவைப்படும் விசேட முறையிற் கொண்டுவரப்படல் வேண்டும். ஆனுல் மேற்படி சட்டம் இதுவரை நடைமுறைக்குக் கொண்டுவரப் படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலு இலங்கை இந்தியப் பிரதிநிதிகளின் தெரிவை அனுமதிக்கும் இச்சட்டம் இன்னும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படாததோடு, இத்தால் இலங்கை இந்தியருக்குக் கொடுக்கப்படும் பிரதிநிதிகளின் தொகை, அமைச்சரவையினர் குறித்த தொகையிலும் மிகக் குறைவான தென்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், **1952**-ஆம் ஆண்டிலிருந்து இரண்டாவது பாராளுமன்றத்திற்குத் தேசாதிபதியினுல் நியமிக்கப்பட்ட ஒரேயொரு இலங்கையிந்தியப் பிரதிநிதியைத் தவிர, இலங்கையிந்தியச் சமூகத்தினரின் கருத்துக்களைப் பாராளுமன்றத்தில் எடுத்துரைக்கக் கூடியோர் எவரும் இருக்கவில்லை. இன்றைய பாராளுமன்றத்தில் இலங்கையிந்தியரின் பிரதிநிதி ஒருவர்கூட இல்லை. எனவே, குறிப்பிடத்தக்கதோர் சனத்தொகையின், கருத்துக்களுக்குப் போதிய இடமளிக்கத் தவறும் காரணத்தால், இந்தப் பாராளுமன்றம் இயற்றும் சட்டங்கள் முற்றிலும் ஜனநாயக முறையானதெனக் கூற முடியாது. தேர்தற் பிரிவொன்றை யேற்படுத்தும் இவ்வொழுங்கு, குறுகிய கால எல்லைக்கே வரையறுக்கப்பட்ட போதிலும், அரசியலமைப்பின் நியமங்களுக்கு மாருக உள்ளது. அமைச்சரவையினரால் வகுக்கப்பட்டுச் சோல்பரிக் குழுவினரால் அச்சாத்திடப்பட்ட பிரதிநிதித்துவத் திட்டத்திஞல் கேவலமானதென நிராகரிக்கப்பட்டதும் இந்த இனமுறைப் பிரதிநிதித்துவமன்ருே. அப்படியல்லாவிடில் ஐரோப்பியரதும், பறங்கியரதும் பிரதிநிதிகளை நியமிக்கும் பொறுப்பைப் பிரதம மந்திரியிடம் ஒப்படைக்காது, அவர்களுக்கும் பிரத்தியோகத் தேர்தற் தொகுதிகளை அளித்திருக்கலாமே. இத்தகைய இனமுறைத் தெரிவைப் பெரும்பான்மையோரது அரசியற் தலைவர்கள் கடுமையாகக் கண்டித்ததிஞலன்ருே, சோல்பரிக் குழுவினர் எளிதாகத் தகர்த்தக் கூடிய சில வலுவற்ற காப்பீடுகளை மட்டுமே சிறுபான்மையோருக்கு அளித்து, அவர்களுக்கு நியாயமான அளவிற் பிரதிநிதித்துவமளிக்கும் பொறுப்பைப் பெரும்பான்மையோரது நல்ல மனப்பான்மைக்கு விட்டு வைத்தனர்

சிறுபான்மையோருக்குச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் அளிப்பதற்காகப், பல பிரதிநிதிகளை அனுப்பும் தொகுதிகளையும் ஏற்படுத்தலாம் எனச் சோல்பரிக் குழுவினர் பிரேரித்தனர். இதன் மூலம், சில குறிப்பிடப்பட்ட இடங்களிற் செறிந்து வாழும் பெருந்திரளான சிறுபான்மையோர் தமது பிரதிநிதியையும் தேர்ந்தெடுக்கலாம். இப்படியாகச் சிறுபான்மையோருக்குப் பிரதிநிதித்துவமளிக்கவும், அதேசமயத்தில் பிரத்தியேக இனமுறைத் தேர்தற் பிரிவை ஏற்படுத்துவதைத் தடுக்கவும் முடியும். ஆஞல் இத்தகைய வழிமுறை பயனளிக்க வேண்டுமாயின் சிறுபான்மைப் பிரிவில்



இருந்து ஓர் அபேட்சகரே தேர்தலிற் போட்டியிட முன்வர வேண்டும். அதுவுமின்றிச் சிறுபான்மைப் பிரிவினர், தங்கள் அரசியல் தொடர்புகளைக் கவனியாது, இந்த அபேட்சகரையே ஆதரிக்க வேண்டும். மேலும் பெரும்பான்மையோர் ஒன்றுபடாமல் பிரிந்து நின்றே வாக்களிப்பார்கள் என்ற துணிவையே இம்முறை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவ்வழிமுறை சிறுபான்மை அங்கத்தவரின் மரணம், ராஜிஞமா, பதவி நீக்கம் ஆகியவொன்ருல் ஏற்படும் இடைத்தேர்தலில் வெற்றி தரும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், இத்தகைய சந்தர்ப்பத்தில் இத்தேர்தல் தொகுதி ஓர் அங்கத்தவரையே தெரியும் தொகுதியாக மாறிவிடுமாதலின் சிறுபான்மையோர் பிரதிநிதி பெரும்பான்மையோர் பிரதிநிதியுடன் போட்டியிட்டு வெல்ல முடியாது. எனினும், இக் கருத்துக்களை மனதிற் கொள்ளாமல் முதலாவது எல்லை நிர்ணயக் குழுவினர் சோல்பரியின் வழிமுறையைச் செயற்படுத்தினர். இரு அங்கத்தவர் தொகுதிகள் நான்கும், மூவங்கத்தவர் தொகுதியொன்றும் ஏற்படுத்தப்பட்டன. இலங்கை இந்தியப் பிரதிநிதிகள் இடம் பெறவே பதுளை, பலான்கொடை ஆகிய தொகுதிகள் இரு அங்கத்தவர் தொகுதிகளாக்கப்பட்டன. மத்திய கொழும்புத் தொகுதி மூவங்கத்தவர் தொகுதியாக்கப்பட்ட காரணம், இத் தொகுதியில் ஒரு தமிழரும், ஓர் இஸ்லாமியரும் வெற்றி பெறுவார்கள் என்ற எண்ணமேயாகும். எல்லை நிர்ணயக் குழுவினர் எதிர்பார்த்தது போல், பதுளை, **1947**-ஆம் ஆண்டுப்பொதுத்தேர்தலில் முதலாவது பிரதிநிதியாக ஓர் இந்திய வம்சாவழியினரைத் தேர்ந்தெடுத்தது. ஆஞல் பலான்கொடையில் அவ்வாறு நடக்கவில்லை. இலங்கை இந்தியர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டபின் **1952**, **1956** ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல்களில் இவ்விரு தொகுதிகளும் பெரும்பான்மையோர் பிரதிநிதிகளையே பாராளுமன்றத்திற்கு அனுப்பின. எனவே இவ்விரு தொகுதிகளும், ஏற்படுத்தப்பட்ட நோக்கத்திற்கே வாய்ப்பளிக்கத்தவறுவதால் இத்தொகுதிகள் தொடர்ந்து இயங்கி வருவது பொருத்தமில்லை. இருந்தும் காலத்திற்குப் பொருந்தாத இவ்வழு, கீழ்ச்சபையின் எண்ணிக்கையைக் குறித்த அளவில் வைத்திருப்பதற்காகத் தொடர்ந்து நடைமுறையில் இருப்பதற்கு, இலங்கை அரசியலமைப்பு (விஷேஷ ஷரத்துக்கள்) சட்டம் எண் **54** (**1954**) இடமளிக்கின்றது. மத்திய கொழும்பு மூவங்கத்தவர் தொகுதியில் **1947**ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் ஓர் இஸ்லாமியர் வெற்றி பெற்ற போதும், ஒரு தமிழ் அபேட்சகர் இத்தேர்தலிலோ, அன்றிப் பின் நடந்த தேர்தலிலோ வெற்றியீட்டவில்லை. திரு. டி. பி. ஜயா அவர்களின் இராஜிஞமாவால் ஏற்பட்ட இடைத் தேர்தலில், இத்தொகுதி ஓரங்கத்தவரையே தெரியும் தொகுதியாக மாறிய போதும், அது ஓர் இஸ்லாமியரையே தெரிவு செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. போட்டியிட்ட அபேட்சகர்கள் கட்சி முறையிலே போட்டியிட்டமையே இவ்வெற்றிக்குக் காரணமாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் டாக்டர் கலீலும், சமவுடைமைக் கட்சியின் சார்பில் டாக்டர் விக்கிரமசிங்காவும் போட்டியிட்டனர். 1952ம் ஆண்டுப், பொதுத் தேர்தலில் இத்தொகுதியில் இரு இஸ்லாமியர் பிரதிநிதிகளும், 1956ம் ஆண்டுப், பொதுத் தேர்தலில் ஓர் இஸ்லாமியர் பிரதிநிதியும் வெற்றி பெற்றனர். இங்ஙனமாக இஸ்லாமியச் சிறுபான்மையோரைப் பொறுத்தமட்டில் முதலாவது எல்லை நிர்ணயக் குழுவினர் எதிர்பார்ப்புகள் செயற்பட்டன.

இத்தகைய பல அங்கத்தவர்த் தொகுதிகளின் ஒரு முக்கிய குறையானது என்னவெனில், சிறுபான்மை வாக்காளர் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரே பிரிவினராய் நின்று வாக்களிக்க வேண்டும். ஓர் அபேட்சகரின் அரசியற் கொள்கைகளைக் கவனியாது, அவர் தமது இனத்தைச் சார்ந்தவரென்ற ஒரே காரணத்திற்காக, அவருக்கு வாக்களிக்க வேண்டும். இத்தகைய மனப்பான்மை சுமுகமான அரசியல் வளர்ச்சிக்கு இடையூருனதாகும். எனவே சிறுபான்மையோர் பிரதிநிதியைத் தெரியக்கூடிய தனித் தொகுதியொன்றையேற்படுத்துவது இதைவிட நன்ரும். இத்தகைய தொகுதியில், வேறுபட்ட அரசியற் கட்சிகளின் அபேட்சகர்கள் போட்டியிடவும், எக்கட்சி வாக்காளர் மனத்தைப் பெரிதும் கவருகிறதோ, அக்கட்சியபேட்சகர் தேர்ந்தெடுக்கப்படவும் வாய்ப்புண்டு. இத்தொகுதி, ஒரு குறிப்பிட்ட இனத்திற்காக ஏற்படுத்தப்படவேண்டியதில்லை. எனவே ''இனவேற்றுமை அடிப்படையில் எழுந்த தொகுதி'' என்ற சாயல் இதற்கு அளிக்கப்படாது.

## தேசாதிபதியின் நியமனத்தால் சிறுபான்மையோருக்குப் பிரதிநிதித்துவம்

பொதுத்தேர்தலில் போதுமான அளவில் அல்லது முற்ருகப் பிரதிநிதித்துவம் பெறத்தவறிய பிரிவினரின் கருத்துக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் வாயிலாகத், தேசாதிபதி ஆறு பேர்கட்கு மேற்படாத எண்ணிக்கை நியமிக்கலாமென இலங்கையரசியலமைப்புக் (பிரிவு 11 சிறு பிரிவு 2) கூறுகிறது. அமைச்சரவைத் திட்டத்தின் 17 (1) சரத்தினும், சோல்பரிக் குழுவினரின் அறிக்கை 314ஆம் பகுதியிலும் இதே கருத்து வெளியிடப்பட்டுள்ளது. இது முக்கியமாகப் பறங்கியருக்கும், ஐரோப்பியருக்கும் பிரதிநிதித்துவமளிப்பதற்காக, வகுக்கப்பட்ட வழிமுறையாகும். பிரதிநிதிகள் சபையில் இஸ்லாமியர் போதுமான பிரதிநிதித்துவம் பெறத்தவறிய காலை, இத்தகைய நியமனத்தின் மூலம் அவர்களுக்கும் உரிய பிரிதிநிதித்துவம் அளிக்கலாமெனச் சோல்பரிக் குழுவினர் கூறினர்.



கீழ்வருமாறு சார். ஐவர் ஜெனிங்ஸ் கூறியுள்ளதை நாம் ஏற்க முடியாது. ''அங்கத்தவ நியமன அதிகாரம், பறங்கியர், ஐரோப்பியர், இஸ்லாமியரைப் பொறுத்தவரை மட்டுமே உபயோகிக்கலாமென்று கூறமுடியாது. இப்படியாக ஓரிந்தியர், இலங்கைத் தமிழர், கண்டிச் சிங்களவர் ஆகியோரைக்கூட நியமிக்கலாம். இது இங்ஙனம் இனமுறையிற் கையாளப்பட வேண்டுமென்பது கூட இல்லை. ஒரு பிரிவினரென்பது ஒரு சாதி, ஒரு வகுப்பு அல்லது ஒரு தொழிற்பிரிவு ஆகியவற்றில் ஒன்ருகவும் இருக்கலாம்,'' என அன்ஞர் கூறியுள்ளார். இவ்வழி முறையில் ஓர் இலங்கைத் தமிழரையோ அல்லது கண்டிச் சிங்களவரையோ நியமித்தல் நியாயமாகாதென்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். ஏனெனில் மேற்படிப் பிரிவினர்கள் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு வேறு மார்க்கங்கள் பல உள. எனவே ஐரோப்பியர், பறங்கியர், மலாயர் இந்தியர் ஆகிய பிரிவுகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிப்பதற்கு மட்டுமே இவ்வழி முறையைப் பயன்படுத்தலாம். இதுவரை நடைமுறையிலிருந்து வருவதும் இதுவேயாகும். முதலாவது பாராளுமன்றத்திற்கு 4 ஐரோப்பியரும், 2 பறங்கியரும், நியமிக்கப்பட்டனர். இரண்டாவது பாராளுமன்றத்திற்கு மூன்று ஐரோப்பியரும் இரண்டு பறங்கியரும் ஓரிலங்கை இந்தியரும் நியமிக்கப்பட்டனர். மூன்ருவது பாராளுமன்றத்திற்கு 3 ஐரோப்பியரும், 2 பறங்கியரும் ஒரு மலாயரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை நியமிக்கும் முறை சில முக்கிய கேள்விகளை எழுப்புகின்றன. இந்நியமனத்தில் தேசாதிபதி தன்னிஷ்டப் பிரகாரம் நடப்பதா? பிரதம மந்திரியின் ஆலோசனைக்கேற்ப நடப்பதா? அல்லது, இங்ஙனம் பிரதிநிதித்துவம், அளிக்கப்படவிருக்கும் பிரிவினரின் ஆலோசனைப்படி நியமிப்பதா? சோல்பரிக் குழுவினர் முன் சமூகமளித்த ஐரோப்பியரும், பறங்கியரும், தாம் இங்ஙனமாக நியமிக்கப்படுவதால், ''இராணிமாளிகையின் கடன்காரர்களும், செல்லப்பிள்ளைகளும்'' எனவும் ''தேசாதிபதியின் கூற்றுக்களையே கூறுபவர்களெனவும்'' இழிவு படுத்தப் படுவதாக முறையிட்டு, இனிமேல் தனித் தொகுதிகள் மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பைத் தமக்களிக்கும்படி கேட்டுக் கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும், இத்தனித் தொகுதித் தெரிவு முறை இனவழிச் செல்வதால் அதனை நிராகரித்த சோல்பரிக் குழுவினர், தேசாதிபதியின் கையில் நியமன உரிமையை அளித்தனர். இந்நியமனங்களில் தேசாதிபதி தன்னிஷ்டப் பிரகாரம் நடக்க வேண்டுமெனச் சோல்பரிக் குழுவினர் கருதியிருக்கலாமாயினும் இதைப்பற்றி அவர்கள் அறிக்கையில் எதுவும் கூறப்படவில்லை. அமைச்சரவையினர் வரைவுத்திட்டமும் (17 (3) சரத்து) இந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனங்களில் தேசாதிபதி தன்னிஷ்டப்பிரகாரமே நடக்க வேண்டுமெனக் கருதியது. இந்நியமனங்களில் தேசாதிபதி எவ்வித பாகுபாடுமின்றி நடப்பார் என அமைச்சர்கள் கருதினர் போலும். மேலும் இந்நியமனங்களில் பிரதம மந்திரியின் ஆலோசனைகள் அரசியல் முகாந்திரங்களை அடிப்படையாகக் கொண்டிருக்குமெனக் கருதியிருக்கலாம்.

ஆனால் இலங்கை அரசியலமைப்பின் பிரிவு 4 (2), இன்படி தேசாதிபதி கூடியவரை பிரதமரின் ஆலோசனைப்படி செயலாற்ற வேண்டும் எனவே, பிரதம மந்திரி ஒரு மும்முரமான அரசியல் வாதியாகவும் இருப்பதால், அவரது ஆலோசனைகளும் அரசியல் முகாந்திரங்களுக்கேற்ப அமையும் என்பதில் ஐயமில்லை. இங்ஙனம் பிரதம மந்திரியால் நியமிக்கப்படுபவர்கள், அவர்கள் பிரதிநிதித்துவம் அளிக்கும் பிரிவினர்களின் பிரதிநிதிகளாகக் கருதப்படலாமா என்ற கேள்வி இங்கு எழுகிறது.

தாங்கள் பிரதிநிதித்துவமளிக்கும் பிரிவுகளின் உரிமைகளுக்கோ அல்லது பொதுவாகச் சிறுபான்மை உரிமைகளுக்கோ ஆபத்து வரவிருக்கும் நிலையில், இங்ஙனம் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்கள் சுய மனப்பான்மையோடு நின்று தடுக்க முயல்வார்களா? பிரதம மந்திரி பிரதிநிதித்துவமளிக்கப்பட வேண்டிய சிறுபான்மைப் பிரிவினருடன் கலந்து ஆலோசித்தே தேசாதிபதிக்கு ஆலோசனை கூறுவார் என்று கூறுவதற்கு ஆதாரமில்லை. இவ்வாறு பிரதம மந்திரியினால் நியமிக்கப்பட்ட அங்கத்தினர்களின் மனத்திலே, தாம் நியமிக்கப்பட்டது போலவே நீக்கவும் படலாம் என்ற பயமும், அரசாங்கத்தை எதிர்த்தால் உடனடியாகத்தமக்குக் கட்டாய ஓய்வு கிடைக்கும், அல்லது அடுத்த தவணை தம்மை நியமிக்காது விடுவர் என்ற எண்ணமும், உறுத்திக்கொண்டேயிருக்கும். இங்ஙனமாக முதலாம் பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட E F.N. கிரேசியன் அவர்கள் தமது சுதந்திரமான நடவடிக்கைகளால் அரசாங்கத்திற்குப் பெருந் தலையிடியைக் கொடுத்த காரணத்தினால் அவரது முழுத்தவணையும் முடியுமுன்பே அவரைப் பாராளுமன்றத்தினின்று நீக்கி, உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமித்தனர். இலங்கை இந்தியர் பிரதிநிதியாக இரண்டாவது பாராளுமன்றத்திற்கு நியமிக்கப்பட்ட S. P. வைத்தியலிங்கம் அவர்கள், நியமிக்கப்பட்ட அங்கத்தவரொருவர் அரசாங்கத்திற்கெதிராக வாக்களிக்க நேரிட்டால், உடனே அவர் ஸ்தானத்திலிருந்து இராஜினாமாச் செய்துவிட வேண்டுமென்ற தப்பான அபிப்பிராயத்தைக் கொண்டிருந்தார். 1952ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ம் திகதி, தமது சமூகத்தினர் நலனுக்கு மாறுபட்ட, "இந்தியப் பாகிஸ்தானியக்



குடியினர் (பிரஜாவுரிமை) திருத்த மசோதா" இரண்டாவது வாசிப்புக்குப் பிரதிநிதிகள் சபையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அன்னார் மேற்படி அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். ஆனால், மனத்தை மாற்றும்படி பல அங்கத்தவரும் கேட்டுக் கொண்டதற் கிணங்க, கார்த்திகை மாதம் 12ம் திகதியன்று அவர் அளித்த வாக்குமூலம் முக்கியமானது.

"சபாநாயகரவர்களே! உங்களுடைய உத்தரவுடனும் சபையின் தயையுடனும் யானொரு சொந்த வாக்குமூலம் அளிக்க விரும்புகிறேன். சென்ற செவ்வாயன்று, இவ்விவாதம் பற்றிய எனது சொற்பொழிவில், நான் இந்த முறிக்கெதிராக வாக்களிப்பேன் என்று இச்சபைக்குக் கூறியிருந்தேன். மேலும், நான் ஒரு நியமன அங்கத்தவராய் இருப்பதால், எனது இச்செயலின் விளைவாக நான் இச்சபையின் அங்கத்தவர் பதவியைவிட்டு நீங்கி விடுவேன் என்றும் கூறியிருந்தேன். அரசாங்கத்துடன் எக்கொள்கையிலும் கருத்து வேறுபாடு உள்ளவனாயிருப்பின் பதவியை இராஜினாமாச் செய்வதே நியமன அங்கத்தவனாய எனது கடமை என நான் அத்தருணத்திற் கருதினேன். அதன்பின் சபையின் இருமருங்கினர் பலரும் எனது முடிவைத் திரும்பவும் ஆலோசனை செய்யும்படி வேண்டினர். நியமன அங்கத்தவர்கள் அரசாங்கத்திற் கெதிராக வாக்களித்த பின்பும் தொடர்ந்து தம்பதவிகளில் இருந்தமைக்குப் பல மேற்கோள்கள் எடுத்துக்காட்டப்பட்டன. கழகத்துப்பணி பிரிவு 11 (2) இன்படி, முற்றாக அன்றிப் போதுமான அளவு பிரதிநிதித்துவம் பெறாத பிரிவைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதிப்பதற்காகவே நான் நியமிக்கப்பட்டேன், என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே, நான் எப்பிரிவின் பிரதிநிதியாகச் செயலாற்றுகிறேனோ, அப்பிரிவின் நலனுக்கு மாறான செயல்களில் நான் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்று தயங்குவது அரசியலமைப்பின்படி பிழையானது. இவ்விஷயங்களைக் கவனமாகச் சிந்தித்தபின், நான் இராஜினாமாச் செய்வது எனது கடமையிலிருந்து தவறுவதோடு ஒரு பிழையான மரபையும் உண்டாக்குவதாகவும் முடியும் என்பதை உணர்ந்து, முன்பு நான் தீர்மானித்தபடி, எனது பதவியை இராஜினாமாச் செய்யமாட்டேன் என்பதை இச்சபைக்கு அறிவிக்க விரும்புகிறேன்." [5]

மேற் குறிக்கப்பட்டதிலிருந்து திரு. வைத்தியலிங்கம் அவர்களே தாம் பிரதிநிதித்துவம் செய்யும் பிரிவினருக்குரிய தமது கடமைகள் என்ன என்பதுபற்றித் தெளிவான அபிப்பிராயமுடைய

5. Official Report; Parl. Debates, House of Rep. vol. 13. Columns 847 & 848.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வராய் இருக்கவில்லை என்பதும் தெரிகிறது. பின்பே, தனது சமூகத்தைத்தொடும் காரியங்களில் தாம் எவ்வாறு வாக்கு அளிக்க வேண்டும் என்று தீர்மானித்தார். இதே கருத்துப் பிற சிறுபான்மைப் பிரிவினர் நலனைப் பாதிக்கும் காரியங்களிலும் கொள்ளப்படுமோ? திரு. வைத்தியலிங்கத்தின் கூற்றுக்களை நோக்கின் அவ்வாறு தெரியவில்லை. ஐரோப்பிய நியமன அங்கத்தவராகிய சிங்கிள்டன் சல்மன் அவர்களின் எண்ணப்போக்கும் இதனையே காட்டுகிறது. தனிச்சிங்கள முறி கருத்திற்கெடுக்கப்பட்டபோது சிறுபான்மையோர்பால் நியாயமாக நடக்கும்படி அரசாங்கப் பாராளுமன்ற அங்கத்தினர் குழுவிற்கு இவர் விண்ணப்பித்தார் என்று, இலங்கை 'டெய்லி நியூஸ்' என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது. 6 ஆனால் சிறுபான்மையோர் பயத்தை நிவர்த்திக்க எந்த மாற்றங்களும் இந்த முறியில் செய்யப்படவில்லை. இருப்பினும், இந்த முறி மக்கட் சபையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது திரு. சிங்கிள்டன் சல்மனும் அதனை ஆதரித்தே வாக்களித்தார். எனவே, நியமன அங்கத்தவர், தமது சொந்தப் பிரிவுகளின் நலனைப் பாதிக்கும் தருணங்களையொழிந்த, ஏனைய தருணங்களில் தங்களது தனிப்பட்ட கருத்துக்களுக்கு இடமளிக்காது அரசாங்கத்தின் கொள்கையை ஆதரிக்க வேண்டும் என்ற முடிவையே எடுத்துள்ளனர் எனலாம். அவர்கள், ஒரு பொறுப்புள்ள தேர்தற்தொகுதியால் தெரியப்படாது, பிரதமரால் நியமிக்கப்படுவது, அவர்களது சுதந்திரத்தைப் பறிப்பதோடு, அவர்களை, மதிப்புக்குரிய மந்திரிகள் போலல்லாது, ஆளும் கட்சிக்குப் பலமளிக்கும் படைகள் போற் தோன்றச்செய்கிறது.

எனவே இந்நியமன அங்கத்தவர்கள், அவர்கள் பிரதிநிதித்துவம் அளிக்கும் பிரிவினரின் உண்மையான நம்பிக்கை வாய்ந்த பராமரிப்புக்காரர் எனக் கருதமுடியாது.

## சிறுபான்மையோர் நலன்களைப் பாதிக்கும் முறிகள்

அரசியலமைப்பை மாற்றவல்ல வழிமுறைகளும், எமதரசியலமைப்பின் இருபத்தொன்பதாம் பிரிவின் உட்பிரிவுகளாகிய இரண்டிலும், மூன்றிலும் 29 (2—3) அடங்கியுள்ள சிறுபான்மை உரிமைகளின் பாதுகாப்புக்களும் இச்சிறுபான்மைப் பிரதிநிதித்துவத்தோடு சம்பந்தப்பட்டவை.

6. Vide Ceylon Daily News, City Ed. of May 23, 1956. P.I.



அரசியலமைப்பின் இருபத்தொன்பதாம் பிரிவின் உட்பிரிவுகள் இரண்டும், மூன்றும், பாராளுமன்றத்தின், சுயாதிபத்தியத்தைக் கட்டுப்படுத்துகின்றன. எனினும் இவை சுயமாக ஏற்படுத்தப்பட்ட வரம்புகளாகையால், அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அகற்றப்படலாம்.

குறிப்பிடப்பட்ட 29 (2)ம் பிரிவின்படி பாராளுமன்றத்தினலாக்கப்படும் எந்தச் சட்டமும்:-

(i) எந்தச் சமயத்தினதும் சுயமான செயல் முறையைத் தடுக்கவோ அன்றிக் கட்டுப்படுத்தவோ கூடாது.

(ii) பிறவினங்களையோ அல்லது சமயங்களையோ சேர்ந்தவர்களைப் பொறுப்பாக்கப்படாத இடைஞ்சல்கட்கோ, கட்டுப்பாடுகட்கோ, ஒரு தனிப்பட்ட இனத்தையோ, சமயத்தையோ சேர்ந்தவர்களை உட்படுத்தக்கூடாது.

(iii) பிறவினங்களையோ அன்றிச்சமயங்களையோ சேர்ந்தவர்கட்கு அளிக்கப்படாத நயமோ அல்லது பிரயோசனமோ ஒரு குறிப்பிட்ட இனத்தையோ அன்றிச் சமயத்தையோ சேர்ந்தவர்கட்கு அளிக்கக்கூடாது.

(iv) எந்தவொரு சமயக் குழுவின் அமைப்பையும் அந்தக் குழுவையாழ்வோர் சம்மதமின்றி மாற்றியமைக்கக் கூடாது. ஒரு சமயப் பிரிவு சட்டத்தினால் இணைக்கப்பட்டிருப்பின், அந்தக் குழுவின் பராமரிப்பு அதிகாரத்தின் வேண்டுகோளின்படியே, அதனமைப்பு முதலியன மாற்றப்படலாம்.

இருபத்தொன்பதாம் பிரிவின் மூன்றும் உட்பிரிவின்படி, மேற்குறிக்கப்பட்ட உபபிரிவின் சரத்துக்கு முரணாக ஆக்கப்பட்ட சட்டங்கள் செல்லுபடியாகா. ஆனால் மூன்றும் உட்பிரிவு பாராளுமன்றம் ஆக்கும் ஓரமான சட்டங்களை முழுதாக நிராகரிப்பது என்று கருத முடியாது. ஏனெனில் தொடர்ந்து வரும் உட்பிரிவு சட்டரீதியாக, உட்பிரிவுகள் இரண்டாலும், மூன்றாலும் ஏற்படுத்தப்பட்ட வரம்புகளை மீறுவதற்கு இடமளிக்கின்றது. பொதுவாக இவ்வுட்பிரிவு, பாராளுமன்றம் குறிப்பிட்ட தடைகளையோ அல்லது அரசியலமைப்பின் சரத்துக்களையோ திருத்தியமைக்கவோ அன்றி நீக்கவோ இடமளிக்கின்றது. இத்தகைய முறி, மக்கள் சபையின் (சமூகம் அளிக்காதவர்களுட்பட) மூன்றிலிரண்டு பகுதியினரின் ஆதரவைப் பெறல் வேண்டும். எனவே இந்நிலையில், அரசியலமைப்பிற் திருத்தங்கள் ஏற்படுத்தும் நோக்கமாக இம்முறிகளைக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்பொழுது, பாராளுமன்றத்தில் (தானங்கள் ஒன்றும் காலியாகாமல் இருப்பின்) 68 அங்கத்தவர்களின் ஆதரவைப் பெறவேண்டுமென்பது பெறப்படுகின்றது.

சோல்பரிக் குழுவினர் 29ம் பிரிவு (2) (3) சரத்துக்களோடு பிறிதொரு காப்பீட்டையும் எடுத்துரைத்தனர். "ஓர் இன அல்லது சமயப்பிரிவின் எதிர்ப்புக்குள்ளான எந்தவொரு முறியும், மேற்படி பிரிவுக் கொவ்வாதனவாகவோ அன்றி அநீதியாகவோ இருப்பதாகத் தேசாதிபதி கருதின், அம்முறி மகாராணியின் ஒப்பத்திற்கு எடுத்துவைக்கப்படல் வேண்டும்," என்பதே இக்காப்பீடாகும். 6 அமைச்சரவைத்திட்டம் 38 (1) சரத்தும் இதனையே கூறுகின்றதெனினும், ஒரு சாதாரண அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் இச்சரத்தை மாற்றியமைக்க வசதியளித்திருக்கின்றது.

ஆனல் சோல்பரிக் குழுவினரோ, அரசியலமைப்பின் எந்தச் சரத்தையும் நீக்கவோ திருத்தவோ முயலும், அல்லது அரசியலமைப்பின் தன்மைக்குப் பொருந்தாதமையும், எந்த முறியும், நாட்டுக் காரியதரிசியின் அனுமதி பெருத பட்சத்தில் தேசாதிபதியினுல் மகாராணியின் ஒப்பத்திற்குக் கட்டாயம் எடுத்து வைக்கப்படவேண்டுமென்பதை, அரசியலமைப்பை உட்படுத்தும் கழகத்துப் பணியே விதிக்க வேண்டுமென விரும்பினர். 7 எனவே சோல்பரிக் குழுவினரும், அமைச்சரவையினரும், சிறுபான்மையோரின் தற்காப்பிற்கும் உரிமைகளுக்கும் ஆபத்து விளையக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படும் என எதிர்பார்த்தேயுள்ளனர். அமைச்சரவையினர், இத்தகைய திருத்தங்களும், நீக்கங்களும், விஷேஷமான அரசியலமைப்புத் திருத்த முறையில் வரவேண்டுமெனக் கூறி, அவற்றைக் கடினமாக்குவதுடன் அமைதிபெற்றபோதும், சோல்பரிக்குழுவினர் இக்காப்பீடுகளை நீக்கவோ, திருத்தவோ சட்டசபையினர்க்கு இடமளிக்காது விடத்துணிந்தனர். எனினும் மேற்படி விதி வைகாசி மாதம் 1946 ம் ஆண்டு கழகப் பணியில் சேர்க்கப்படவில்லை. வைகாசி மாதம், 1943ம் ஆண்டு மகாராஜாவின் அறிக்கையினுல் எதிர்பார்க்கப்பட்ட அரசியலமைப்பின் கீழ் இவ்விதி செயற்பட்டிருக்கலாம். ஆனல் பூரண சுதந்திரத்தின் பின் இத்தகைய விதி சுயாதிபத்தியத்திற்கு ஒவ்வாததாகும். கழகத்துப்பணியில் சேர்க்கப்பட்டிருப்பினும் செயல் முறையிற் பயன்படாது. ஏனெனில் அத்தகைய முறிகள் மகாராணியின் ஒப்பத்திற்கு எடுத்து வைக்கப்பட்டிருப்பினும், பிரதம மந்திரியின் ஆலோசனைப்படியே இவ்வொப்பம் அளிக்கப்படும்.

---

6. Soulbury Report Paragraph 332 (V)
7. Ibid Paragragh - 335



ஆகவே எமது அரசியலமைப்பின் 29ம் பிரிவை, எத்துணைக் குறைபாடுள்ள போதும், ஓர் உரிமைகள் முறியென்று கருதலாம். 29ம் பிரிவைத் திருத்துவதற்குச் சபையின் மூன்றிலிரண்டு அங்கத்தினர் வாக்குகள் வேண்டுமென்பதே இதில் கவனிக்கப்பட வேண்டியது. 101 அங்கத்தினர்கள் கொண்ட சபையில் மூன்றிலிரண்டு பிரிவினர் எனின் 68 பேர் வாக்களிக்க வேண்டும். அமைச்சரவையினர் அளித்த பிரதிநிதித்துவத் திட்டத்தின்படி பெரும்பான்மையோர் 58 வாக்குகளும், சிறுபான்மையோர் 43 வாக்குகளும் பெறுவார்கள் என்ற குறிப்பே, இம்மூன்றிலிரண்டு பங்கு வாக்குகள் தகுந்த காப்பீடாகப் போதுமானவை எனச் சோல்பரிக் குழுவினர் கருதுவதற்குக் காரணமாயிருந்தது. அத்தகைய நிலையில் பெரும்பான்மையோர் ஒன்றுபட்டு வாக்களித்தபோதும், எந்த மாற்றமும், சிறுபான்மையோரில் பத்து வாக்குகள் பெருது நிறைவேற முடியாது. சோல்பரிக் குழுவினர் மேற்சபையைச்சிறுபான்மை யுரிமைப் பாதுகாவலனுக்குவதில் அதிகக் கவனம் செலுத்தாது விட்டதிலிருந்து அவர்கள் மேற்கூறப்பட்ட ஏனைய காப்பீடுகளுக்கு எத்தகைய முக்கியத்துவம் அளித்தனர் என்பது விளங்கும். சோல்பரிக் குழுவினர் தமது அறிக்கை யின் 297ம் பிரிவில் "மேற்சபையினேர் பெரும்பாலும் இனஅடிப்படையிற் தெரிந்தெடுக்கப்பட மாட்டார்கள்" என்ற நம்பிக்கை யையும், சிறுபான்மையோர் தமக்குக் கீழ்ச்சபையிற் கிடைத்துள்ள மேலதிகமான தானங்களுடனும், புதிதாக வகுக்கப்பட்ட தொகுதிப்பிரிவு முறையுடனும், பெரும்பான்மையோர் ஆதிக்கத்தை எதிர்க்க முடியுமென்ற கருத்தையும் வெளியிட்டுள்ளனர்.

### சிறுபான்மையுரிமைப் பாதுகாவலனுக மேற்சபை:

மக்கள் சபையில் 66 தொடக்கம் 68 வரை தானங்களைப்பெரும்பான்மைப் பிரிவினரே கைப்பற்றுவரென அறிந்திருந்தால், சோல்பரிக் குழுவினர் ஒரு வேளை மேற்சபைக்கு வலுவளிக்க முனைந்திருப்பர்; அல்லது அரசியலமைப்பின் 29ம் பிரிவைத் திருத்துவதற்குக் கீழ்ச்சபையில் நாலில் மூன்று பகுதி வாக்குகள் தேவையென்றதொரு விதியையாவது ஏற்படுத்தியிருப்பார்கள். வைகாசி 1943இன் மேன்மை தங்கிய மன்னரது அறிக்கை, அமைச்சரவை வகுக்கும் எத்திட்டமும் ஏற்கப்படுவதற்கு இத்தகையதோர் நியதியும் அமைய வேண்டுமென விதித்தது.

சிறுபான்மையுரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கமாகவே, எமது அரசியலமைப்பு ஒரு மேற்சபைக்கும் இடமளிக்கிறது. எனினும் இது மேற்சபைக்குள்ள கடமைகளுள் ஒன்றே என்பது சுட்டிக்காட்டப்பட்டது. ஏனெனில் தேவைப்பட்ட காப்பீடுகள் யாவும் கீழ்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையமைப்பிற் தரப்பட்டு விட்டன என்று சோல்பரிக் குழுவினர் கருதினர். மேலும் மேற்சபையில் இனமுறைப் பிரதிநிதித்துவம் அதிகமாக அமையக் கூடாதென்றும் அவர்கள் கருதினர்.

சிறுபான்மையோர் கீழ்ச்சபையிலேயே பிரதிநிதித்துவம் பெறல் வேண்டுமென அவர்கள் கருதினர். ஆனால் மேற்சபை, எத்தகைய அங்கத்துவம் வாய்ந்ததாய் அமைந்தபோதும், 'பெரும்பான்மை ஆதிக்கத்தால் வருந்துவோர் இதனை எண்ணாவிரையும் சட்டங்களைத் தடுக்கும் கருவியாகவும்,' 'சச்சரவான விடயங்களையும், அமைதியான சூழலில், விவாதிக்கக் கூடிய ஓர் இடமாகவும்' கருதலாம், 8 எனக் கூறினர். வர்த்தகத்தில் அல்லது வேறு துறைகளில், விசேடமான சிறப்புப் பெற்ற காரணத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட மேற்சபையங்கத்தவர், எத்தகைய கோபமூட்டும் விடயங்களை வாதித்தபோதும், தெளிந்த சிந்தையுடனேயே நடப்பரன்றோ. ஆனால் மேற்சபை, அதன் அமைப்பு முறை இருக்கும் நிலையில், எவ்விடயத்திலும் ஓரளவு காலதாமதம் ஏற்படுத்தலாமேயன்றித், தன்னிட்டப் பிரகாரம் இயங்கத் தீர்மானித்த மக்கள் சபைக்குத் தடையாக அமைய முடியாது. எனினும் இங்ஙனம் தாமதமேற்படுத்துவதால் இடைப்பட்ட காலத்தில் ஒருடன்பாடு ஏற்படுவதற்கு மேற்சபை வாய்ப்பளிக்கும்.

மேற்சபையங்கத்தவருள் அரைப்பகுதியினரைத் தேசாதிபதி தன் இட்டப்படி நியமிக்க விடப்பட்டிருப்பின், மேற்படி திட்டம் திருப்திகரமாக நடந்திருக்கும். இதுவே சோல்பரிக் குழுவினர் கருத்தாகவும் இருந்தது. ஆனால், 1947ம் ஆண்டின் சுதந்திரக் கட்டளையினால், தேசாதிபதி தன்னிட்டப்படி நடக்கும் உரிமை மறைந்து, அவர் பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி நடக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இத்தகைய சூழ்நிலையில் பிரதம மந்திரி மேற்சபையிற் பெரும்பான்மை வாக்குகளைக் கட்டாயமாகப் பெறலாம். நியமன அங்கத்தவர், பிரதம மந்திரியையே ஆதரிக்க வேண்டுமென்ற நியதி இல்லாவிடினும், தனது கட்சியை ஆதரிப்போரையே நியமிக்கும்படிப் பிரதமர் தேசாதிபதிக்கு ஆலோசனை கூறுவார். மேலும், மறுமுறையும் நியமனம் பெறும் வாய்ப்பிருப்பதால், நியமிக்கப்பட்டவர்கள். பிரதமரை எதிர்ப்பதைத் தவிர்க்கவே முயல்வர். ஆகவே மேற்சபையை சிறுபான்மையுரிமைப் பாதுகாவலனாக இந்நாட்டிற் கருதமுடியாது. எந்த அரசாங்கமும் தன் பதவிக்காலத்தில் ஒரு நிலையில் மேற்சபையிற் பெரும்பான்மையான வாக்குகளைப் பெறும் வாய்ப்புண்டாகையால், அவ்வரசாங்கம் சிறுபான்மையுரிமைகளைப் பறிக்கத் துணிந்தவிடத்தில், அதனைத் தடுக்கும் ஆற்றல் கீழ்ச்சபையிலுள்ள சிறுபான்மைப் பிரதிநிதிகளுக்கு அற்றுவிடுகிறது.

---

8. Ibid Paragraph 298



## சட்டத்துறையில் சிறுபான்மையுரிமைக் காப்பீடுகள்

பாராளுமன்றத்தினால் இயற்றப்படும் சட்டங்கள், அரசியலமைப்பின் சொற்குறிப்பிற்கோ, அல்லது உணர்விற்கோ முரணானவை என்னும் ஐயம் தோன்றலாம். அரசியலமைப்பின் வேறுபட்ட உட்பிரிவுகள் பற்றிய சந்தேகங்களும், சங்கடங்களும் எழலாம். இப்பிரச்சனைகளேற்படும் காலத்தில் நீதிபதிகளே மத்தியஸ்தர்களாக இயங்கி அரசியலமைப்பின் பிரிவுகளுக்குச் சரியான உரை செய்ய வேண்டியிருக்கும். எனவே, சிறுபான்மை யுரிமைகளைக் காக்கவல்ல, வலிவும் சுதந்திரமும் பெற்ற, நிதிக்களம் முக்கியமானதாகும். சோல்பரிக் குழுவினரும், அமைச்சரவையினரும், பிரதம நீதிபதியையும் உயர்நீதி மன்றத்து நீதிபதிகளையும் தேசாதிபதியின் சொந்தக் கருத்திற்கேற்ப நியமிக்க வேண்டும் என்று கூறியதன் மூலம், இதற்கு வழி முறை செய்துள்ளனர். தேசாதிபதி அரசியல் விவகாரங்களிற் பங்கற்றவராதலின், அவரது சொந்த நியமனம், பிரதம மந்திரியின் ஆலோசனைக்கேற்ப நியமிப்பதிலும் பார்க்கச், சிறப்பானதே. தேசாதிபதி, இந்நியமனங்களைச்செய்கையில், சொந்த விருப்பு வெறுப்புக்களால் வழிகாட்டப்படலாம்; அல்லது, பிரதமரின் விருப்பிற்கேற்ப நடப்பின் தமது பதவிக்காலம் நீடிக்கலாம் அல்லது ஓய்வுக்காலத்தில் வேறு பதவிகள் பெறலாம், என்பன போன்ற தூண்டுகோல்களாலும் பாதிக்கப்படலாம், என்று வாதிக்க இடமுண்டு. எனினும் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் நியமனங்களைச் செய்வதிலும், தேசாதிபதி தமது சுயமான கருத்திற்கிணங்க நியமனங்களைச் செய்யின், அந்நியமனங்களில் அரசியற் கருத்துக்கள் அதிகதூரம் முக்கியத்துவம் பெறா. ஆனால் எமது அரசியலமைப்பு பிரதமரின் தலையீட்டிற்கு இடமளிக்கிறது. பிரிவு 52 (1), பிரதம நீதிபதி, உயர்நீதி மன்றத்து நீதிபதிகள், பருவ நீதிமன்றத்து ஆணையாளர்கள் ஆகியோர் தேசாதிபதியால் நியமிக்கப்படல் வேண்டும் என்று விதிக்கிறது. பிரிவு 4 (2) இன்படி, தேசாதிபதியவர்கள் பிரதம மந்திரியின் ஆலோசனைக்குக் கட்டுப்படவேண்டும். இத்தருணத்தில், இதனைவிடச் சிறப்புடைய இந்திய முறையினைக் கவனித்தல் நலமாகும். இந்திய அரசியலமைப்பின் பிரிவு 124 (2), ஜனாதிபதியவர்கள் ஓர் உயர்நீதிமன்றத்து நீதிபதியை நியமிக்கும் பொழுது, சம்பந்தப்பட்ட உயர்நீதிமன்றத்து நீதிபதிகளினதும், இராஜ்யங்களின் பெருநீதிமன்றத்து நீதிபதிகளினதும் கருத்துக்களைக் கேட்கவேண்டுமென்றும்; பிரதம நீதிபதியொழிந்த ஏனைய நீதிபதிகளை நியமிக்கும் பொழுது, இந்தியப் பிரதம நீதிபதியின் கருத்தையும் கேட்கவேண்டுமென்றும் விதிக்கிறது. எனவே, இலங்கைத் தேசாதிபதியைப் போலல்லாது இந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திய ஜனாதிபதி பிரதம மந்திரியின் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டவரல்லர். இந்திய அரசியலமைப்பு இவ்விடத்தில் பிரதம மந்திரியின் தலையீட்டிற்கு எவ்விதத்திலும் இடமளிக்கவில்லை.

எனினும், இந்நாட்டில், நீதிபதியை உயர்நீதிமன்றத்திற்கு நியமித்த பின்னர் அவருக்குச் சுதந்திரம் உறுதிசெய்யப்பட்டுள்ளது என்று வாதிக்கலாம். ஏனெனில், அவர் ஓய்வு பெறவேண்டும் வயதெய்தும் வரைக்கும், நன்நடத்தையினராய் இருப்பின், பதவியில் தொடர்ந்து இருக்கலாம் என்றும், அவருடைய பதவிக் காலத்தில் அவரது சம்பளத்தைக் குறைக்க முடியாதென்றும், அரசியலமைப்புக் கூறுகின்றது. இவை சுதந்திரமான நீதிக்களம் இயங்குவதற்கு முக்கியமானவை எனினும் இவற்றால் மட்டும் தலையீடுகள் தடுக்கப்படலாம் என்று கூறிவிட முடியாது. உயர்நீதி மன்றத்தின் சுதந்திரத்தைப்பாதிக்கக் கூடிய சரத்துக்கள் அரசியலமைப்பிலேயே உள்ளன. அத்தோடு சுற்று வழிகளிலும் நீதி மன்றத்தைப் பாதிக்கலாம்.

அரசியலமைப்பின் 52 (3), 53 ஆகிய பகுதிகள் மிகவும் கண்டனத்திற் குரியன. பிரிவு 52 (3), 62 ஆம் வயதே உயர்நீதி மன்றத்து நீதிபதிகளின் ஓய்வுக் காலமெனவும், ஆனால் தேசாதிபதி ஒரு நீதிபதியைத்தொடர்ந்து மேலும் பன்னிரண்டு மாதங்களுக்குப் பணியாற்ற விடலாம் என்றும் கூறுகிறது. இத்தகைய பதவிக் கால நீட்டல், பிரிவு 4 (2) இன்படி பிரதமமந்திரியின் ஆலோசனையின் பேரில்தான் கொடுக்கப்படும். எனவே, தமது சுயமான கருத்துக்களால் அரசாங்கத்தைக் கஷ்டமான நிலையில் வைத்த ஒரு நீதிபதி இத்தகைய பதவிக்காலநீடிப்பைப் பெற முடியாது. அவரது பதவிக்காலம் நீட்டப்படுதல், அவரது தீர்ப்புக்கள் எவ்வளவு தூரம் அரசாங்கத்திற்குச் சார்பானவைகளாய் இருந்தன என்பதைப் பொறுத்திருக்கும். அவருக்கு ஓராண்டுப் பதவிக்கால நீட்டம் முக்கியமானதாக இருக்கலாம். அவர் தமது 62 ஆம் வயதில் ஆறு வருடகாலச் சேவையே செய்தவராய் இருந்தால் மேலதிகமான இவ்வோராண்டுச் சேவை அவரை உபகாரச் சம்பளம் பெறும் தகுதியினராக்கும். இந்த மேலதிகமான ஓராண்டுப் பதவி அவருக்குப் பிரதம நீதிபதியாகப் பதவியுயரும் வாய்ப்பையுமளிக்கலாம். இத்தகைய வாய்ப்புகள் உள்ளபோது ஒரு நீதிபதி சில தருணங்களில் தமது கடமையில் தவறுவது மனிதத் தன்மையேயாகும். ஆகவே, பதவிக்காலம் நீட்டக்கூடிய தருணங்களளிக்காது, ஓய்வு பெறும் வயதினை நிட்சயமாக வரையறுப்பது உயர்நீதி மன்றத்தின் நலத்துக்கு முக்கியமானதாகும்.



இதே போன்று 53ஆம் பிரிவும் நீதிபதிகளின் சுதந்திரத்திற்குப் பங்கமானதாகும். பிரதம நீதிபதி, உயர்நீதி மன்றத்து நீதிபதியொருவர், உயர்நீதிமன்றத்திற் தற்போது செயலாற்றும் அல்லது அதிலிருந்து ஓய்வுபெற்ற நீதிபதியொருவர், ஆகிய மூவர்கொண்ட நீதிச் செயலாணைக் குழு வொன்றை நிறுவுவதற்கு இப்பிரிவு வழி வகுக்கிறது. இதில், பிரதம நீதிபதி ஒழிந்த பிற அங்கத்தினரிருவரும் தேசாதிபதியால் நியமிக்கப்படுவர். அதாவது உண்மையில் பிரதம மந்திரியினாலேயே நியமிக்கப்படுவர். இவ்வாணைக் குழுவில் இடம்பெறுவது நற்செல்வாக்குடைத்தாகையால், நீதிபதிகள் பலரும் இதிலிடம் பெறப் போட்டியிடுவர். அரசாங்கத்திற்குப் பாதகமான தீர்ப்புக்களைக் கூறுபவர்கள் இப்பதவிக்கு நியமனம் பெற மாட்டார்கள். இதனைவிடப் பிரதம நீதிபதியையும், அவருக்கு அடுத்துச் சேவையில் முதிர்ந்த நீதிபதிகள் இருவரையும் இக்குழுவிற்கு நியமித்திருப்பின் சிறப்பாக இருந்திருக்கும். தலையீட்டிற்கு வழிவிடும் இடம் மேலுமொன்றுள்ளது. இப்பிரிவின் மூன்றாம் உட்பிரிவின்படி, இக்குழுவினர், தமது முழுப்பதவிக் காலமாகிய ஐந்து வருடங்களும் முடிந்தபின், திரும்பவும் நியமிக்கப்படலாம். இதுவும் உயர்நீதி மன்றத்தின் நன்மைக்கு ஏதுவானதல்ல. ஏனெனில், நீதிபதிகள், தாம் மீண்டும் பதவி நியமனம் பெறுவதற்காக, அரசாங்கத்திற்கு முரணான தீர்ப்புகளளிக்காது விடலாம் என்று வாதிக்க இடமுண்டு. இதன்காரணமாக உயர்நீதி மன்றத்தில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை பாதிக்கப்படலாம். நீதி செலுத்தப்பட்டால் மட்டும் போதாது. நீதியே செலுத்தப்படுகிறதென்று யாவரும் உணரவேண்டும்.

தேசாதிபதியின் பதவியை நிர்மாணிக்கும் உரிமையோலையின் ஏழாவது சரத்தின்படி, உகந்த வேறொருவர் இல்லாதபட்சத்தில், பிரதம நீதிபதியே தேசாதிபதிக்குப் பதிலாகக் கடமையாற்ற வேண்டும். இதுவும் நீதித்துறையின் சுதந்திரத்திற்கு உகந்ததல்ல. ஏனெனில், ஒரு பிரதம மந்திரி, தேசாதிபதி ஓய்வெடுத்த போது, அல்லது விடுதலையிலிருக்கும் போது, தமது அரசாங்கத்திற்கு முரணான செயலிலீடுபட்ட ஒரு பிரதம நீதிபதியைப் பழிவாங்கும் நோக்குடன், அவரை அப்பதவிக்கு நியமிக்காது பிறரொருவரை நியமிக்கலாம். எனவே, அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதால்- அதாவது எதிர்க்கவேண்டிய இடத்தும் எதிர்க்காது செயலாற்றுவதால்-தேசாதிபதி இல்லாத தருணத்திற் தாம் பதில் தேசாதிபதியாக நியமிக்கப்படலாம் என்ற எண்ணத்தினால், பிரதம நீதிபதி அரசாங்கத்தை ஆதரிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் உயர்நீதி மன்றத்து நீதிபதிகளைக்கூட நேரற்ற வழிகளில் தம் சார்பினராக்கிக் கொள்ள முடியும். நீதிபதிகளை, ஆணைக்குழு அங்கத்தவராக அல்லது தலைவராக நியமிக்கும் வழமையும், ஓய்வுக் காலத்தே அவர்கட்குப் பிற உயர்ந்த பதவிகளளிக்கும் முறையும், உயர்நீதி மன்றத்தின் சுதந்திரத்திற்கு உகந்தனவல்ல. இத்தகைய பதவிகளுக்கு நியமனம் செய்யும் பொழுது, அரசாங்கத்திற்குச் சார்பற்ற மனப்பான்மை கொண்ட நீதிபதிகள் முற்றாக உதாசினம் செய்யப்படலாம். எனவே, உயர்நீதி மன்றத்து நீதிபதிகளினுள்ளத்தில், அரசாங்கத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாக இருக்கவேண்டுமென்ற மனப்பான்மை, தெரிந்தோ தெரியாமலோ, வளர்ந்து வரும். இத்தகைய நியமனங்களின் போது, உயர்நீதி மன்றத்து நீதிபதிகளுக்குப் பதிலாக, மாவட்ட மன்றத்து நீதிபதிகளையோ, உத்தியோக பூர்வமற்ற களத்தைச் சார்ந்த புகழ்பெற்ற நியாயதுரந்தரர்களையோ, அல்லது மதிப்புள்ள சட்ட ஆசிரியர்களையோ தேர்ந்தெடுக்கலாம். நீதிக்களம் எத்தகைய அரசியற் தலையீடுகளுக்கும் புறம்பாக வலிமையுடனிருக்கவேண்டும். அத்தோடு, பல சமூகப்பிரிவினரை அடக்கியுள்ளதோரு சமுதாயத்திலே, அதன் உயர்நீதி மன்றம், அங்கு பெருமளவில் அரசியற் செல்வாக்குப் பெற்றவொரு சமூகப் பிரிவினர்பாற் சார்புடையதாகத் தோன்றாமல் இருப்பது மிகவும் அவசியமாகும். இத்தகையதொரு சார்பு உள்ளதென்ற மனப்பான்மை சிறுபான்மையோரிடத்தில் எழுமானால் அவர்கள் தங்களது சச்சரவுகளைச் சட்டமற்ற முறைகளில் தீர்க்க முற்படுவர். ஆகையால், நீதிக்களச் சுதந்திரம் நடைமுறையிற் பாதிக்கப்பட்டதெனக் கூறுவதற்கு எடுத்துக்காட்டுக்களற்ற போதிலும், அரசியலமைப்பில் இதுசம்பந்தமாகக் காணப்படும் தவறுகளைத் திருத்துவது மிகவும் அவசியமாகும். ஏனெனில், இக்கட்டான தருணங்களில், ஒரு கவனமற்ற அரசாங்கம் இத்தகைய சரத்துக்களைப் பயன்படுத்தித் தன்னிட்டப்படி செயலாற்ற முன்வரலாம்.

## நிருவாகத் துறையில் சிறுபான்மையுரிமைக் காப்பீடுகள்

சிறுபான்மைச் சமூகத்தினர் மந்திரத்தில் சேர்க்கப்பட வேண்டுமென நிலைபரச் சட்டங்களேதும் கூறவில்லை. சிறுபான்மையோர் பற்றிய விடயங்கள் நிர்ணயிக்கப்படும் பொழுது, அவர்களது கருத்துக்களையும் எடுத்துரைக்கும் பொருட்டுச், சிறு பான்மை யங்கத்தவரொருவர் மந்திரத்தில் இருத்தல் அவசியமாகும். நிருவாகக் குழுமுறையின் கீழ், அரசியற் கொள்கையுருவாக்கத்தில் சிறுபான்மையோரும் பங்குபற்றச் சந்தர்ப்பமிருந்தது. ஆனால் மந்திர



ஆட்சிமுறையின் கீழ், இது, பிரதம மந்திரியின் மனப்போக்கிலும், அவரது கருத்தை ஆதரித்து அவரோடு ஒத்துழைக்கக் கூடிய சிறுபான்மை அங்கத்தவர் உள்ளார்களா என்பதிலும் தங்கியிருக்கிறது. அமைச்சரவையில் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மந்திரிகள் சிலரும் இருக்கவேண்டுமென நிலைபரச்சட்டத்தினால் நியமிக்கும்படி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சோல்பரிக் குழுவினரைக் கேட்டுக் கொண்டது. இங்ஙனம் செய்தால், தன் கொள்கைகளையாதரிக்காதவர்களையும், தன் அமைச்சரவையிற் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிற்பந்தம் பிரதம மந்திரிக்கு ஏற்படலாம் என வாதாடிய சோல்பரிக்குழுவினர் இக்கோரிக்கையை நிராகரித்தனர். எனினும் ''மேற்கு நாடுகளைப் போன்று கட்சிமுறைகள் இலங்கையிலும் தோன்றும்வரை, பெரும்பான்மைப்பிரிவின் தலைவர், தனது அரசாங்கத்தில் அமைச்சுப்பதவிகள் சிலவற்றைச் சிறுபான்மைப் பிரதிநிதிகளுக்கும் கொடுப்பது நலமாகும்'' 9 என்று கூறினர். ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரை, இதுவரை அமைக்கப்பட்ட அமைச்சரவைகள் இக்கோரிக்கைக்கு மேலெழுந்தவாரியாகவே கவனம் செலுத்தியுள்ளனர் என்றே கூறல்வேண்டும். தமிழர்கள் அதிகாரத்திலிருக்கும் பிரிவினரோடு ஒத்துழைக்க மறுத்தமையே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

மிக மதிப்பிற்குரிய டி. எஸ். சேனநாயகா அவர்களது மந்திரத்தில், ஆரம்பத்தில், திருவாளர்கள் சி. சுந்தரலிங்கம், சி. சிற்றம்பலம் ஆகிய இரு தமிழ் மந்திரிகள் இருந்தார்களாயினும், அவர்கள் தமிழ் மக்களது உள்ளக் கிடக்கையின் உண்மையான பிரதிநிதிகள் என்று கொள்ள முடியாது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மந்திரத்திற் சேர்ந்ததோடு, வடமாகாணத்தில் நற்சிலாக்கிய முடைய ஒருவர் மந்திரிசபையிலிருந்தார் எனலாம். இஸ்லாமியப் பிரதிநிதியாகிய திருவாளர் டி. பி. ஜயா, இம்மந்திரத்திலிருந்த மற்றுமொரு சிறுபான்மையின அங்கத்தவராம்.

திரு. டட்லி சேனநாயகாவின் மந்திரத்தில் இஸ்லாமியர் பிரதிநிதியாக டாக்டர் எம். சி. எம். கலீலும், தமிழர் பிரதிநிதிகளாகத் திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலமும், வி. நல்லையாவும் இருந்தனர். திரு. நல்லையா கீழ்மாகாணத்துத் தமிழரின் பிரதிநிதியாகத் திகழ்ந்தார். அவர் 1952ம் ஆண்டு ஆடி 11ம் திகதி ராஜினாமாச் செய்தபின் அவரது இடத்திற்கு வந்த திருவாளர் எஸ். நடேசனைத் தமிழர் மனப்போக்கின் பிரதிநிதியாகக் கருதமுடியாது. ஏனெனில், 1952 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் வடமாகாணத்

---

9 Ibid Paragraph 261

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் ஐக்கிய தேசியக் கட்சியினரால் தேர்தலுக்கு நிறுத்தப்பட்டு, வெற்றியுமீட்டிய ஒரே அபேட்சகர் தாமே என்ற ஒன்றே அவருக்கு அப்பதவியின் பால் உரிமையளித்தது.

மேன்மைதங்கிய சேர். ஜோன் கொத்தலாவலையின் மந்திரத்தில் இஸ்லாமியப் பிரதிநிதியாக டாக்டர் கலீலே தொடர்ந்திருந்தார். தமிழர் பிரதிநிதியாகத் திரு. நடேசன் தொடர்ந்திருந்தார். ஆனால் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நீக்கப்பட்டு, அவருக்குப் பதிலாக சேர். கந்தையா வைத்தியநாதன் நியமிக்கப்பட்டார். இவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியல்ல.

திரு. பண்டாரநாயக்காவின் மந்திரத்தில், அவரது மொழிக் கொள்கையைத் தமிழர் எல்லோரும் ஒருமுகமாய் எதிர்த்ததன் காரணமாகத், தமிழர் பிரதிநிதி யொருவரும் இடம்பெறவில்லை. மந்திரிப் பதவிவகிக்கும் ஒரேயொரு சிறுபான்மைப் பிரதிநிதியாகிய * திரு. சி. ஏ. எஸ். மரிக்கார், எந்தவொரு செல்வாக்குடைய இஸ்லாமியக் குழுவினதோ அல்லது இஸ்லாமியச் சமூகத்தினதோ பிரதிநிதியாகக் கருதப்படுவதில்லை.

ஆகவே, சிறுபான்மையினராகிய தமிழரின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு இதுவரை எதுவித உண்மையான முயற்சியும் எடுக்கப்படவில்லை என்பதைக் காணலாம். இன வேற்றுமைகள் நீக்கப்பட வேண்டிய நிலைமையிருக்கும்வரை சிறுபான்மைப் பிரிவினரின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பது கடினமாகும்.

## செயற்துறையில் சிறுபான்மையுரிமைக் காப்பீடுகள்

செயற்துறைக்கு நியமனங்கள் செய்யும் விடயத்திலேயே, பெரும்பான்மைச் சமூகத்தினருக்கும், தமிழருக்கும் இடையில் வெறுப்பும், கொந்தளிப்பும் ஏற்படுகின்றது. அரசியற் பொறுப்பைப் பெரும்பான்மையோர் வசம் ஒப்படைத்த பின்னர், இப்பதவிகள் நியமனத்தில் தமிழரைப் பொறுத்தமட்டில் பெரும்பான்மையோர் ஓரமாக நடப்பர் என்ற பயம் பிறந்தது. எனவேதான் சமநிலைப் பிரதிநிதித்துவமும், சிறுபான்மைப் பிரதிநிதிகளையும் கொண்ட மந்திரிகள் சபையும் கோரப்பட்டன.

---

* திருவாளர் தஹநாயக வின் மந்திரத்தில் திருவாளர் முஸ்தபாவும் மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.—(ஆசிரியர் குறிப்பு)



இத்தகைய பயங்களை நிவர்த்திக்கும் முகமாக, சோல்பரிக் குழுவினரும், அமைச்சரவையினரும், அரசாங்க சேவையில், வருடம் ரூபா 3,600 க்கு மேல் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமனம் செய்யும் பொறுப்பை, மூன்று அங்கத்தினரைக் கொண்டதோர் அரசாங்கச் சேவை ஆணைக்குழுவிற்கு அளித்தனர். அத்தோடு, அரசாங்க சேவையினரின் பதவியுயர்வு, இடமாற்றம், பதவிநீக்கம், ஒழுங்குமுறை முதலியன இக்குழுவினரின் பொறுப்பிலேயே விடப்படவேண்டுமெனச் சோல்பரிக் குழுவினர் கருதினர். ஆனாலும் சட்டத்துறை நாயகம், கணக்குப் பரிசோதனைத் துறை நாயகம், நிரந்தரக் காரியதரிசிகள் ஆகியோர்களின் நியமனத்தையும், இடமாற்றத்தையும் தேசாதிபதியின் பொறுப்பில் விட்டனர். இவ்வாணைக்குழுவின் ஓரமற்ற தன்மையைக் காப்பாற்றும் நோக்குடன், சோல்பரிக் குழுவினரும், அமைச்சரவையினரும், தேசாதிபதியே தன் இட்டப்படி இக்குழுவின் அங்கத்தினர்களையும், தலைவரையும் நியமிக்க வேண்டுமென விதித்தனர். அமைச்சரவையினர், இக்குழுவினரின் பதவிக் காலத்தை ஐந்து வருடங்களென வரையறுத்து, இக்கால முடிவில் மறுமுறையும் நியமிக்கப்படலாமென்றும் கூறினர். இப்படியாகத் திரும்பவும் நியமனம்பெறும் ஆசை இக்குழுவினது சுதந்திரத்தைப் பாதிக்கலாம். ஆகவேதான் சோல்பரிக் குழுவினர் பதவிக்கால வரையறைபற்றியோ, மறுமுறை நியமனம் பற்றியோ யாதும் கூறாது விட்டனர் போலும்.

எமது அரசியலமைப்பின்படி, அரசாங்க சேவை ஆணைக்குழுவினர், பிரதம மந்திரியின் ஆலோசனைக் கேற்ப, ஐந்து வருட பதவிக் காலத்துக்குத் தேசாதிபதியினால் நியமிக்கப்படுவர். அவர்கள் மீண்டும் நியமிக்கப்படலாம். இந்த மறு நியமன முறை, இக்குழுவின் ஓரமற்ற தன்மையையும்,சுதந்திரத்தையும் பாதிக்கும்.தமிழ்ச் சமூகத்தினரின் பயத்தைத் தணிப்பதற்காக,அச்சமூகத்தின் அங்கத்தவரொருவரையும் இக்குழுவிற்கு நியமித்தல், வழமையாக உள்ளது. ஆனால் இதனால் மட்டும் இக்குழுவின் ஓரமற்றதன்மை காப்பாற்றப்பட்டு விடும் என்று கூற முடியாது. அரசியற் தலைவர்களும், நாட்டின் மந்திரிகளும், சிறுபான்மைச் சமூக அரசாங்க சேவையோருக்குத் தீமையான முறையில் மட்டுமல்லாமல், தாங்கள் விரும்பாத பெரும்பான்மைச் சமூக அரசாங்க சேவையோருக்கும் பாதகமான முறையில் தலையிட்டுள்ளதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள.

## முடிவுரை

எனவே, இக்கட்டுறையிற் கூறப்பட்டதிலிருந்து, எவ்விதச் சட்ட மூலமான காப்பீடுகளும், தாம் நினைத்ததைச் சாதிக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிந்துவிட்டவோர் அரசாங்கத்திற்கோ, அல்லது பெரும்பான்மைப் பிரிவினருக்கோ, முட்டுக்கட்டையாகவிராது, என்பது தெளியும். அதிகார வெறிபிடித்த ஒரு குழுவினருக்கெதிராக இவை நிரந்தரத் தடைகளாக அமையமாட்டா. ஆனுல் தற்காலிகத் தடைகளாகிய இவை, பயனற்றவையெனக் கொள்ள முடியாது. இது அளிக்கும் அவ்விடைப்பட்ட காலம், தாங்கள் நடந்து கொள்ளும் விதம் மதியானதுதானு என்பதை மறுமுறையும் சிந்தித்துப் பார்க்கும் தருணத்தைப் பெரும்பான்மையோருக்கு அளிக்கின்றது. சகல பிரிவினரதும் நல்லெண்ணத்திலும், விட்டுக் கொடுக்கும் பண்பிலும் தான் யாவும் தங்கியுள்ளன. இதில் பெரும் பொறுப்புப் பெரும்பான்மைப் பிரிவினர் பால் தங்கியுள்ளது. ஏனெனில் அவர்கள் கையிலளிக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை விரும்பத்தக்க வகைகளிற் பயன்படுத்துவதால் தான் சிறுபான்மையோரின் நம்பிக்கையைப் பெறலாம். இந்தப் பொறுப் புணர்ச்சியைப் பெரும்பான்மையோர் காட்டுவார்கள் என்ற சோல்பரிக் குழுவினரது நம்பிக்கையை அவர்களது அறிக்கையின் 178 ஆம் பகுதி வெளியிடுகிறது.

சோல்பரிக் குழுவினரின் நம்பிக்கைகள் வீண்போனமையைச் சென்ற ஆண்டின் (1958) நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டுவன. [10] ஆனுல் அனுபவத்தினுலேயே அறிவு ஏற்படும். பெரும்பான்மைச் சமூகத்தினரின் முன்னேற்றமும், வளமும், ஒற்றுமையாலேயே ஏற்படும்; சிறுபான்மையோர் விருப்புகளை அழுத்தித் தகர்ப்பதால் ஒற்றுமை ஏற்படாது, என்ற உண்மைகளைக் கடந்தகால நிகழ்ச்சிகள் புகட்டுவன. இங்ஙனம் கற்ற பாடங்கள் பயனற்றனவாய்ப் போகாதெென எதிர்பார்க்கப் படுகின்றது.

10 குறிப்பு: அரசியலமைப்பு மாற்றப் பிரேரணையின்போது திரு. பொன்னம்பலம் ஆற்றிய பேச்சு—''சோல்பரி, இத்தீவைவிட்டு வெளியேறுமுன், தனது அரசியலமைப்புச் சிறுபான்மையோரைக் காட்டிக் கொடுத்து விட்டதற்காக மிக வருந்தினுர் என்பதை நான் இச்சபையின் மேன்மை தங்கிய அங்கத்தவர்களுக்குக் கூறுவேன். சோல்பரி உயிருடனிருக்கிருர். நான் கூறியதை வாசிக்கும்வரை உயிரோடிருப்பாரென்றே நம்புகிறேன்.'' Vide **Official Report. Parl. Debates, House of Rep. Vol 30, Columns 1439, 1440.**



## அரசியற் கலைச் சொற்கள்

காப்பீடுகள் — Safeguards
அமைச்சரவையின் வரைவுத்திட்டம் — The Draft Scheme of the Board of Ministers
சட்டமியற்றுந்துறை — Legislative
நீதித்துறை — Judiciary
நிருவாகத்துறை — Executive
செயலாற்றுந்துறை — Administrative
முறி — Bill
தெரிவுத் தொகுதி — Electoral District
எல்லை நிர்ணயக் குழுவினர் — Delimitation Commission
தேசமன்றம் — State Council
பல பிரதிநிதிகள் அனுப்பும் தொகுதி—Multimember Constituency
பிரதிநிதிகள் சபை — House of Representatives
இன முறைப் பிரதிநிதித்துவம் — Communal Representation
கழகத்துப்பணி — Order in Council
உரிமைகள் முறி — Bill of Rights
நாட்டுக் காரியதரிசி — Secretary of State
சுதந்திரக் கட்டளை — Independence Order
உயர்நீதி மன்றத்து நீதிபதிகள்—Puisne Judges of Supreme Court
பருவநீதிமன்றத்து ஆணையாளர்கள் — Commissioners of Assize
நீதிச் செயலாணைக் குழு — Judicial Service Commission
உரிமையோலை — Letters Patent
மாவட்டமன்ற நீதிபதிகள் — Judges of District Courts
உத்தியோக பூர்வமற்ற களத்து நியாய துரந்தரர் — Lawyers from the Unofficial Bar
மந்திரம் — Cabinet
நிலைபரச் சட்டம் — Statute
நிருவாகக் குழுமுறை — Executive Commi tee System
அரசாங்கச் சேவை ஆணைக் குழு — Public Service Commission
சட்டத்துறை நாயகம் — Attorney General
கணக்குப் பரிசோதனைத் துறை நாயகம் — Auditor General

VERY ECONOMICAL
BUT STILL
A GRAND CATERING
LYON CAFE
KANDY.
7073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# * “மரண தண்டனை”

பேராசிரியர் த நடராஜா

மரண தண்டனை என்னும் பொருள்பற்றி மக்கள் பலர் கடும் உணர்ச்சிக்கு இடங் கொடுக்கவும், கொண்டதை விடாது சாதிக்கும் மனப்பான்மையோடு வாதிக்கவும் தலைப்படுகின்றனர். இதுபற்றிப் பொதுவாக மக்கள் கருதுவதைக் காட்டிலும் மிக்க சிக்கலான விடயமாகவும் இஃது உளது. ஏனெனில், ஒழுக்கமுஞ் சட்டமும், உளநோயியலும் சமூகவியலும், குற்றவியலுந் தண்டவியலும் ஆகிய துறைகளுக்குரிய பிரச்சனைகளெல்லாம் இதனோடு பின்னிப் பிணைந்திருக்கின்றமையால் என்க. மரணதண்டனை ஒழிக்கப்படல் வேண்டுமா என்னும் விவாதத்தில் ஈடுபடுபவர் பெரும்பாலும் அதனோடு பிணைந்துள்ள ஆய்வுக்குரிய விடயங்கள் பலவற்றைப்பற்றி அறியாதவராயிருக்கின்றனர் என்பது அனுபவத்தால் அறியக்கிடக்கின்றது. ஆனால் இவ் விவாதத்தில் கடாவப்படும் வினக்களுக்குரிய விடைகளை அன்னார் நனிமிகச் சுருக்கி, எளிமைப்படுத்தி, விடுகின்றனர். இவ்விகலாட்டு முழுவதிலும் இயைபுபட்டுள்ள உண்மையான ஆய்வுக்குரிய விடயங்களை இயன்றவரை திட்டவட்டமாக வரையறுத்து விளக்குவதும், பின்னர், மரணதண்டனை இருத்தல் வேண்டுமென்னும் சாதிப்புவாதிகட்கும், ஒழிதல் வேண்டுமென்னும் ஒழிப்பு வாதிகட்குமிடையே முக்கிய ஆய்வுக்குரிய விடயமாகவுள்ள ''மரணதண்டனையாலுண்டாகும் தடுப்பு விளைவு'' என்பதனை விரிவாக ஆராய்வதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மரணதண்டனைக்குச் சார்பாகவும் எதிராகவும் கூறப்படும் முக்கியமான நியாயங்களைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

---

* "The Death Penalty"
By Prof. T. Nadarajah M.A. (Cantab.),
Barrister at Law and Advocate
Professor and Head of the Dept of Law
University of Ceylon.
He was a member of the Death Penalty Commission



### உயிருக்கு உயிர்

| சாதிப்புவாதம் | ஒழிப்புவாதம் |
| --- | --- |
| குற்றத்துக்குச் சமமான தண்டனையை விதிக்க வேண்டுமென மனிதனின் இயற்கையானநீதியுணர்வு அறிவுறுத்துகின்றது. மனித உயிரின் புனிதத் தன்மையை வேண்டுமென்றே அழித்த ஒருவனுக்கு மரணதண்டனை ஏற்ற தண்டனையாகும். | சட்டத்தின் பெயரால் வேண்டுமென்றே ஓர் உயிரை வதைத்தல், அரசின் ஒழுக்க முறைமைக்கு மாறானதாகும். மரணதண்டனையே உயிரின் புனிதத்தன்மையை மறுப்பதொன்றாகும். இப்புனிதத் தன்மையின் முக்கியத்துவத்தை அரசாங்கம் ஆதரித்தல்வேண்டும். இம்முக்கியத்துவத்தை அவமதித்தல், பொதுமக்கள் உள்ளத்தில் உயிர்க்குரிய மதிப்பைக் குறைப்பதாகும். |

### நெடுந்தவணை விளைவு

| சாதிப்புவாதம் | ஒழிப்புவாதம் |
| --- | --- |
| கொலை செய்தல் எத்துணைப் பாரதூரமான செய்கையென்பதை மரணதண்டனை வலியுறுத்துவதால், இக்குற்றத்தைச் சமுதாயம் வெறுப்பதற்கும் அது காரணமாயமைகின்றது. இதனாற் காலக்கிரமத்தில் ஒரு சமுதாயத்தின் கொலைக் குற்றங்கள் குறைந்துவிடும். | அரசானது மனிதவுயிரின் புனிதத் தன்மையை வலியுறுத்துமுகமாக மரணதண்டனையை ஒழித்தால், அது அந்நாட்டு மக்களின் உள்ளத்திலும் அத்தகைய நோக்கத்தைப் பதியச் செய்வதாகும். இதனாற் காலக் கிரமத்தில் மக்களிடையே நிகழும் கொலைக் குற்றங்கள் குறைந்துவிடும். |

### தடுப்பு முறை

| சாதிப்புவாதம் | ஒழிப்புவாதம் |
| --- | --- |
| மரணதண்டனை ஓர் ஒப்பற்ற தடுப்புமுறையாகும். நெடுங்காலச் சிறையிலும் அல்லது வேறெவ்விதத் தண்டனையிலும் பார்க்க இம்முறை கூடிய பயன்விளைவையுடையது. இது மனிதன் தன் உயிரை எல்லாவற்றினும் பாதுகாக்க விரும்புபவன் என்னும்உண்மையை அடிப்படையாகக்கொண்ட வெளிப்படை உண்மையாகும். | மரணதண்டனை பயன்விளைப்பதில் ஒப்பற்ற ஒரு தடுப்புமுறையன்று. கொலை செய்யும் சுபாவமுள்ள ஒருவன் கொலைத் தண்டனையாகிய தூக்கிலிடல் நெடுங்காலச் சிறைவாசம் ஆகியவற்றின் வேறுபாட்டை ஆராய்வான் எனக் கொள்ளுதல் சரியாகாது. இவ்விரு சட்டமுறைத் தண்டனைகளின் வேறுபாடானது, கோபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேசத்தினால் நிகழும் கொலைகளையோ, மூளைக்கோளாற்றினால் ஏற்படும் கொலைகளையோ, அன்றித் திட்டமிட்டு நிகழ்த்தும் கொலைகளையோ (திட்டமிட்டுக் கொலை செய்பவன் தான் கண்டுபிடிக்கப் படுதலினின்றும், அதனாலேற்படும் விளைவுகளினின்றும் தப்பிவிடலாமென எதிர்பார்ப்பான்) தவிர்க்குமென நம்பலாகாது.

குற்றங்களைக் கண்டுபிடித்தல் குற்றவாளியைக் கைதுசெய்தல், குற்றத்தீர்ப்பளித்தல் ஆகியவற்றில் ஏற்படும் இடர்ப்பாடுகளினாலும்; தீர்ப்பளித்தபின்னர் மன்னிப்பளிக்கும் அதிகாரம் பிரயோகிக்கப்படுதலினாலும், மரணதண்டனை அடிக்கடி விதிக்கப்படுவதில்லை. இதுகாரணமாக மரணதண்டனையின் தடுப்புமுறை ஆற்றல் குன்றுகிறது.

## நீதிபரிபாலனம்

(i) ஒவ்வொரு கொலைக்குற்றமும் மூன்று வெவ்வேறான நீதிமன்றங்களில் விளங்கப் படுவதனாலும், ஐயத்துக் கிடமின்றிக் கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட வேண்டியிருந்தாலும், தீர்ப்பளித்தபின்னர் மன்னிப்பளிப்பது பற்றிக் கவனமாய் ஆராயப்படுவதாலும் குற்றமற்ற ஒருவன் தூக்கிலிடப்படலாம் என்னும் ஐயப்பாட்டிற்கு இடமில்லை.

(i) இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய மாகாணம் ஐரோப்பா ஆகிய இடங்களிற் குற்றமற்றவர்மீது குற்றத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது எனப் பல சந்தர்ப்பங்களில் நிறுவப்பட்டுள்ளது. விசாரணைக் காலத்தில் இவர்களின் குற்றங்களைத் தீர்மானமாக நிரூபிப்பனவெனக் காணப்பட்ட சான்றுகளாலேயே இவர்களுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டது. இலங்கையில் மீண்டும் மரணதண்டனையைப் புகுத்தினால், குற்றமற்றவர் தூக்கிலி



டப்படும் இடர்நிலை இன்னும் மேலாக ஏற்படும். ஏனெனில் இலங்கையிற் கொலைக்குற்றவாளியெனத் தீர்ப்புக் கூறுவதற்கு ஏகமனதாக தீர்ப்பு அவசியமில்லையாதலினால் என்க.

(ii) குற்றஞ் சாட்டப்பட்டவன் மூளைக் கோளாறுடையவனாயிருக்கலாமென்றோ, அவ்வாறிருந்திருக்கலாமென்றோ ஐயுற்றகாலை, குற்றஞ் சாட்டப்பட்டவன் வழக்குரைப்பதற்குத் தகுதியுடையவனென்பது நிறுவப்பட வேண்டியிருப்பதாலும், விசாரணை நிகழும்போது மூளைக்கோளாற்றைக் காரணமாகக் காட்டி எதிர்வழக்காடக் கூடியதாயிருப்பதாலும், தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் ஒரு வைத்திய சபையினாற் பரிசோதனை நடத்தக் கூடியதாக விருப்பதனாலும் மூளைக்கோளாறுடைய கொலைகாரனொருவன் கொலைத் தண்டனைக்குள்ளாதல் அரிதாம்.

(ii) மூளைக்கோளாறு என்பதற்குச் சட்ட முறையான இக்கால வரைவிலக்கணம் மிகக் குறுகியதாகும். உளநோய்ச் சேவைகள் போதியவளவுக்கு இல்லாத நாடாகிய இலங்கையில், மரணதண்டனையை மீண்டும் புகுத்தினால் மூளைக் கோளாறுடைய கொலைகாரர் தூக்கிலிடப்படலாம்.

(iii) நீதிமன்றங்கள் பிறவழக்குக்களிற் போலவே கொலைக் குற்ற வழக்குக்களிலும் நேர்மையாகவும், பயனுறுதியுடைய வகையிலும் நீதிவழங்கியுள்ளன.

(iii) மரணதண்டனை இருப்பது, கொலைக்குற்ற விசாரணைகளை நீடிக்கவும், உள்ளக்கிளர்ச்சியூட்டுவனவாகவும்செய்யும்; மனித நடத்தையின் விரும்பத்தகாத இயல்புகளிற் பொதுமக்கள் கவனத்தை ஈர்த்துவிடும்; சாட்சியங்களை உணர்ச்சி வசப்படாது நடுநின்று ஆராய்வதைக் கடினமாக்கி, நீதிவழங்கலைத் திரிபுறவும் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்றுத்தண்டனை

(i) மரண தண்டனைக்குப் பதிலான திருத்திகரமான மாற்றுத் தண்டனை எதுவும் இல்லை.

(i) மரண தண்டனையை ஒழித்துள்ள நாடுகளில் நெடுங்காலச் சிறைத்தண்டனையும் மரணதண்டனைபோற் பயனுறுதியுள்ளதாய்க் காணப்பட்டுள்ளது. மரண தண்டனையோ, நிறைவேற்றப்பட்டபின் மாற்ற முடியாததொன்று; ஆயின் இது (நீண்டகாலச் சிறை) அவ்வாறு சீர்ப்படுத்தமுடியாத தண்டனையன்று.

(ii) தூக்கிலிடுவதிலும் நீண்டகாலத் தண்டனை மிகக் கொடியதாகவும் அமையலாம்.

(ii) ஒருவனின் ஆளுமையை அடியோடு ஒழிக்கும் மரணத்துக்கு ஒப்பாகத் தனிப்பட்டவர் பெறும் தண்டனை வேறு எதுவுமில்லை.

(iii) சிறையிலிருந்து விடுதலை பெற்ற கொலைகாரன் மீண்டுங் கொலை செய்யலாம்.

(iii) கொலைக்குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவன், மீண்டும் அக்குற்றத்தைச் செய்யும் இடர்நிலை அதிகமாக ஏற்படுவதில்லையென அனுபவமும் புள்ளிவிபரமும் நாட்டுகின்றன. நிச்சயமாக, இத்தகைய குற்றவாளியானவொருவன், ஆயுதந்தாங்கிக் கொள்ளையடித்தல், கத்தியாற் குத்துதல், படுகாயப்படுத்தல் போன்ற வேறு வகையான பல குற்றங்களை இழைப்பவன் ஒருவன் கொலை செய்யக் கூடிய நிலையை எய்து மளவுக்கு ஒருபோதும் எய்தமாட்டான். பிற்கூறப்பட்ட குற்றங்களைச் செய்பவனுக்குக் கொலைத் தண்டனை யளிக்க வேண்டுமெனக் கூறுவார் யாருமிலர்.



## சிறைச்சாலைப் பரிபாலனம்

(i) கொலைகாரரை உயிருடன் சிறையில் வைத்திருத்தல் சிறைச்சாலைப் பரிபாலனத்தைப் பெரிதும் சிக்கலுறச் செய்யும்.

(i) கொலைகாரரைத்தூக்கிலிடல் சிறைச்சாலைப் பரிபாலனத்தின் நிலைநாட்டப்பட்ட நோக்கத்துக்கு மறுதலையாயமையும்; அந்நோக்கந்தான் யாதோவெனில், குற்றவாளிகளைச் சீர்திருத்தல் என்க. தண்டனை குறைக்கப்பெற்ற கொலைகாரர், மற்றைச் சிறையாளரிலும் பார்க்கக் கூடிய சிறைப்பாதுகாப்புப் பிரச்சினைகளை உண்டு பண்ணுவதில்லை. மரணதண்டனை ஒழிப்பை ஆதரிப்பவர்களிற் பலர் அனுபவம் வாய்ந்த சிறைச்சாலை அதிகாரிகளாவர்.

(ii) பொருளியல் காரணமாக ஓர் உயிரைவதைத்தல், சமய தத்துவங்களுக்கும் ஒழுக்கத்தத்துவங்களுக்கும் மாறுகும். பொருளியல் காரணமாகக் கூறும் நியாயவாதம், கொலைக்குற்றக் காரருக்கு மட்டுமின்றிச் சிறைச்சாலையிலுள்ள பிறருக்கும், திருத்தகங்களிலும், மூளைக்கோளாற்று வைத்தியசாலையிலும், வயோதிபர் இல்லங்களிலும், இவைபோன்ற பிற அரசாங்க நிலையங்களிலுமுள்ள அனைவருக்கும் ஏற்புடைத்தாகும்.

## இலங்கைக்குச் சிறப்பாயுள்ள சூழ்நிலை

(i) முன்னேற்ற மடைந்துள்ள நாடுகளில் மரணதண்டனையை ஒழித்தல் தீங்குடைத்தாகாது. ஆனால் இலங்கைச் சமூகநிலை வேறுபட்ட தாகையால், அந்நாட்டு அனுபவங்கள் இந்நாட்டுக்குப் பொருத்தமுடையனவாகா.

(i) மரணதண்டனை ஒழிக்கப்பட்டுள்ள, அல்லது நிறுத்தப்பட்டுள்ள பல நாடுகளில் எங்காவது இது காரணமாய்க் கொலை வீதம் அதிகரித்துள்ளதென நாட்டப்படவில்லை. இலங்கையை யொத்த சூழ்நிலையுள்ள நாடுகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உம், திருவாங்கூர் - கொச்சின், கோவை, நேபாளம்) மரண தண்டனை நிறுத்தப்பட்டோ, ஒழிக்கப்பட்டோ வுள்ளது.

(ii) இலங்கையில் நிகழும் கொலைக் குற்றங்களிற் பெரும்பாலானவை, வறியவர்களாலும் கல்வியறிவற்ற பிற்போக்கான வகுப்பினர்களாலுமே இழைக்கப்படுகின்றன. இவர்களைப் பொறுத்தவரையில், ஒரு தடுப்பு முறையாகச் சிறைப் பயத்திலும் பார்க்கத் தூக்குப் பயமே கூடிய பயன்றநவல்லது. ஏனெனிற், பல சந்தர்ப்பங்களிற், கொலையாளியின் சொந்த வீட்டு நிலைமையிலும் சிறைச் சாலை நிலைமைகள் மேலானவையா யிருக்கின்றமையால் என்க.

(ii) சமூகத்திலிருந்து நெடுங்காலமாக விலகியிருக்கும் அச்சமும், விசாரணை, குற்றத்தீர்ப்பு, சிறை ஆகியவற்ருேடு இணைந்துள்ள மானக்கேடும் பிறநாடுகளிற் போலவே இலங்கையிலும் தடுப்புமுறைகளாகப் பயன்படக் கூடியவையாகும்.

(iii) இலங்கையின் தற்காலம் போலப் பெருஞ் சமுதாய மாற்றங்கள் நிகழும் ஒரு பருவத்தில், குற்றவியற்சட்ட முறைமைகளில் ஒரு முக்கிய மாற்றத்தைக்கொண்டுவருதல் பொருத்தமுடைத்தாகாது.

(iii) எவ்வகையான சமூக மாற்றம் ஏற்படுவதாயினும், மரண தண்டனையை ஒழிப்பதால் அச்சமூகத்துக்குப் பாதகமான விளைவு எதுவும் ஏற்படமாட்டது. மரண தண்டனையை வேண்டிநிற்போருக்கு, மாற்றத்துக்கு ஏற்ற சமயம் எஞ்ஞான்றும் அணுகுவதில்லை. கொலைக்குற்றவீதம் அதிகரிப்பின், மாற்றம் 'இப்போது வேண்டாம்' என்பர். கொலைக் குற்றவீதம் குறைவுறுவதாயின் மாற்றத்துக்கு ஏற்றகாலம் இன்னும் வரவில்லை என்பர்.



## பொதுமக்கள் கருத்து

(i) மரண தண்டனை நிலைக்கவேண்டுமென்பதே இலங்கையிற் பொது மக்களின் கருத்தாகும். பொது மக்கள் கருத்தை மீறிச் செல்லல் சட்டத்துக்கு அபாயகரமானதாகும்.

(i) இப்பிரச்சினை பற்றிப்பொது மக்கள கருத்துப் பிளவுபட்டுள்ளதுமன்றி, அவர்கள் உண்மைகள் அனைத்தையும் நன்கு அறிந்திருக்கவுமில்லை. குற்றவியலறிஞர் தண்டவியலறிஞர், உளவியலறிஞர், சமூகவியலறிஞர் ஆகியோர் மரண தண்டனை பற்றிப் பிரசுரித்துள்ள கருத்துக்கள் யாவும் மரண தண்டனை ஒழிக்கப்படுவதையே ஆதரிக்கின்றன. மரண தண்டனை ஒழிப்புச் சமூக நலத்துக் குரியதாயின், பாராளுமன்றமே பொதுமக்கள் கருத்துக்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(ii) கொலைக்குற்றவாளிகள் பற்றி மிகப்பரந்த அனுபவமுள்ளவர்களான பல நீதிபதிகள், சட்டவறிஞர், பொலிசு உத்தியோகத்தர் ஆகியோர் மரண தண்டனை நிலைத்திருத்தலைத் தீவிரமாக ஆதரிக்கின்றனர்.

(ii) நீதிபதிகளும் சட்டவாதிகளும், பொலிசு உத்தியோகத்தரும் கொலையாளி குற்றஞ் செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்ட பின்னரோ, அன்றி அவன் குற்றஞ் செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுக் கைது செய்யப்படுங்காலோ மட்டுமே அவனைக் காண்கின்றனர்; அவ்வாறு அவர் காணும் நேரத்திற், கொலையாளி தனக்குக் கிடைக்கக் கூடிய தண்டனை பற்றிக் கொண்டிருக்கும் மனப்பான்மை, அவன் அக்குற்றத்தைச் செய்ய முன்னரோ, செய்யுங்காலோ கொண்டிருந்த மனப்பான்மையிலும் பார்க்கப் பெரிதும் வேறுபட்டதாயிருத்தல் கூடும்; ஆதலால் முற்கூறிய மூவகையாரும் இவ்விடயம் பற்றி ஓர் அபிப்பிராயம் கொள்வதற்குக் குறிப்பிடத்தக்க எந்தவோர் அனுகூலமான நிலையிலும் இருக்கின்றனரல்லர்.

## நிறுவனப் பொறுப்பு

குற்றமற்றவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் மாற்றங்களைப் புகுத்த முன்னர், மரண தண்டனையை ஒழிக்க வேண்டுமெனக் கூறுபவர் தங்கள் பக்கத்தை நிறுவுதல் வேண்டும்.

ஒரு மனிதனைத் தூக்கிலிடல் ஒரு முடிவான தன்மையையுடைய தண்டனையாகும். மரண தண்டனை அறத்தின்பாற் படுமென்றும் சமூகத்துக்குப்பயனுடையதாகுமென்றும் மெய்ப்பிக்கும் பொறுப்பு அதனை ஆதரிப்போரையேசாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதிப்புவாதிகளினதும் ஒழிப்பு வாதிகளினதும் வாதத்துக்-
குரிய பிரதான கருத்துக்களை எடுத்துக் காட்டினும்; இனி மரண
தண்டனையானது எவ்வாறு ஒரு தடுப்பு முறை யாகப் பயன்படும்
என்னும் பிரச்சனையை ஓரளவு விரிவாக ஆராய்வாம். மரண தண்
டனையைச் சாதிக்க வேண்டுமென்று வாதாடுவோரின் கருத்துகளை
ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளும்மோது, இப்பிரச்சினை மிகமுக்கி
யமானதொன்றாகக் கொள்ளப்படல் வேண்டும். மரண தண்டனை
யினுற் கொலைக்குற்ற வீதம் பாராட்டத்தக்க அளவுக்குக் குறைவுறு
கின்றதெனவும், இதற்கு ஒப்பான பயன் தரும் தண்டனை வேறு
எதுவும் இல்லையெனவும் எடுத்துக் காட்ட முடியுமாலுல், மரண
தண்டனையை உபயோசிக்கும் போது தற்செயலான சில குறைபாடு
கள் ஏற்பட்டபோதிலும், அதைச் சாதிக்க வேண்டும் என்னும்
வாதம் வலிமைபெறும்.

கொலை செய்பவனுக்குத் தண்டனையாக மரண தண்டனை விதித்
தல் ஓர் ஒப்பற்ற தடுப்பு முறையாயமையும் என்றும், நெடுங்காலச்
சிறையிலும் அல்லது அதற்குப் பதிலான பிற தண்டனையிலும் நனி
மிகப் பயன்படக் கூடியதென்றும் மரண தண்டனைச் சாதிப்பு வாதி
கள் இகலாடுவர். எத்தகைய அச்சத்திலும் மரணத்துக்குள்ள அச்
சமே மிகமுனைப்பான தெனவும். இதிலிருந்து தூக்கிடுதல் என்னும்
அச்சுறுத்தானது, வேறெவ்விதத் தண்டனைக்குரிய அச்சத்திலும்
மிகமேலான ஒரு தடுப்பு முறையாயிருத்தல் வேண்டுமென்பது
பெறப்படும் எனவும் அவர்கள் கூறுவர். மரண தண்டனை விதிக்கப்
பட்ட கைதிகள் ஏறக்குறைய எல்லாருமே மேன்முறையீடு செய்
வதையும், அல்லது எல்லாவகையான முயற்சிகளும் பயன்தராக்
காலை, தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று மன்றாடி நிற்பதை
யும் அவர் எடுத்துக் காட்டித் தம் முடிபை அரண் செய்ய முயல்வர்;
அன்றியும் தூக்குத் தண்டனையை எதிர்பார்த்திருக்கும் கொலைக்
குற்றவாளிகளோடு தொடர்புடையவரான சிறை அதிகாரிகள்,
குடும்பப் புரோகிதர்கள் போன்றவர்கள், அத்தகைய குற்றவாளி
கள் மரண தண்டனைக்கு நடுக்குறுகின்றனர் என எண்பித்திருப்பதை
யும் அவர் எடுத்துக் காட்டுவர்.

என்னும், இவ்விகலாட்டில் உள்ளீடான பல கொள்கைகள்
உண்டு; இவையெல்லாம் நுணுகி ஆராயுமிடத்து வலிவுள்ளனவாக
மாட்டா. முதலாவதாக, எவ்வகையான அச்சத்திலும் மரணத்
துக்குள்ள அச்சமே மிக முனைப்பானது எனல் உண்மையாயிருப்
பினும், நிச்சயமாக உடனடியாக நிகழ விருக்கும் மரணத்துக்குள்ள
அச்சத்துக்கும், மரணம் நிச்சயமாய் ஏற்படக் கூடியதொன்றன்று
எனக் கருதும்போது அம்மரணத்துக்கு ஏற்படும் அச்சத்துக்குமுள்ள
வேற்றுமை மிகப் பெரிதாகும். பிறவாறு கூறின், மன்னிப்புப்



பெறாத கொலைக் குற்றவாளி தனது இறுதிக் காலத்தில் அனுபவிக்கும் மரணபீதியைக் கொண்டு, அதே மரண பீதியே அவன் குற்றமிழைத்த காலையும் ஒரு தடுப்பு முறையாக அவன் உள்ளத்திற் செயற்பட்டிருக்குமெனக் கொள்ளுதல் ஒரு தவறான வாதமாகும்.

மேலும், நெடுங்காலத் தண்டனைக்குள்ள அச்சத்திலும் மரண தண்டனைக்குள்ள அச்சம் ஒரு மேலான தடுப்புமுறையாகுமென்னுங் கொள்கையானது, கொலையுறை நெஞ்சர் எப்போதும் ஒரு செயலாற்ற முன்னர் அதுபற்றிச் சிந்தித்தலையும், கொலை செய்வதற்கு முன்னர் அதனால் தாம் பெறக்கூடிய நன்மை தீமைகளை மதிப்பிட்டே அவ்வாறு செய்தலையும் மேற்கொள்ளும் பகுத்தறிவுடையோராவர் என்னும் மற்றொரு கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது: அதாவது, மனிதச்செயல் 'இன்பநாட்டத்தால்' ('hedonistic calculus') ஆளப்படுகின்றது என்னும் நம்பிக்கையை அடிப்படையாய்க் கொண்டுள்ளது. ஆனால் உளநோயியல், உளவியல் பற்றிய இக்கால அறிவு விருத்திகள் இதற்கு மாறாயுள்ளன. ஏனெனில், மனிதவினை மூலங்களாகிய பல வகைப்பட்ட மனவெழுச்சிச் சத்திகளும், இயல் பூக்கச் சத்திகளும் எத்தகைய வலிமைவாய்ந்தனவென்றும், எவ்வாறு ஆழப்பதிந்துள்ளனவென்றும் அண்மைக் கால ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தி யுள்ளனவாதலால் என்க.

உண்மையாகவே, இலங்கையில் அடிக்கடி கொலை நிகழ்வதற்குக் காரணமாயிருக்கும் உணர்ச்சிவசப்பட்ட திடீர்ச் செயல்களெல்லாம் கொலை நிகழ்வதற்கு முன்னர் ஏலவே ஆராய்ச்சிக்குட்பட்டிருக்குமெனக் கொள்ளுதல் பொருந்தாது. அவ்வாறிருக்க, நிகழக்கூடியனவும் தொலைவில்வரற்பாலனவு மாகிய தண்டனைகளைப்பற்றி அவர் ஆராய்ந்திருப்பர் என்பதைப் பேசவே வேண்டாம். மனிதர், உடனடியாகவும் வெளிப்படையாகவும் உண்டாகும் விளைவுகளினாலேயே வினையாற்ற உந்தப்படுகின்றனர்; ஆயின் நிச்சயமற்ற, தொலைவில் வரவிருக்கும் விளைவுகளை எண்ணிக் கலங்காது இருப்பதோடு, அவற்றைப் பற்றிய சிந்தனையை அவர் அடிப்படுத்தியும் விடுகின்றனர்; ஆதலால், தொலைவில் வரவிருக்கும் நிச்சயமற்ற தண்டனைக்கும், நெருங்கிவரும் நிச்சயமான தண்டனைக்குமுள்ள வேற்றுமை உணர்ச்சியால் அவர்கள் ஊக்கப்படுவார்கள் எனக் கொள்வது நிச்சயமாகவே பொருந்தாது.

உளவியல்பையொட்டி நோக்குமிடத்து நெடுங்காலமாகத் திட்டமிட்டு நடத்தப்படுங் கொலையானது ஒரு தனிவகையைச் சேர்ந்ததாகும். தான் திட்டமிட்டிருக்கும் நடத்தையினால் ஏற்படக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்துக்களைக் கொலையாளி கணக்கிடுவான் என்றும், அதனால் தனது உயிருக்கே ஆபத்து வருவதாயின் அவ்வாறு கொலை செய்வதைத் தவிர்ப்பான் என்றும் கொள்ளுதல் இவ்விடத்திலாவது நியாயமானதெனச் சிலர் நினைக்கலாம். ஆனால் இப்பொழுது நாம் ஆராய்வதற்கு எடுத்துள்ள நிலை யாதெனில், கொலையாளி ஒருவன் தனது செயலுக்குக் கிடைக்கும் தண்டனை எதுவாயினும், கொலை செய்வதற்குத் தன்னைத் தூண்டிய காரணங்கள் தான் அவ்வாறு செய்தது சரியென நிறுவுதற்குப் போதிய வலிமையுள்ளனவெனக் கருதும் அந்த நிலையாகும். அன்றியும், அதுவே கொலை செய்யத் தீர்மானித்துள்ள ஒருவன் தான் கவனமாகத் திட்டமிடுவதனாற் கண்டுபிடிக்கப்படாது தப்பமுடியுமெனக் கருதும் நிலையுமாம். ஆகவே, பிடிபடுவதனால் ஏற்படும் விளைவுகள் எவையாயினும், அவை பற்றிய எண்ணம் இச்சந்தர்ப்பத்தில் ஒரு தடுப்புமுறையாய்ச் செயற்படாது.

வரைவிலக்கணப்படி, மூளைக்கோளாறுள்ள கொலையாளியொருவன் தான் தூக்கிலிடப்படக்கூடுமென்னும் அச்சத்தால் தடுக்கப்படமாட்டான் என்பது பெறப்படும். ஏனெனில், சட்டமுறைப்படி கொலையாளியொருவன் மூளைக்கோளாறுள்ளவன் என்பதை நிறுவுதற்குச் சட்டமானது, அக்கொலையாளி தான் செய்யும் கொலையின் தன்மையை அறியமுடியாமையை, அல்லது அது பிழையென அறியமுடியாமையை, அல்லது தன் செயல்களைக் கட்டுப்படுத்த முடியாமையைப் பரீட்சையாக விதிக்கின்றமையாலென்க. மூளைக்கோளாற்றிலும் குறைந்த உளவியற் குழப்பங்களும், கொலைச்சுபாவமுள்ள ஒருவன் தனது நடத்தையால் ஈற்றில் தனக்கு ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராய்ந்து அவற்றாற் கட்டுப்படுத்தப்படும் ஆற்றலைப் பெரிதும் குறைத்து விடவல்லன. மதுவசப்பட்ட கொலையாளிக்கும் இது ஏற்புடைத்தாகும். சில வகையான சித்தப்பிறழ்ச்சியுடையவர்களைப் பொறுத்தவரை, மரணதண்டனையானது ஒரு தடுப்புமுறையாக அமைவதை விடக் கொலை செய்வதற்குத் தூண்டுதலாய் அமையுமென்பதையும் ஈண்டுக்கூறல் வேண்டும். பல சந்தர்ப்பங்களில் மக்களிற் சிலர் ஏதிலாரைக் கொன்றுள்ளனர் என்பது நிறுவப்பட்டுளது. அக்கொலைஞர்கள் கொலை விசாரணை, தூக்கிடல் என்பவை சம்பந்தமான நாடகம், விளம்பரம் ஆகியவற்றினாற் கவரப்பட்டோ, தமக்குச் செய்யத் துணிபில்லாத தற்கொலைக்கு ஒரு மறைமுகமான வழியாக அவர்கள் தூக்கிடலை விரும்பியோ அவ்வாறு கொலை செய்தாராகல் வேண்டும்.[1]

இவ்வாறாக, மரணதண்டனையானது ஓர் ஒப்பற்ற தடுப்புமுறையெனப் பொதுவாகக் கொள்வதற்குரிய நியாயங்கள் உளவியல்



முறைப்படி தவறானவையாகும். மரணதண்டனையானது ஒருபயன் தரக்கூடிய தடுப்புமுறையாயமைவதற்குப் பிறிதொரு குறைபாடுமுண்டு. அதாவது இக்காலங்களில் மரணதண்டனை அடிக்கடி பிரயோகிக்கப்படாமையாகும். கொலை செய்வதனால் நிச்சயமாகவும் இயற்கையாகவும் ஏற்படவேண்டிய விளைவு மரணதண்டனையேயென எவ்வாற்றாலும் கூற முடியாது. கண்டுபிடித்தல், கைது செய்தல், தீர்ப்பளித்தல் ஆகியவற்றிலுள்ள இடர்ப்பாடுகளும் தீர்ப்பளித்ததன் பின்னர் மன்னிப்பளிக்கும் அதிகாரத்தைப் பிரயோகித்தலும் மரணதண்டனை ஓர் ஒப்பற்ற தடுப்புமுறையாயமையும் என்னுங் கோட்பாட்டிற்கு முரணாக நிற்கின்றன. மறுபுறமாக, இத்தகைய இடர்ப்பாடுகளை மேற்கொண்டு, மரணதண்டனை ஒரு தடுப்புமுறையாயமைவதற்கு வேண்டிய மிகக் கூடிய நிலைமைகள் அனைத்தையும் பெற்ற காலையும், அதனால் ஏற்படும் விளைவு பெருந்தொகையானோர் தூக்கிலிடப்படுவதும், அதுகாரணமாய் மக்கள் அத்தகைய நிலையைப் பொறுக்கொணாது வெறுத்து நிற்பதுமேயாகும். ஆகையால் மரணதண்டனையானது எக்காலத்திலும் ஒரு தடுப்பு முறையாய் அமையமாட்டாது. ''அது அருமையாய்ப் பிரயோகிக்கப்படுவதிலேயே-அதாவது அது ஒரு தடுப்புமுறையாகப் பயன்படமுடியாமையிலேயே-அதன் வாழ்வு தங்கியிருக்கிறது.[2]''

அதிமேற்றிராணியார் தெம்பிள் என்பார் இந்த முரண்வாசகத்தை அழகாக விளக்கியதோடு, தண்டனையானது எத்துணைக் கடுமையாயிருப்பினும், குற்றவாளி கண்டுபிடிக்கப்படுவதும் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதும் நிச்சயமெனின், அந்நிச்சயமே தண்டனையின் கடுமையைக் காட்டிலும் குற்றங்களைக் குறைப்பதற்குப் பெரிதும் உதவியாயிருக்குமென்னும் உலகொப்பிய குற்றவியற்றத்துவத்தை உறுதிப்படுத்தியுமுள்ளார். அவர் கூறுவதாவது[3]: ''பல சந்தர்ப்பங்களிற் கொலைத்தீர்ப்பளிக்கப்பட்ட குற்றவாளிகள் தூக்கிலிடப்படுவதைப் பொது மக்கள் எதிர்த்து அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர் என்பதை அண்மைக்கால அனுபவம் காட்டியுள்ளது; அன்றியும் மன்னிப்பு வழங்கப்பட்டவர்களின் விகிதமும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. மேலும், இத்துறையில் நிகழ்த்திய ஆராய்ச்சிகளிலிருந்து, தடுப்புமுறைத் தண்டனையினால் விளையும் பயனின் முக்கிய இயல்புபற்றி ஐயப்பாட்டிற்கே இடமில்லையென்பது தெரிகின்றது. இது தண்டனை எத்துணைக் கடுமை வாய்ந்தது என்பதைப் பொறுத்ததன்று; மற்று, குற்றங் கண்டுபிடிக்கப்படுவதும், அக்குற்றத்துக்குச் சட்டப்படியமைந்த தண்டனையை (அது எதுவானாலும் சரி) நிறைவேற்றுவதும் நிச்சயமாய் நிகழுமென்பதையே பொறுத்தது. ஒரு கட்டத்தில், குற்றவாளிகள் தாம் தூக்கிலிடப்படக்கூடுமென எதிர்பார்ப்பதே நிச்சயமற்றதாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலுறுதி; இதனால் தாம் மன்னிப்புப்பெறக் கூடுமென்னும் நம்பிக்கை எப்போதும் அவர்களுக்கு இருக்கும்; நாமும் இந்த நிலையை அடைவது நிச்சயம்போற் றோன்றுகின்றது. அவ்வாறானால், மரண தண்டனையானது மன்னிப்பில்லாத ஆயுட்கால மறியலிலும் பார்க்கப் பயன் குன்றிய தடுப்புமுறையாய்விடும். குற்றஞ்செய்வோர் ஆயுட்காலச் சிறைத்தண்டனையை மாற்றாகவுடைய, நிகழக்கூடிய மரணதண்டனையிலும் பார்க்க, நிச்சயமான ஆயுட்காலச் சிறைத் தண்டனையாற் பெரிதும் தடுக்கப்படுவாரெனல் தருக்க நெறிக்கு முரணானதே. ஆனால் தருக்க முறைப்படி சிந்தனை செய்வோர் மிகச் சிலரே. குற்றவாளிகளோ அப்படிச் செய்யும் ஆற்றலில் மிகக் குறைந்தோராவர். உளவியற்படி, நிச்சயமின்மையைப் புகுத்தினால், அது மரணதண்டனைக்கும் சீவியகாலச் சிறைத்தண்டனைக்குமிடையில் மட்டுமே ஊசலாடுவதாயிருப்பினும், நிச்சயமாக நிகழவிருக்கும் ஒரு சீவியகாலச் சிறைத்தண்டனையோடு ஒப்பிடுகையில், இன்றுள்ள சட்டத்தின் தடுப்புச் செல்வாக்கை அது வலிகுன்றச் செய்துவிடும். சீவிய காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவன், நீண்டகாலச் சிறைவாசத்தின்பின் விடுதலையடையக் கூடுமென்பதில் இந்த நிச்சயமின்மையால் வரும் விளைவு இல்லை; ஏனெனில் அவன் அவ்வாறு விடுதலைபெறுவது முற்றாக வேறானவொரு விடயத்தில், அதாவது அவனுடைய எதிர்கால நன்னடத்தையில், தங்கியுள்ளதாதலின் என்க. பயனுறுதியுள்ள தடுப்புமுறைக்கு வேண்டியது யாதெனில், உடனுக்குடனே நிறைவேற்றத்தக்க தண்டனையைக் குறித்த குற்றத்துக்கு விதிப்பதேயாகும்.4 மரணதண்டனையை ஆதரிப்பதற்குரிய நியாயத்தை இக்காலத்தில் எமது உணர்ச்சி ஏற்க மறுப்பதால், இதனைச் சாதிக்கும் வாதம் தோல்வியுறுகின்றது. தண்டனைகளெல்லாம் குணப்படுத்தும் அல்லது சீர்திருத்தம் கூறுபாட்டைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதை நாம் நினைவுகூறுமிடத்து, இது மிக்க முதன்மை பெறுகின்றது; ஏனெனில், முன்சொன்னவாறு, மரணதண்டனையில் இக்கூறுபாடு மிகக் குறைந்த அளவிலேயே இருக்கின்றமையால் என்க. இந்தத் தண்டனை ஓர் ஒப்பற்ற தடுப்புமுறையாகுமென மன்றாடமிடியுமானாலொழிய இவ்வாதம் வலிவுடையதாகாது; ஆனால் இக்கால நிலைமையில் அது அவ்வாறு ஒப்பற்ற தடுப்புமுறையாயில்லை; ஆகவே இதற்கு எதிராகவுள்ள வாதமே வலிவுள்ளதாகத் தோன்றுகிறது''.

இக்காலச் சமூகத்திற் பலகாரணங்கள், மரணதண்டனையளிப்பதே கொலைச்செயலின் நிச்சயமான, தவிர்க்கமுடியாத விளைவாகுமெனக் கொள்ளமுடியாதவாறு செய்துவிட்டன. ஆகவே, மரண தண்டனை ஒப்பற்றவோர் தடுப்புமுறையெனக் கூறப்படும் வாதம்



இதனால் வலிவற்றதாய் விடுகின்றது. மேலும் இக்காலத்தில் மரணதண்டனையைப் பிரயோகிக்குமிடத்துப் பெண்பாற் கொலையாளிகளுக்கும் இளங்கொலையாளிகளுக்கும் சலுகை காட்டப்படுகின்றது; இதனாலும் மரணதண்டனை ஒப்பற்ற தடுப்புமுறையாகுமெனக் கூறும் வாதம் தோல்வியுறுகின்றது. பலநாடுகளில் இளம் கொலைஞர்களும் சிசுக்கொலை செய்த பெண்களும் மரணதண்டனையினின்றும் விலக்கப்பட்டுள்ளனர். ஒண்டியுறசு, எல்சல்வடோர், குவாதமாலா போன்ற வேறுசில நாடுகளில் பெண்கள் முற்றாகவே மரணதண்டனையினின்றும் விலக்கப்பட்டுள்ளனர். சட்டக்கொள்கைப்படி, ஆணும் பெண்ணும் சமமாக மரணதண்டனைக்குட்படக்கூடியவராயிருக்கும் நாடுகளிலுமே, கொலைக்குற்றஞ் சாட்டப்பட்ட ஓர் பெண், அக்குற்றத்தினின்றும் விடுதலை செய்யப்படுவதற்கும், அல்லது குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டகாலை மன்னிப்புப் பெறுவதற்கும், அதே நிலைமைகளிலுள்ள ஆணைக் காட்டிலும் அதிக வாய்ப்புடையவளாயிருக்கின்றாள். எனினும், மரணதண்டனை ஒரு தடுப்புமுறை என்னுங் கொள்கையை ஏற்றுக்கொண்டால், அதைத் தெரிந்து சிலர்க்கே பிரயோகிப்பது நீதியாகாது; ஏனெனில் கொலை செய்வதினின்று ஆண்களைத் தடுப்பது போன்று பெண்களைத் தடுக்க வேண்டியதில்லையென எண்ணுவதற்கோ, அல்லது கொலை செய்யும் உளப்பாங்குடைய இளைஞர்களுக்கு இத்தடுப்புமுறைப் பாடம் வேண்டியதில்லையென எண்ணுவதற்கோ எவ்வித நியாயமுமில்லையாதலின் என்க. மேலும், கொலையாளியைத் தூக்கிலிடும் தடுப்புமுறையாற் பெறலாகும் மிகக் கூடிய பயனைப் பெறவேண்டுமென்பது தடுப்புமுறைக் கொள்கைத் தருக்கமாகும். அதாவது தூக்கிலிடும் செயல் பகிரங்கமாகவும் மிகக் கொடூரமாகவும் நிறைவேற்றப்படல் வேண்டுமென்பது. ஆனால், உண்மையில் இக்கால ஒப்புரவாண்மைக் கொள்கைப்படி தூக்கிலிடுதல் மிக விரைவாகவும், நோன்றியும் நடத்தப்படுவதோடு, ஒரு சில அரசியல் அதிகாரிகள் முன்னர் அந்தரங்கமாயும் நடத்தப்படுகின்றது. மரணதண்டனை பற்றி ஆராய 1866 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட அரச ஆணைக்குழு விதந்துரைத்தவண்ணம், இங்கிலாந்திற் பகிரங்கமாகத் தூக்கிலிடும் முறை 1868 இல் ஒழிக்கப்பட்டது. குறித்த ஆணைக்குழுவுக்கு முன்னர்ச் சாட்சியமளித்த குடும்பக் குருக்கள் ஒருவர் தூக்கிலிடப்படுதற்குத் தாம் ஆயத்தஞ் செய்த 167 பேர்களில் 164 பேர் ஏலவே குறைந்தபட்சம் ஒரு பகிரங்கத் தூக்கினையாவது கண்டுள்ளனர் என அறிவித்தார். இதனாற் பகிரங்கமாகத் தூக்கிடல் விசேடமான ஒரு தடுப்புமுறையாகாதெனக் குறித்த ஆணைக்குழு முடிவுசெய்ததில் ஆச்சரியமெதுவுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணதண்டனை ஓர் ஒப்பற்ற தடுப்புமுறையென்னுங் கொள்கைக்கு மாறுயுள்ள உளவியல் சார்ந்த வாதங்களின் வலிவுடைமையை, தண்டவியற் சீர்திருத்தங்களிலிருந்து பெற்ற செயன்முறை அனுபவங்கள் எவ்வாறு அரண்செய்கின்றன என்பதை இனி நாம் ஆராய்வாம். 19 ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் இருநூற்றுக்கு மேற்பட்ட குற்றங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. அக்குற்றங்களில், முடிச்சுமாறல், 3 ரூபாய் (5 சிலின்) அல்லது அதற்கு மேற் பெறுமதியுள்ள பொருள்களைக் கடைகளில் திருடல், தனிப்பட்டோர் இல்லத்தில் 25 ரூபாய் (40 சிலின்) அல்லது அதற்கு மேற் பெறுமதியுள்ள பொருள்களைத் திருடல், வெசுமினித்தர் பாலத்திற்குச் சேதமுண்டாக்கல் போன்ற குற்றங்களும் அடங்கும். 1861 ஆம் ஆண்டளவில் மரணதண்டனைக்குட்பட்ட குற்றங்கள் விரல்விட்டெண்ணத்தக்க அளவுக்குக் குறைந்துவிட்டன. மிக உயர்ந்த நீதிமுறைச் சேவையிலுள்ளவர்களின் ஏறக்குறைய ஒருஎளப்பாடான எதிர்ப்புக்கிடையில் மரணதண்டனைக்குட்பட்ட குற்றங்கள் இவ்வாறு படிப்படியாகக் குறைக்கப்பட்டன. நீதிமுறைச் சேவையிலுள்ள இவர்கள், மரணதண்டனையானது ஓர் ஒப்பற்ற தடுப்புமுறையாகப் பயன்படும் என்பது தானே விளங்கும் ஓர் உண்மையெனக் கருதினர்.

எனினும் இந்த மேன்மைவாய்ந்த நீதிபதிகள் எதிர்காலம்பற்றி அஞ்சியனவெல்லாம் ஆதாரமற்றவை யென்பது நிறுவப்பட்டது. 1873 இல் சேர் யோசேப்பு பீசு என்பார் பொதுமக்கள் சபையிற் பின்வருமாறு கூறியுள்ளார்;[5] ''சட்டமும் தண்டனையும் படிப்படியாகத் தொடர்ந்து குறைக்கப்பட்டபோதும் மக்களின் ஆதனங்களும், உயிர்களும் முன்னிருந்தவாறே முறையே பாதுகாப்புடையனவாயும் புனிதத்தன்மையுடையனவாயும் இருந்து வருகின்றன''. இங்கிலாந்திலே இவ்வாறு மரணதண்டனையினின்றும் விலக்கப்பட்ட பல குற்றங்கள், ஏலவே முன்னுலோசனை செய்து மக்களின் ஆதனங்களுக்கெதிராக இழைத்த அற்ப குற்றங்களாகும். ஆகையாற், சிறந்த தடுப்புமுறையாயமைவதெனச் சாதிக்கப்படும் மரணதண்டனையை விலக்கியதால் இத்தகைய சந்தர்ப்பங்களிற் குற்றவீதம் பாதிக்கப்படவில்லையாயின், பெரும்பாலும் முன்னுலோசனையின்றியே இழைக்கப்படும் கொலைக்குற்றங்களுக்கு அம்மரணதண்டனையை விதிக்காது விடுவதாற் பாதகமான விளைவுகள் ஏற்படுமென எதிர்பார்ப்பதற்குப் போதிய காரணமில்லையென்றே தோன்றுகின்றது.

பிரித்தானிய அரச ஆணைக்குழுவின் மரணதண்டனை பற்றிய 1949 – 1953 ஆண்டுக்கால அறிக்கையில் மரணதண்டனை ஒரு



தடுப்புமுறையாவது பற்றிய மிக நிறைவான புள்ளிவிவர ஆய்வொன்று காணப்படுகின்றது. ''சர்வதேசத் தண்டனை, குழிவிரக்க முறை ஆணைக்குழுவின்'' செயலாளர் நாயகமான கலாநிதி தோசுதன் செலின் என்பாரின் விஞ்ஞாபனத்தையும், அவரின் சாட்சியத்தையும் பெறும் நற்பேற்றையும் முற்சொன்ன குழுவின் உறுப்பினர் பெற்றிருந்தனர். இவர், ஆட்கொலை, மரணதண்டனை சம்பந்தமான புள்ளிவிவரச்சான்றுகளில் துறைபோய, உலக முதன்மை வாய்ந்த அறிஞராவர். குறித்த ஆணைக்குழு தான் சேர்த்த புள்ளிவிவரச் சான்றுகளை மூன்று வகையாகப் பகுத்து ஆராய்ந்தது. முதலாவதாக, ஒரு தன்மையாவன சமூக, பொருளியல் இயல்புகளைக் கொண்டிருந்த அமெரிக்க ஐக்கிய அரசிலுள்ள மாகாணங்களையும் நாடுகளையும் தொகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள ஆட்கொலை வீதத்தை ஆராய்ந்தது. ஒவ்வொரு தொகுதியிலும் மரணதண்டனையை ஒழித்துள்ள மாகாணங்களும் மரணதண்டனையை ஒழிக்காத மாகாணங்களும் சேர்க்கப்பட்டிருந்தன. இரண்டாவதாக, மரணதண்டனையை ஒழித்துள்ள நியாயாதிக்கப் பகுதிகளில் மரணதண்டனையின் ஒழிப்புக்கு முன்னரும் பின்னரும் ஏற்பட்ட ஆட்கொலைவீதத்தின் மாதிரியை ஆணைக்குழு ஆராய்ந்தது; மேலும் மரணதண்டனையை ஒரு சிறு காலத்துக்கு ஒழித்துப் பின்னர் மீண்டும் புகுத்தியுள்ள நியாயாதிக்கப் பகுதிகளையும் ஆராய்ந்தது. மூன்றுவதாகப் பற்பல மாகாணங்களிலும் பட்டிணங்களிலும் உள்ள ஆட்கொலை வீதத்துக்கும், தூக்கிலிடப்பட்டவர்களின் எண்ணிக்கைக்குமிடையே தொடர்பு யாதேனும் காணமுடியுமாவெனவும் ஆராய்ந்தது. ஆணைக்குழுவின் அறிக்கையின் 6 ஆம் அட்டவணையில் 53 பக்கங்களடங்கிய புள்ளிவிவர ஒப்புமைத் தகவல் உள்ளது. இவ்வறிக்கையின் முதலாம் அத்தியாயத்தில், புள்ளிகளின் சிக்கல்களும் உள்ளுறைகளும் ஆராயப்பட்டன.

''மரண தண்டனை உபயோகிக்கப்படினும் அல்லது உபயோகிக்கப்படாவிடினும், தூக்கிலிடல் அடிக்கடி நிகழினும் அல்லது நிகழாவிடினும், இவ்வீதங்கள் மரணதண்டனையல்லாத பிறகாரணிகளாலும் கட்டுப்படுத்தப்படுகின்றன வென்பதை மரணதண்டனையைச் சாதித்துள்ள மாகாணங்களும், மரணதண்டனையை ஒழித்துள்ள மாகாணங்களும் காட்டும் வீதங்கள் தெரிவிக்கின்றன'' எனக் கலாநிதி செலின் ஒரு முடிபுக்கு வந்துள்ளார்.[6] இதனைக் குறித்த ஆணைக்குழுவும் ஒப்புக்கொண்டுள்ளது. ஆணைக்குழு மேலுங் கூறுவதாவது, ''எந்தத் தேதியை எடுத்துக் கொண்டாலும், பிறகாரணங்களாலன்றி, மரணதண்டனை ஒழிப்பினுல் அல்லது மரணதண்டனை ஒழிப்பும் பிறகாரணங்களும் சேர்ந்ததனுல், மரணதண்டனையை ஒழித்தபின்னர் ஆட்கொலை மாற்றங்கள் ஏற்பட்டனவெனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளல் பொருத்தமுடைத்தன்று. மரணதண்டனையை ஒழித்தவுடன் ஆட்கொலைகளும், வலாற்காரக் குற்றங்களும் சில காலத்துக்கு அதிகரித்து நிகழுமென்பதற்கு ஓரளவு சான்று உண்டு; எனவே, தண்டாரூப நியாயப்படி மரணதண்டனை தடுத்து வைக்கப்பட்டிராமல் நடைமுறையில் உபயோகிக்கப்படும் நாடுகளில் மரணதண்டனையை ஒழிப்பதால், இத்தகைய ஒரு தற்காலிக அதிகரிப்பு ஏற்படலாம் என எண்ணலாம். ஆனால், ஒரு நாட்டுமக்கள் புதிய முறைக் கடுந்தண்டனையோடு பழகிவிட்டதும், மரணதண்டனை ஒழிப்புக்காரணமாகக் குற்றங்கள் அதிகரிப்பது காலக்கிரமத்தில் இல்லையாகிவிடும். நாம் பெற்றுள்ள பொதுப்படையான முடிவு யாதெனில், மரணதண்டனையை ஒழித்ததால் ஆட்கொலைவீதம் அதிகரித்துள்ள தென்றோ, அதனை மீண்டும் புகுத்தியதனால் அவ்வாட்கொலைவீதம் வீழ்ச்சியுற்றுள்ள தென்றோ நாம் பரிசோதித்துள்ள புள்ளிகள் எவையேனும் சான்று பகர்கின்றில என்பதாகும்.[7]'' இப்பிரச்சினை பற்றி, ஆணைக்குழுவின் தீர்ப்பான முடிவு என்னவெனில், ''மரணதண்டனையின் ஒப்பற்ற தடுப்புமுறை ஆற்றலை மிகைப்படுத்திக்கூறும் மதிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கொலை சம்பந்தமான தண்டனைக் கொள்கையை வகுக்கலாகாது'' [8] என்பதாகும்.

பிரித்தானிய அரச ஆணைக்குழுவின் முன்னர்ச் சாட்சியமளித்த பின், மூன்றாண்டு கழித்து 1954 இல் கலாநிதி தோசுதன் செலின் என்பார் மரணதண்டனை, உடற்றண்டனை, உலொத்தர் என்பவை பற்றிய, கனடாவின் மேற்சபையினதும் பொதுமக்கள் சபையினதும் இணைக்குழுவின் முன்னர்ச் சாட்சியமளித்தார். அவர் சமர்ப்பித்த விஞ்ஞாபனமொன்றில் மரணதண்டனை ஒரு தடுப்புமுறையாயமைவது பற்றிய தமது ஆராய்ச்சியைப் பின்வருமாறு முடிவு செய்திருக்கின்றார்.[9] அளிக்கப்பட்ட சான்றுகளிலிருந்தும் மரணதண்டனை பற்றிய அரச ஆணைக்குழுவின் அறிக்கையில் மிக விரிவாகத் தரப்பட்டுள்ள சான்றுகளிலிருந்தும் தெளிவாகப் பெறப்படுவது யாதெனில், ஆட்கொலை மரணவீதத்துக்கும், கொலைக்காகக் குற்றவாளிகளைத் தூக்கிலிடுவதற்குமிடையே காணக்கூடிய தொடர்பு யாதுமில்லை யென்பதாம். பிறவாறு கூறின், ஓர் அரசு மரணதண்டனையை உபயோகித்தாலும், அல்லது உபயோகிக்காது விட்டாலும், ஒரு நாட்டுச் சமூக, அரசியல், பொருளியல் நிலைமைகளில் இயற்கையாயமைந்துள்ள பிறகாரணிகளால் தீர்மானிக்கப்படுமளவிலும் விரைவிலும் கொலைக்குற்றங்கள் நிச்சயம் நிகழ்ந்தே வரும் என்பதாம்.[10] மரணதண்டனை கொலைக்குற்றத்தைத் தடுக்கும் ஒரு விசேட தடுப்புமுறையாகாது. இத்தண்டனையை ஒழிப்பது அல்லது சாதிப்பது பற்றிய வாக்குவாதங்களிலே மட்டும் தடுப்புமுறையெனக் கருதப்படும் இந்தப் பயனைப் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துவது வினோதமானதே. கொலை, கொலையாளி பற்றிய பிரச்சினைகளை ஆராயும் மாணவர்கள், கொலைகளைத் தடுக்கும் வழிவகைகளை ஆராயும்போது, மரணதண்டனையை ஒரு தடுப்புமுறையாகக் கூற நினைப்பதில்லை. இவைகளுக்கிடையே எவ்வகைத் தொடர்புமில்லையென அவர் கண்டமையாற்போலும் அவ்வாறு கூற நினைக்கவில்லை.



(1941 ஆம் ஆண்டில் ஒழிக்கப்பட்ட) மரணதண்டனையை மீண்டும் புகுத்துவதற்காக 1950 ஆம் ஆண்டில் நியூசிலாந்து நீதியமைச்சர் வாதித்தபோது அவர் கொலைபற்றிய புள்ளிவிவரங்கள் மரணதண்டனைச் சாதிப்புவாதிகளை ஆதரிக்கவோ நிராகரிக்கவோவில்லையென்றும், அதனால் மரணதண்டனை ஒழிப்புவாதிகளையும் ஆதரிக்கவோ நிராகரிக்கவோவில்லையென்றும் கூறித் தம்மனத்திருத்தியையும் வெளிப்படுத்தினர். இத்தகைய புள்ளிவிவரங்கள், இத்தண்டனை பற்றிய மக்களின் விருப்போடோ, வெறுப்போடோ தொடர்பற்றனவெனின் இவர் கூற்றுப் பொருத்தமாகும்; ஆனால் புள்ளிவிவரங்கள் எதையும் நிறுவுவன அல்ல எனின் அது பிழையாகும். ''இப்புள்ளிவிவரங்கள் நிறுவுவது மரணதண்டனைக்குச் சாதகமாகவோ, பாதகமாகவோவுள்ள கட்சியையன்று; ஆனால் இத்தண்டனை ஒரு பொதுவான தடுப்புமுறையாயமையுமென்பாரை எதிர்ப்பார் பக்கத்தையே அவை நிறுவுகின்றன.'' [11]

மரணதண்டனையை நிறுத்துவதற்கும், ஆட்கொலை வீதத்துக்குமிடையே எவ்விதத் தொடர்புமில்லையென நிறுவப்படின், அது மரணதண்டனை ஒரு தடுப்பு முறையாய் அமைகின்றதா என்னுங் கேள்விக்கு விடையிறுக்கவில்லையென முடிவு செய்யலாம். அது ஒரு தடுப்புமுறையாகலாம்; அல்லது தடுப்புமுறையாகாதும் விடலாம். புள்ளிகள் முடிவாக எவற்றையும் வெளிப்படுத்தாவிடின், நாம் விதந்துரைக்கக்கூடியது யாதெனில், (அரச ஆணைக்குழு அறிக்கைப் படி) ''கொலை சம்பந்தமான தண்டனைக்கொள்கை, மரணதண்டனையின் ஒப்பற்ற தடுப்புமுறை ஆற்றலை மிகைப்படுத்திக்கூறும் மதிப்புக்களை அடிப்படையாகக் கொள்ளலாகாது'' என்பதாகும். ஆனால் இலங்கையிலும் [12] பிறநாடுகளிலும் சேர்க்கப்பட்ட புள்ளிவிவரங்கள் இதற்கு மேலாகவும் நிரூபிக்கின்றன. மரணதண்டனை ஒரு பொதுவான தடுப்புமுறையாகும் என்பதற்கு எதிராகவே அவை சான்றுபகருகின்றன. எந்த ஒரு நாட்டிலும் புள்ளிவிவரத் தகவல்கள் இவ்வாறு செய்ய முடியாதெனினும், பலநாட்டின் அனுபவச் சான்றுகள் ஒரே தன்மையுடையவாயிருப்பின், மிக நம்பிக்கைக்குரிய முடிபுகளைப் பெறலாம்.

எந்த ஒரு நாட்டிலும், மரணதண்டனை நிறுத்தப்பட்டதால் ஆட்கொலை வீதம் அதிகரித்திருப்பின், அவ்வதிகரிப்புக்கு அவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணதண்டனை நிறுத்தி வைக்கப்பட்டதும் ஒரு காரணமாகுமென நம்பிக்கையாகத் தீர்ப்பளிக்கலாகாது; ஏனெனில், சமுதாயத்தின் பிற காரணிகளும் இவ்வதிகரிப்பை உண்டாக்கியிருக்கக் கூடுமாதலால் என்க. மரணதண்டனை நிறுத்திவைக்கப்பட்ட காலை, ஆட்கொலை வீதம் குறைவுற்றிருப்பின், கொலைசெய்யும் சுபாவமுள்ளவர்களை மரணதண்டனை தடுக்காதெனவும் நம்பிக்கையாக முடிவு செய்யலாகாது. சமுதாயத்தின் பிறகாரணிகள் அக்குறைவுக்குக் காரணமாயிருக்கலாம்; மரணதண்டனையை ஒழிக்காது வைத்திருந்தால், இன்னும் அதிகமாகக் கொலைவீதம் குறைந்துமிருக்கலாம். மரணதண்டனை நிறுத்திவைக்கப்பட்டோ ஒழிக்கப்பட்டோ உள்ள பல நாடுகளை ஆராயின் மிக நம்பிக்கையான முடிவுகளைப் பெறுதல் சாத்தியமாகும்.

மரணதண்டனை இருப்பினும், இல்லாவிடினும் சில நாடுகளில் ஆட்கொலைவீதம் அதிகரித்திருக்குமென்றும், வேறு சில நாடுகளிற் குறைந்திருக்குமென்றுங் கொள்வோமானால், மரணதண்டனை ஓர் ஒப்பற்ற தடுப்புமுறையாயின் அம்மரணதண்டனை ஒழிக்கப்பட்டோ நிறுத்தப்பட்டோவுள்ள நாடுகளில், ஆட்கொலைவீதம் அதிகரிக்கும் போக்கே பொதுவாகக் காணப்படல் வேண்டும். மரணதண்டனையை நிறுத்திவைக்கும் காலத்தில் ஒரு சில நாடுகளிலாயினும் ஓர் ‘அமுக்கநிலை’' இருந்திருத்தல் வேண்டும்; அதாவது கொலைக்குற்றங்கள் பெருக முடியாது அமுக்கிவைத்திருக்கப்பட்டிருத்தல் வேண்டும்; கொலைத் தண்டனையை நிறுத்தியதும், ஒப்பற்ற ஒரு தடுப்புக்காரணியென்று கொள்ளப்படும் மரணபீதி நீங்கிவிடுமாதலால், அந்நாடுகளில் ஆட்கொலை வீதம் திடீரெனப் பெருகத் தொடங்கியிருக்கும்.

ஆனால் பிரித்தானிய அரச ஆணைக்குழுவின் ஆட்கொலைப் புள்ளிவிவரங்கள் பற்றிய மிக விரிவான ஆராய்ச்சியும், பிரசுரிக்கப்பட்ட பிற ஆராய்ச்சிகள் பலவும் இவ்வாறு நடைபெறவில்லையெனத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. மரணதண்டனையின் தடுப்புமுறைப் பயனை ஒரு நாட்டுப் புள்ளிவிவரம் முடிவாக நிரூபிக்காவிட்டாலும், இப்புள்ளிவிவரங்கள் புறநாடுகளின் புள்ளிவிவரத் தன்மைகளோடு பொருந்துங்காலை, அவை மரணதண்டனை ஓர் ஒப்பற்ற குற்றத்தடுப்புமுறையாகாதெனக் காட்டுவதோடு, மரணதண்டனை ஆட்கொலையைத் தடுக்கவல்லதெனக் கண்மூடித்தனமாக நம்பி அதற்கு அளவுகடந்த முதன்மையளிக்கப் படுகின்றதெனும் நம்பிக்கையை மெய்ப்பிப்பனவாயுமுள்ளன.



இலங்கையிற்றானும் புள்ளிவிவரச் சான்றுகள் 13 மரணதண்டனை ஒரு தடுப்பு முறையா, அன்றா என்னுங் கேள்விக்கு விடையிறுக்காது வெறுமனே விடவில்லை. மரணதண்டனை நிறுத்திவைக்கப்பட்டமையொன்று தவிர்ந்த பிற சமூக நெருக்கல்கள், ஆட்கொலைவீதம் கூடுவதற்கு, அல்லது குறைவதற்குக் காரணமாயிருந்தனவா என்பதில் ஐயமிருந்திருக்குமாயின், குறித்த புள்ளிவிவரங்கள், முற்சொன்னவாறு ஒரு முடிவான தீர்ப்பளிக்காதனவாயிருக்கும். 1956 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதந் தொடக்கம் இலங்கையிலே அரசியல், பொருளியல், சமூகவியல் ஆகிய துறைகளில் மிகவிரைவான மாற்றங்களும், நிலைபெற்றிருந்த அதிகாரத்தின் ஆற்றலில் வீழ்ச்சியும், சிற்றூர் முதல் மிகப்பெரிய ஆட்சிமண்டலம்வரையுள்ள அரசாங்கக் கூறுகளிலெல்லாம் அரசியல் வாழ்வு, கைத்தொழில் வாழ்வு ஆகியவற்றின் எல்லா நிலைகளிலும் கட்டொழுங்கின்மையும் ஏற்பட்டிருக்கின்றனவென்பதையும், இவற்றின் கூட்டுவிளைவாக ஆட்கொலைவீதம் அதிகரித்துள்ளதென்பதையும் யாரும் மறுக்கமாட்டார். எனினும் இனக் குழப்பங்கள் நிகழ்ந்த காலமாகிய 1958 ஆம் ஆண்டுக்கு முன் ஆட்கொலைவீதத்திற் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் காணப்படவில்லை; (கீழ்மாகாணத்திற் குழப்பங்கள் இதற்கு முன்னரே நிகழ்ந்துள்ளமையால், அதைப் பொறுத்தவரையில் இக்கால எல்லை இன்னும் முன்தள்ளிவைக்கப்படல் வேண்டும்) ஆகையால், இலங்கையில் மரணதண்டனை நிறுத்தி வைக்கப்பட்டகாலமுதலாக அரசியல், பொருளியல், சமூகம் ஆகிய துறைகளில் நிகழ்ந்த மாற்றங்களோடும், பிறநாடுகளின் அனுபவங்களோடும் முறையே இலங்கையின் ஆட்கொலைவீதப் புள்ளிவிவரங்களைத் தொடர்புறுத்திக் காணுங்கால், அவை மரணதண்டனை ஓர் ஒப்பற்ற தடுப்புமுறையாகும் என்னுங் கொள்கையை நிராகரிப்பனவாகத் தோன்றுகின்றன; மேலும் மரணதண்டனையை மீண்டும் புகுத்தல் அல்லது ஒழித்தல் பற்றி ஒரு முடிபுக்கு வருகையில், உள்ளார்ந்த கொலையியல்புடையவருக்கு நெடுங்காலச் சிறைவாசத்திலும் பார்க்க மரணதண்டனை ஓர் ஒப்பற்ற தடுப்புமுறையாயமையும் என்னும் வாதத்தின் பேரில் மரணதண்டனை மீண்டும் புகுத்தப்படுவது நேரியதாகாது.

ஆயினும், மரணதண்டனையின் தவறுகளை ஒருவர் கணக்கிடமுடியுமெனினும் அதன் அனுகூலங்களைக் கணக்கிடமுடியாதெனக் கூறப்பட்டுள்ளது. பிறவாறு கூறின் இக்கூற்று, மரணதண்டனை பிரயோகிக்கப்படும் ஒரு நாட்டிற் கொலைகளின் எண்ணிக்கையைக் கொண்டு அம்மரணதண்டனையால் தடுக்கப்படாதாரின் எண்ணிக்கையை ஒருவர் அறிந்துகொள்ளலாமாயினும், அதனால் தடுக்கப்பட்டவரின் எண்ணிக்கையை அறிந்து கொள்ளல் இயலாது என்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகும். மரணதண்டனையினால் அனுகூலங்களில்லை என ஒருவர் நிச்சயமாய்க் கூறமுடியாதாயின், நெடுங்காலச் சிறையிலும் பார்க்க அது ஒரு தக்க தடுப்புமுறையெனக் கொள்ளல் நியாயமானதென்றும், அதை வைத்திருக்க வேண்டுமென்றும் சிலர் வாதிக்கின்றனர். இது ஓர் உயர்ந்த தடுப்புமுறையென்னும் நியாயமான கொள்கையானது, கைதுசெய்யப்பட்ட கொலையாளிகளோடும், விசேடமாக மரணதண்டனை விதிக்கப்பட்ட கொலையாளிகளோடும் தொடர்புள்ளவர்களின் சான்றுகளை ஆதாரமாகக் கொண்டுள்ளது; இவர்களின் சான்றுகள் எவையெனில் இத்தகைய கொலைக்குற்றவாளிகள் மரணத்துக்கே மிகவும் அஞ்சுகின்றனர் என்பதும், இது ஏனைய மனித அனுபவங்களோடு ஒத்துப்போகும் என்பதுமாகும். இந்தக் கொள்கைக்கு எதிரான உளவியல் சார்ந்த வாதங்களை ஏலவே ஆராய்ந்துள்ளோம். 14 புள்ளிவிவரங்களின் ஆய்வுசார்ந்த விடையை இப்போது கொடுப்போம். எந்த ஒரு நாட்டிலும் மரணதண்டனை நடைமுறையிலிருக்கையில், அது ஒரு தடுப்புமுறையாகப் பெறக்கூடிய அனுகூலங்களை எக்காலத்திலும் ஒருவர் அறியமுடியாதாகையால், மரணதண்டனை ஒழிக்கப்பட்ட நிலையில் நிகழும் கொலைவீதமானது, அத்தண்டனையை நடைமுறையில் வைத்திருந்தால் நிகழ்ந்திருக்கும் கொலைவீதத்திலும் பார்க்கக் குறைந்ததாயிருக்க முடியாதென ஒருவர் நிச்சயமாகக் கூறமுடியாதென்பது தேற்றம். கொலைவீதத்தைப் பாதிக்கும் சமூகக்காரணிகளிலிருந்து மரணதண்டனையின் விளைவைத் தனித்துப் பிரிக்க முடியாதாகையால் அது எந்தவொரு நாட்டிலும், மரணதண்டனையை வைத்திருப்பதாற் குற்றமற்ற உயிர்கள் ஓரளவு காப்பாற்றப்படக் கூடுமென்பதன் மறுப்பை விலக்கி விடுகின்றது. ஆனால், மரணதண்டனையை நிறுத்தியுள்ள அல்லது ஒழித்துள்ள பல நாடுகளின் அனுபவங்களை நோக்குங்கால் மரணதண்டனையால் இத்தகைய ''மறைமுகமான பாதுகாப்பு'' அளிக்கமுடியாதென்பதுக்குத் தெளிவான சான்றுகள் உள என்பது புலனாகும்.

மரணதண்டனையை ஒழித்த அல்லது நிறுத்திய ஒவ்வொரு நாட்டிலும், அவ்வாறு செய்தது அறிவுடைமையாகுமா வென்பது பற்றிப் பொதுமக்களிடையே பலவாக்குவாதங்கள் நிகழ்ந்துள்ளன. ''மறைமுகமான பாதுகாப்பு'' உளதாயின், இந்தநாடுகளிற் சிலவற்றிலாவது மரணதண்டனையை நிறுத்திய பின்னர், அல்லது ஒழித்த பின்னர்க் கொலைக்குற்றவீதம் கூடியுள்ளதற்குச் சான்றுகள் காணப்பட்டு, அறிவிக்கப்பட்டுமிருக்கும். ''மறைமுகமான பாதுகாப்பு'' இருந்து பின்னர் நீக்கப்பட்டிருந்தால், அவ்வாறு நீக்கப்பட்டது காரணமாகச் சில கொலைகள் நிகழ்ந்திருத்தல் வேண்டும். எனினும் இவ்வாறு எங்கும் நிகழவில்லை.



வைத்திய ஆராய்ச்சியிலும் ஒரு புதிய மருத்துவ சிகிச்சையைப் பரிசோதிக்கும்போது, இதுபோன்ற புள்ளிவிவரப் பாகுபாட்டுமுறையே கையாளப்படுகின்றது. ஒரு மருந்தின் பயன்பாட்டைப் பரிசோதிக்க வேண்டுமாயின், ஒருவர் அம்மருந்தை உட்கொண்டு அதனாற் குணமடைந்தால், அது அம்மருந்தின் அப்பயன்பாட்டை நிரூபிப்பதாகாது; அதேபோல, அம்மருந்தாற் குணமடையாவிடினும் அம்மருந்து பயனற்றதென்பதை அது நிரூபிப்பதாகாது. இவ்விரு சந்தர்ப்பங்களிலும், இம்மருந்தை உபயோகித்திருக்காவிடின், நோய் எவ்வாறு முடிந்திருக்கு மென்றும் ஒருவர் நிச்சயிக்க முடியாது. பலநோயாளரில் அம்மருந்தை உபயோகிப்பதனாலேயே அதன் பயன்பாட்டை மிகத் தெளிவாக மதிப்பிடலாம். சமூகமென்னும் உடம்பின் ஆட்கொலை என்னும் நோய்க்கும் மரணதண்டனை சிகிச்சையாயமைவதுமிவ்வாறே. பலநாடுகளில் ஆட்கொலை இறப்பு வீதம் அறியப்பட்டதே. மரணதண்டனை என்னும் சிகிச்சையை நீக்கினாலும் அவ்விறப்பு வீதம் பாதிக்கப்படுவதாகத் தெரியவில்லை.

இவ்வாறே தம்முள் ஒரேவிதமான சமூக, பண்பாட்டு மாதிரிகளையும் ஒரேவிதமான குற்றவீதத்தையும், ஆனால் மரணதண்டனை பற்றி வெவ்வேறான கொள்கைகளையும் உடைய நாடுகளை ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த ''மறைமுகமான பாதுகாப்பு'' உண்மையில் உளதோ என்பது பற்றி ஐயப்பாடுண்டாகின்றது. மரணதண்டனையின் ''மறைமுகமான பாதுகாப்பு'' என்பதொன்று உளதாயின், இத்தகைய நாடுகளை ஒப்பிடுங்கால், அது ''மறைந்து'' இருக்க வேண்டியதில்லை. அமெரிக்க ஐக்கிய அரசின் மாகாணங்களும் அவுத்திரேலிய மகாணங்களும் இதற்குச் சிறந்த உதாரணங்களாக அமைகின்றன.

மரணதண்டனை பற்றிய அரச ஆணைக்குழுவின் அறிக்கையின் 350 ஆம் பக்கத்தில், அமெரிக்க ஐக்கிய அரசின் ஆறு நியூ இங்கிலாந்து மாகாணங்களில் (மெயினே, நியூ அம்சயர், வேமந்து, மசாக்குசெற்று, உரோடைலந்து, கொனெற்றிக்காற்று) (Maine, New Hampshire, Vermont, Massachusetts, Rhode Islands Connecticut) 29 ஆண்டுகளாக நடந்த தூக்குத்தண்டனைகளும் ஆட்கொலை விதமும் விவரிக்கப்பட்டுள்ளன. இம்மாகாணங்கள் புவியியல், சமுகம், பொருளியல், பண்பாடு ஆகியன சம்பந்தமாய் நெருங்கிய ஒப்புமை உடையன. இவ்வாறு மாகாணங்களிலும் நான்கு மரணதண்டனையைக் கைக்கொண்டிருக்க, இரண்டு (மெயினே, உரோடைலந்து) ஆராயப்பட்ட இப்பருவத்துக்கு முன்னரே மரணதண்டனையை ஒழித்திருந்தன. இவ்வாறு மாகாணங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைவீதம் ஒரே மாதிரியான வழியையே தெளிவாகப் பின்பற்றியுள்ளன. இவ்வராய்ச்சியை உடனடியாகத் தொடர்ந்து, முன்னிலும் பெரிய மாகாணத் தொகுதியொன்றைப் பரிசீலனை செய்தபோது இதேமாதிரியான முடிவே அங்கும் பெறப்பட்டது (அறிக்கை ப. 351 - 2).

இப்பிரச்சினையை 1954 இல் ஆராய்ந்து கனடாவின் பாராளுமன்ற ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்த விஞ்ஞாபனத்திற் கலாநிதி செலின் என்பார் அமெரிக்க ஐக்கிய அரசிலிருந்து கிடைத்த தகவல்களை ஆராய்ந்து பின்வருமாறு ஒரு முடிவுக்கு வந்தார் :- [15]

1. ''வெவ்வேறு அரசுத் தொகுதிகளில் ஆட்கொலை வீத மட்டம் வேறுபாடடைகின்றது. நியூ இங்கிலாந்து மாகாணங்களிலும் மத்தியமேற்கின் வடபால் மாகாணங்களிலும் இவ்வீதம் மிகக் குறைவாயும் மிசிகன், இந்தியானு, ஒகையோ (Michigan, Indiana, Ohio) ஆகிய இடங்களில் ஓரளவு கூடுதலாகவும் காணப்படுகிறது.

2. ஒரேவிதமான சமூக, பொருளியல் நிலைமைகளையும் குடித்தொகையையுமுடைய மாகாணத் தொகுதிகளுள் மரணதண்டனையை ஒழித்துள்ள மாகாணங்களை ஏனைய மாகாணங்களிலிருந்து வேறுபடுத்தல் முடியாததொன்றாகும்.

3. மரணதண்டனை இருப்பினும் இல்லாதுவிடினும் இவ்வரசுகளின் ஆட்கொலை வீதத்தின் போக்கு ஒரே மாதிரியாகவே இருக்கின்றது.''

இதேபோல் குவீன்சுலாந்து, நியூசவுதுவேல்சு (Queensland, New South Wales) ஆகிய இரண்டு அவுத்திரேலிய மாகாணங்களும் மரணதண்டனையை ஒழித்துள்ளன. இவைகளின் சமூக, பண்பாட்டுச் சூழ்நிலைகளும், ஆட்கொலைவீதம் உட்பட்ட குற்றவீதங்களும், மரணதண்டனையைக் கொண்டிருக்கும் ஏனைய நான்கு மாகாணங்களுடனும் ஒப்பிடத்தக்கனவாகும். ''மறைமுகமான பாதுகாப்பு'' உளதாயின், இவ்விரண்டு மாகாணங்களின் ஆட்கொலை வீதம் ஏனைய மாகாணங்களின் ஆட்கொலைவீதத்திலும் கூடுதலாயிருத்தல் வேண்டும்; ஆனால் அஃது அவ்வாறில்லை.

முடிவில், இத்தகைய ''மறைமுகமான பாதுகாப்பு'' ஒன்று உளதோ என ஐயுறுவதற்கு வலிமையான காரணங்கள் பல உள. கொலை சம்பந்தமான புள்ளிகளைக் கொண்டு எங்காவது இதன் உண்மை எடுத்துக் காட்டப்படவில்லை; எடுத்துக் காட்ட முயலப்படவுமில்லை; அது உள்ளதானல் புள்ளிவிவரங்களைக்கொண்டு எடுத்துக்காட்டப்படக்கூடியதாதல் வேண்டும். அன்றியும் அதன் உண்மை, உளவியல் சமூகவியல் ஆகிய துறைகளிற் பெருகியுள்ள அறிவையும், உளநோயறிஞர்களும் சமூகவியலறிஞர்களும் தனித்தனியாகக் குற்றவாளிகளைப் பற்றிச்செய்த ஆராய்ச்சிகளையும் கொண்டு பார்க்கும்போது, புள்ளிவிவரங்களிலிருந்து குறிப்பாகப் பெறப்படும் அனுமானங்களை வலியுறுத்தவுமில்லை. இந்த ''மறைமுகப் பாதுகாப்பு'' உளதென்பது அத்துணை ஐயத்துக்கிடமாயிருப்பதால், மரணதண்டனையை வைத்திருப்பது அல்லது ஒழிப்பது என்னும் விடயத்தை ஆராய்கையில், அதனைக் கணிப்புக்கெடுக்கலாகாதென்னும் முடிபுக்கு வருதல் நேரியதாகத் தோன்றுகின்றது. பிறவாறு கூறின், இந்த விடயத்தில் ஒரு முடிபுக்கு வருங்கால், கொலைச் சுபாவமுள்ளவர்களைத் தடுப்பதில் நீண்டகாலச் சிறைவாசமென்னும் மாற்றுத்தண்டனையை விடக், கூடிய பயனுறுதியுள்ளதென்னும் வாதத்தின் பேரில் மரணதண்டனையை நாட்டமுயல்வது நேரியதாகாது என்பதாம்.



இப்போது, மரணதண்டனையை வைத்திருக்க வேண்டுமென்பார்க்கும் ஒழிக்க வேண்டுமென்பார்க்குமிடை நிகழும் வாதத்தில் ஆய்வுக்குரிய பிரதான விடயத்தை விரிவாக-அதாவது மரணதண்டனை ஒப்பற்றவோர் தடுப்புமுறையாகுமா என்பதை - விரிவாக நாம் ஆராய்ந்துள்ளோம். இந்த இகலாட்டில் இடம் பெறும் ஏனைய விடயங்களை விரிவாக ஆராயின் கட்டுரை வரம்பிகந்து நீளுமென வஞ்சி விடுத்தாம். ஆயின், மரணதண்டனைக்குச் சார்பாகவும், எதிராகவும் கூறப்படும் நியாயங்களைத் தொகுத்துரைத்தவிடத்து அவற்றை ஏலவே சுருக்கமாகத் தந்துள்ளாம். மரணதண்டனைக்குச் சார்பாகவோ, எதிராகவோ அபிப்பிராயம் கூறுவாரிற் பெருந்தொகையானோர், உண்மையான சான்றினால் நிறுவப்படும் நியாயங்களைத் துணைக்கொள்ளாமல், தாம் எவ்வித ஆராய்ச்சியுமின்றி உண்மையெனக் கொள்ளும் மரபுரைகளையே துணைக்கொண்டு அவ்வாறு செய்கின்றனர் என்று கூறப்படுகின்றது. இது சமூகக்கொள்கைபற்றிய மிக முக்கியமான ஒரு விடயமாகும்; கடந்தகாலத்திலே இவ்விடயத்தைபற்றிக் கலந்துரையாடினோரெல்லாம்பெரும்பாலும் உண்மைகளையும் தருக்க நியாயத்தையும் அடிப்படையாகக் கொள்வதைவிடுத்து, மனச்சாய்வையும் உள்ளப்பற்றையும் அடிப்படையாகக் கொண்டே அவ்வாறு செய்தனர். இவ்விடயம்பற்றி நடுநிலையான தீர்ப்புக்கூறுவதற்கு வேண்டிய தரவுகளை வாசகர்களுக்கு இக்கட்டுரை வழங்குமென நம்புகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (அடிக்குறிப்புக்கள்)

(1) மரண தண்டனை பற்றிய பிரித்தானிய அரச ஆணைக்குழுவின் அறிக்கையைப் பார்க்க (1953) பக். 838-9.

(2) தோசுதன் செலின், 'மரண தண்டனையும் பொது அறிவும்' தொகுதி 12. சிறைச்சாலைக் குறுப்பேடு (Prison Journal), 1932, பக்கம் 12.

(3) 'நோக்குவோன்' (Spectator) என்னும் பத்திரிகையிலிருந்து தண்டனைத் திருத்தம் பற்றியமைந்த ஓவாட்டுக் கூட்டவையால் மீளப் பிரசுரிக்கப்பட்டது. (Howard League

(4) இதுபோன்றே சேர் உவாற்றர் மோபெளி என்பாரும் கூறுகின்றார்: 'எத்துணைக் கொடுந் தண்டனைகளும், எதிர்காலக் குற்றவாளிகள் அவற்றினின்றும் தப்பக்கூடிய வாய்ப்பு உண்டென்று ஓரளவு நிச்சயத்தோடு நம்பும்வரை, பயனுடையனவாகா அவன் கொலை செய்வானுனல் பிடிபடாமலிருத்தல் கூடும்; பிடிபட்டால் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்படாம லிருத்தல் கூடும்; அவ்வாறு தீர்ப்பளித்தாலும் அவன் இன்னமும் மன்னிப் பெறலாம். ஆதலால் தண்டனையின் கடுமையை விடத் தண்டனையின் நிச்சயமே உண்மையில் தடுக்கின்றது. பொலிசுப்படையின் திறமை அதிகரிக்குமாயின், அது, ஓய்வின்றித் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவோனைக் காட்டிலும் கொலையைத் தடுக்கப் பெரிதும் உதவும்'' (1958 ஆம் யூலை மாதத் 'கிறித்தவச் செய்திக் கடிதம்' என்னும் பத்திரிகையில் வெளியான 'மரண தண்டனை' என்னும் கட்டுரை.

(5) அன்சாடு (Hansard)—13-3-1898. ப. 1238.

(6) அறிக்கையின் 64 ஆம் பந்தி.

(7) அறிக்கையின் 65 ஆம் பந்தி.

(8) அறிக்கையின் 68 ஆம் பந்தி,

(9) சட்ட நடவடிக்கை சான்று ஆகியவற்றின் குறிப்புகள். இல, 17 (1954) பக. 728–729.

(10) குறிப்பிட்ட குழுவின் முன்னர் கலாநிதி செலின் அவர்கள் அளித்த சாட்சியத்திற் கூறியதாவது (குறிப்புகள் பக். 680); ''புள்ளி விவரங்களைக் கொண்டு ஒருவர் கூறக்கூடிய வரையில், மரண தண்டனையை ஓர் அரசு கைக் கொண்டிருந்தாலென்ன, ஒழித்து விட்டாலென்ன, அதனுல் எவ்வித வேறுபாடும் உண்டாவதில்லை என்றே கூறலாம். ஆட்கொலை வீதத்துக்கும் அதற்கும் தொடர்புமில்லை. நான் கண்டவகையில், அவ்வவ்விடத்துச் சூழ் நிலைகள், குடிமக்களின் தன்மை, காலவியல்பால் மக்களியல்பில் உண்டாகும் மாற்றங்கள் ஆகியவற்றோடும் பொதுவான பிற சமூக நிலைமைகளோடுமே ஆட்கொலை வீதம் தொடர்புடையதாயிருக்கின்றது; இவற்றிற் சில சூழ் நிலைகள் ஆட்கொலை வீதம் அதிகரிப்பதற்கு அனுகூலமாயுள்ளன; பின்பு அவை மாறினுல், ஆட்கொலை வீதம் குறைவதற்கு அனுகூலமாயமைகின்றன.''



(11) குறித்த குழுவின் முன்னர்க் கலாநிதி செலின் அவர்கள் அளித்த சாட்சியத்திற் கூறியதாவது (பக்கம் 688); ''புள்ளிவிவரங்கள் மரண தண்டனையை ஆதரிப்பவர் பக்கத்தையோ எதிர்ப்பவர் பக்கத்தையோ நிறுவவில்லை யென நியூசிலாந்து நாட்டு நீதியமைச்சர் கூறியுள்ளார். அஃது உண்மையே; ஏனெனில், புள்ளிவிவரங்கள் மட்டுமே இந்த ஆராய்ச்சியில் இடம் பெறுவனவல்லவாதலின் என்க. ஆயின் மரண தண்டனை தடுப்புவிளைவுடையதாய்க் கொலையைக் குறைக்குமா, குறைக்காதா என்பதையே புள்ளிவிவரங்கள் நிறுவக் கூடும்; அவை, மரண தண்டனை கொலையைக் குறைக்கவல்லதன்று என்பதையே நிறுவு கின்றனவென நான் எண்ணுகிறேன். ஒரு சமுதாயத்திற் கொலை நிகழ்வதற்கும், அன்றி நிகழாமைக்கும் மரண தண்டனைக்கும் ஏதாவது தொடர்புண்டோ வெனக் கண்டு பிடித்தல் இயலாதென்றும் எண்ணுகிறேன். கொலை நிகழ்வதும் நிகழாமையுமாகிய தோற்றப்பாட்டுக்கு நான் ஏலவே சொன்னவாறு அதிக ஆழமும் முதன்மையும் கொண்ட நிலைமைகளே அடிப்படையாகும்; அவை, குடிமக்களின் தன்மை, பொருளியல் நிலைமைகள், சமூக நிலைமைகள், சமுதாயத்தின் கல்வியறிவு போன்றவையும் இன்னும் பிறபலவுமாம்.''

(12) மரண தண்டனை பற்றிய இலங்கை ஆணைக்குழுவின் அறிக்கையின் 2 ஆம் அத்தியாயத்தைப் பார்க்கலாம். (இவ்வறிக்கை இலங்கை அரசாங்க அச்சகத்தால் 1959 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது)

(18) முற்போந்த 12 ஆம் இலக்கக் குறிப்பைப் பார்க்க.

(14) மேலே 88 முதற் 91 வரையுள்ள பக்கங்களைப் பார்க்க.

(15) கூட்ட நடவடிக்கை சான்று ஆகியவற்றின் குறிப்புகள் இல. 17 பக்கம் 727.

## சட்டக்கலைச் சொற்கள்

உளநோயியல்—psychiatry.

குற்றலியல்—Criminology.

தண்டவியல்—penology.

சர்வதேசத் தண்டனை கழிவிரக்க முறை ஆணைக்குழு—
—International penal & penitentiary Commission.

உடற்றண்டனை—Corporal punishment.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக விஞ்ஞானங்கள் சம்பந்தமான கட்டுரைகளை வரவேற்கிறோம். அவை நல்ல தரமுடையவையாயின் அவற்றைப் பிரசுரிப்போம்.

இச்சஞ்சிகை சம்பந்தமான சகல தொடர்புகளையும், கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்பவும்.

A. T. BENEDICT
Marrs Hall.
University of Ceylon
Peradeniya.

# நன்றியுரை.

இந்தச் சஞ்சிகையை வெளியிடும் முயற்சியில் எம்மை ஊக்குவித்து, உற்ற துணையாக நின்ற பெரியோருக்கும் நண்பர்களுக்கும் நன்றி செலுத்துவது எமது கடமையாகும்.

இவ்விதழைச் சிறப்பிக்கும் கட்டுரைகளை எழுதித் தந்த அறிஞர்களுக்கும், நல்லாசிகள் வழங்கிய பெரியோர்களுக்கும், தமிழ் வாசகர்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். எமக்குப் பல்வகையிலும் உதவிபுரிந்த கலாநிதி சு. வித்தியானந்தனுக்கும், சட்டத்துறை விரிவுரையாளர் முருகேசன் பிள்ளை அவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றி உரியதாகுக.

பேராசிரியர் த. நடராஜா எழுதிய மரணதண்டனையைப் பற்றிய கட்டுரையை மொழிபெயர்க்கும் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செய்து முடித்த இலங்கை அரசகரும மொழித் திணைக் களத்தைச் சேர்ந்த திருவாளர் செ. வேலாயுத பிள்ளைக்கும், திருவாட்டி மகேசுவரி பால கிருஷ்ணனிற்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். அத்தோடு, தாம் தொகுத்த கல்வி நூற் கலைச் சொற்றொகுதியை எமக்கு அன்போடு அனுப்பிவைத்த நவாலியூர் சோ. நடராசன் அவர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

இவ்விதழை உருவாக்கும் பணியில் எமக்குத் துணை புரிந்து எத்தகைய பொறுப்புக்களையும் மறுக்காது ஏற்றுச் செய்த திருவாளர்கள் முகமது அமீர், எஸ். ஈஸ்வரதாசன், த. மாணிக்கவாசகர், என். நவரத்தினராஜா, கே. குணபாலசிங்கம், ந. குமாரதாசன் ஆகியோருக்கும். செல்விகள் திலகம் பொன்னம்பலம், சேதாம்பிகை வல்லிபுரம் ஆகியோருக்கும், சிறப்பாகத் திருவாளர் கே. இந்திரபாலாவுக்கும் இச்சஞ்சிகையின் வெற்றியிற் பெரும் பங்குண்டு.

தட்டச்சுப்பொறியில் அச்சடிக்கும் பொறுப்புகளைச் சலிக்காது செய்து தந்த. அரசகரும மொழித் திணைக்களத்தைச் சேர்ந்த, திருவாளர் மயில்வாகனன், இலங்கைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திருவாளர்கள் செல்லத்துரை, இரத்தினசிங்கம் ஆகியோர்களது சேவைகள் மறத்தற் பாலதன்று.

எமக்கு விளம்பரங்கள் தந்துதவிய வியாபார வள்ளள்களும், அவற்றைச் சேகரிப்பதிலுதவிய திருவாளர்கள் பரூக் சலீம், எஸ். சிவலிங்கம், எம். சண்முகம் ஆகியோரும் எம் நன்றிக்கு உரியவர்கள்.

இச் சஞ்சிகையை, மிகக் குறுகிய கால எல்லைக்குள் சீரிய முறையில் அச்சேற்றித்தந்த ஆரிய அச்சகத்தினரையும், அங்கு பணியாற்றும் திரு. ஆர். விஸ்வநாதனையும் பாராட்டுகின்றோம்.

இறுதியாக, இச்சஞ்சிகையிற் "குணம் நாடிக் குற்றமும் நாடி, அவற்றுள் மிகை நாடி மிக்க கொள்ளும்" வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் எமதுள்ளமார்ந்த நன்றி கூறி, அவர்களது அன்பும் ஆதரவும், நீடித்த ஒத்துழைப்பும் என்றும் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் விடைபெறுகிறோம். வணக்கம்.

**ஆசிரியர் குழுவினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CONCRETE

* SPIRAL STAIR CASES
* CULVERT PIPES
* SEPTIC TANKS
* FENCE POSTS
* WELL RINGS
* ETC.

## TERRAZZO

* DRAINING BOARDS
* GARDEN SEATS
* FLOOR TILES
* SHELVINGS
* TABLE TOPS
* ETC.

## IRON

HAND RAILINGS, GRILLS, GATES & COLLAPSIBLE GATES.

# FAROOK CONCRETE WORKS

DIAL: 78147. 289, DRIEBERGS AVENUE, MARADANA

172, KANATTE ROAD, BORELLA DIAL: 91599

The Popular Shop For Textiles Trimmings and Fancy Goods.

*Always insist on*

# ACTEX

## GARMENTS

OUR GENTS TAILORING A SPECIALITY.

# Abdul Caders

50, First Cross Street, COLOMBO.

27, Trincomalie Street, KANDY

## AN ASBESTOS ROOF

*is cheaper, saves timber, saves labour, lasts a life time*

*use*

# ELEPHANT

BRAND

Asbestos Cement Products.

*Manufactured at Ratmalana by:*

## Asbestos Cement Industries Limited

175, ARMOUR STREET, COLOMBO 12

## WE SOLICIT YOUR INQUIRIES FOR

- PLANTATION TOOLS
- BUILDING MATERIALS
- SANITARY FIXTURES
- WATER SERVICE MATERIALS
- PAINTS & DISTEMPER
- ELECTRICAL ACCESSORIES
- GENERAL HARDWARE

# Estate Supplies Corporation Ltd.

Reliable House for Hardware in Up-Country

*Phone:* 448 KANDY *Grams:* 'ESCO'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## WHAT IS METALOCK ?

*AN INTERNATIONALLY FAMED PROCESS OF A PRECISE ENGINEERING METHOD OF COLD REPAIRS TO CRACKED, FRACTURED OR WEAKENED MACHINE PARTS OR PRESSURE VESSELS, OF CAST OR FORGED METALS.*

## WHO DOES THIS IN CEYLON ?

**BONARS (Ceylon) LTD.**

15, MORGAN ROAD, SLAVE ISLAND.

## SILVERDALE

FOR

## A DAINTY MEAL

*AT VERY MODERATE COST*

*IN COOL AND CLEAN SURROUNDINGS.*

*Grams:* CITYDALE **HOTEL SILVERDALE** *Phone* 298

CATERERS AND ICE CREAM MANUFACTURERS.

KANDY


# அடுத்த இதழில் ...

**வரலாறு —**

வரலாறு என்ருல் என்ன ?
—கலாநிதி (திருவாட்டி) சிரிமா விக்கிரமசிங்கா,
M.A. Ph. D. (Lond.)
இலங்கைப் பல்கலைக் கழக வரலாற்று விரிவுரையாளர்.

**புவியியல்.**

(1) வளிமண்டபப் பொதுச் சுற்ருேட்டம் - புதிய கொள்கை
கலாநிதி ஜி. ஜி. ஆர். தம்பையாப்பிள்ளை.
B.A. (Cey.), M.A. (Calif.), Ph D. (Cantab), F.R. Met. S
இலங்கைப் பல்கலைக் கழகப் புவியியல் விரிவுரையாளர்

(2) இலங்கையின் அமைப்புப் புவி வரலாறும்,
சோ. செல்வநாயகம் அவர்கள் B.A (Hons.)
இலங்கைப் பல்கலைக் கழகப் புவியியல் விரிவுரையாளர்.

**பொருளியல்.**

(1) இலங்கையில் வங்கிகள் தேசியமயமாக்கப்படக் கூடாது.
(இம்முறை வெளியாகும் கட்டுரைக்குப் பதில்)
சி. லோகநாதன் அவர்கள்.
இலங்கை வங்கியின் பிரதம அதிகாரி.

(2) இலங்கையின் தற்காலப் பொருளியல் வரலாற்றிற்கோர் அறிமுகம்.
கலாநிதி ஐ. எச். வன்டன்டிரிசன், B.A. (Cey.) Ph.D. (Lond.)
இலங்கைப் பல்கலைக் கழகப் பொருளியல் விரிவுரையாளர்,

**அரசியல்.**

(1) அரசாங்க சேவையாளர்களும் அமைச்சர்களும்.
கலாநிதி ஏ. ஜெ. வில்சன், B.A (Ceylon) Ph,D. (Lond.)
இலங்கைப் பல்கலைக் கழக அரசியல் விரிவுரையாளர்.

(2) அத்தோடு, இலங்கைப் பல்கலைக் கழக அரசியல் விரிவுரையாளர் எம். எவ். ஜயசிங்கா அவர்களின் கட்டுரையும் வெளிவரும்.

**சமூகவியல்,**

கலாச்சாரம் என்ருல் என்ன ?
கே. ஏ. டி. பெரேரா அவர்கள் B A. (Ceylon)
இலங்கைப் பல்கலைக் கழகச் சமூகவியல் விரிவுரையாளர்.

மற்றும் பல.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாஸ் லிமிடெட் ஸ்தாபனத்தார்
# திரையிடவிருக்கும்
# திரைச்சித்திரங்களில் சில.

●

*** ராஜா தேசிங்கு**
எம். ஜீ. ராமச்சந்திரன்
பி. பானுமதி

*** ராணி சம்யுக்தா**
எம். ஜி. ராமச்சந்திரன்
பத்மினி

*** மரகதம்**
சிவாஜி கணேசன்
பத்மினி

*** புனர் ஜன்மம்**
சிவாஜி கணேசன்
பத்மினி

*** மகனே கேள்**
எஸ். எஸ். ராஜேந்திரன்
பத்மினி பிரியதர்சினி

*** தலை கொடுத்தான் தம்பி**
எஸ். எஸ். ராஜேந்திரன்
மாலினி

*** பொன் விளையும் பூமி**
ஜெமினி கணசேன்
பத்மினி

*** மீண்ட சுவர்க்கம்**
ஜெமினி கணேசன்
பத்மினி

*** எங்கள் குல காதலி**
பாலாஜி
பண்டரிபாய்

*** வண்ணக் கிளி**
பிரேம் நஸீர்
மைனாவதி

*** பாகப் பிரிவினை**
எம். ஆர். ராதா
பி. சரோஜா தேவி

*** ஜீவ பூமி**
எம். ஆர். ராதா
பி. சரோஜா தேவி

*** இருமனம் கலந்தால் திருமணம்**
பிரேம் நஸீர் — எம். என். ராஜம்.

இச்சஞ்சிகை, பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அ. த. பெனடிக்ற் அவர்களால்,
கண்டி காசல் வீதியிலுள்ள ஆரிய அச்சகத்தில் அச்சேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org